Volume-14
Issue-2

# வைகறை வெளிச்சம்

ஆசிரியர் மு. குலாம் முஹம்மது

பிப்ரவரி-2021 (ஜமாதுல் ஆகிர்-1442)

விலை ரூ. 20 /-




## காஷ்மீரில் தொடரும் போலி என்கவுண்டர்கள்

## 'லவ்' ஜிஹாத் எனும் மாயை

## அமெரிக்க முஸ்லிம் பெண்களின் சாதனை!



இஸ்லாமியச் சிந்தனையாளர்

## டாக்டர் முஹம்மத் ரஃபஅத்

بسم الله الرحمن الرحيم

“மனிதர்களே! நிச்சயமாக நாம் உங்களை ஓர் ஆண், ஒரு பெண்ணிலிருந்தே படைத்தோம்; நீங்கள் ஒருவரை ஒருவர் அறிந்து கொள்ளும் பொருட்டு. பின்னர், உங்களைக் கிளைகளாகவும், கோத்திரங்களாகவும் ஆக்கினோம்; (ஆகவே) உங்களில் எவர் மிகவும் பயபக்தியுடையவராக இருக்கின்றாரோ, அவர்தாம் அல்லாஹ்விடத்தில், நிச்சயமாக மிக்க கண்ணியமானவர். நிச்சயமாக அல்லாஹ் நன்கறிபவன், (யாவற்றையும் சூழ்ந்து) தெரிந்தவன்.

(அல்குர்ஆன் 49:13)”


காஷ்மீரில் தொடரும் போலி என்கவுண்டர்கள் - 4

‘வல்’ ஜிகாத் எனும் மாயை - 8

பிப்ரவரி – மால்கம் X மாதம் - 12

மகளிர் மன்றம் - 14

அமெரிக்க முஸ்லிம் பெண்களின் சாதனை - 16

சிலுவைப்போர்கள் 2.0 - 18

சூரியன் – சந்திரன் – வீனஸ் - 21

கர்கரே கொலையில் புதிய திருப்பம் - 25

குர்ஆனின் வசன அமைப்புகள் - 28

மருத்துவம் - 32

உச்ச நீதிமன்றத்தின் தாழ்ச்சியும் வீழ்ச்சியும் – 4
கோவிட்-19 ம் உச்ச நீதிமன்றமும், பாகம்-2 - 34

மாநில ஆட்சியாளரும், குர்ஆனின்
முதல் அத்தியாயம் அல் பாத்தியாவும் - 42

அரசியலில் தூய்மையான
மர்ஹூம் இஸ்மாயில் சாஹிப் - 47

இமாதுத்தீன் ஸங்கி (ரஹ்), நூருத்தீன் ஸங்கி (ரஹ்),
சுல்தான் ஸலாஹுத்தீன் அய்யூபி (ரஹ்) - 49

தலையங்கம் - 54

நாகர்கோவில் வழக்கறிஞர் Dr. பெல்மாண்ட் சுவாமி S.
அவர்களின் மறைவு - 56

இஸ்லாமியச் சிந்தனையாளர்
டாக்டர் முஹம்மத் ரஃபஅத் - 58



பிப்ரவரி-2021

# வைகறை வெளிச்சம்

ஜமாதுல் ஆகிர்-1442

ஆசிரியர்

மு. குலாம் முஹம்மது, M.A.,
Journalism & Mass Communication

துணை ஆசிரியர்

கே.எம். இலியாஸ் ரியாஜி, M.A.,



All disputes arising out of any publication in this monthly will come under the jurisdiction of Chennai courts.



**கொள்கை வழியில் :**
செய்தி மடல், விடியல் வெள்ளி, ஆகியவற்றின் தொடர்ச்சி

http:/www.facebook.com/vaigarivelicham

தனி இதழ் : ரூ. 20 /-
ஆண்டுச் சந்தா
உள் நாடு : ரூ. 240 /-
வெளி நாடு : ரூ. 3000 /-
பணவிடை மூலம் சந்தா செலுத்துவோர்
**DARUL ISLAM FOUNDATION TRUST**
என்ற பெயரிலேயே அனுப்ப வேண்டுகிறோம்.

விளம்பரங்களுக்கு 81481 29887



**VAIGARAI VELICHAM**
52/1, Mannady Street, Room No. 7, Mannady,
Chennai - 600 001. Tel : 81481 29887
Email : darultrust@yahoo.com
Web : www.darulislam.in



# காஷ்மீரில் தொடரும் போலி என்கவுண்டர்கள்



காஷ்மீரில் மூன்று இளைஞர்கள் 20 லட்சம் ரூபாய் பரிசுத் தொகைக்காக தீவிரவாதிகளாக சித்தரிக்கப்பட்டு இராணுவ மேஜர் ஒருவர் தலைமையில் சுட்டுக் கொல்லப்பட்டதாக ஜம்மு காஷ்மீர் காவல்துறையே குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்திருக்கிறார்கள்.

காஷ்மீரில் போலி என்கவுண்டர்கள் என்பது இந்தியா சுதந்திரம் பெற்ற காலத்தில் இருந்தே நடந்து வரக்கூடிய ஒன்று. ஆனால், காஷ்மீரின் சிறப்பு பிரிவு ரத்து செய்யப்பட்ட பிறகு காஷ்மீர் மக்களின் மீது கட்டவிழ்த்து விடப்பட்டும் வன்முறை எப்போதும் இல்லாத அளவுக்கு அதிகரித்திருக்கிறது. எதையும் செய்யலாம் மத்திய அரசு துணை நிற்கிறது என்ற மத்திய அரசின் நிலைப்பாடு காஷ்மீர் விவகாரத்தில் இராணுவத்தை தவறாக வழிநடத்துகிறது.

காஷ்மீரின் இந்த சூழலை வெகுச் சாதாரணமாக ஒற்றை சம்பவத்தின் மூலம் புரிந்திட முடியாது. புரிந்திடவும் கூடாது.

இந்தியாவை பொறுத்தவரை காஷ்மீர் ஒரு பெரிய அரசியல் ஆயுதம். காஷ்மீரில் பாகிஸ்தானை பூச்சாண்டியாக காட்டி வாக்கு அரசியல் இந்தியா முழுக்க நடத்தப்படும். இதனை நேரடியாக செய்வது பாஜக. மறைமுகமாக செய்து வந்தது காங்கிரஸ்.

இந்தியாவில் காஷ்மீரத்தை தவிர்த்து மற்ற பகுதிகளில் காஷ்மீரை பற்றி மிக மோசமான பிம்பம் தொடர்ச்சியாக கட்டமைக்கப்பட்டு வந்தது. அந்த பிம்பம் இந்தியா முழுக்க இந்து–முஸ்லிம் பிளவை உருவாக்க பேருதவி செய்தது.

உதாரணத்திற்கு இதற்கு அடித்தளமிட்டது காங்கிரஸ். அதனை பயன்படுத்தி இந்து முஸ்லிம் பிளவை உருவாக்கியது பாஜக.

காஷ்மீரிகள் மீதான ஒடுக்குமுறைக்கான அடிப்படை காரணங்களை ஆராயும் போது மட்டும் தான் நாம் யதார்த்த உண்மைகளை அறிந்து கொள்ள முடியும்.

1) காஷ்மீரகத்தின் மீது இந்தியா முழுக்க இருக்கும் பார்வை

2) காஷ்மீரத்தில்இராணுவத்திற்குகொடுக்கப்பட்டிருக்கும் கட்டற்ற உரிமைகளும், சலுகைகளும்.

3) காஷ்மீரில் பணிபுரியும் இராணுவத்தினருக்கு காஷ்மீர் மக்கள் பற்றிய மனநிலை.

இந்த மூன்று அடிப்படை காரணங்கள் தான் காஷ்மீரிகளை தொடர்ச்சியாக ஒடுக்குமுறைக்கு உட்படுத்துவதற்கு காரணமாக இருக்கிறது.

## காஷ்மீர் மீதான இந்திய பார்வை

இந்தியா முழுக்க காஷ்மீர் மக்கள் மீது ஒரு

தீவிரவாத பார்வையே இருக்கிறது. இந்த பார்வை திட்டமிட்டு செயற்கையாக அரசுகளாலும், ஊடகங்களாலும் உருவாக்கப்பட்டது.

காஷ்மீர் மக்கள் மற்ற இந்திய மக்களை விட ஏகபோகமாக சலுகைகளை அனுபவித்து வருகிறார்கள். அப்படி சலுகைகளை அனுபவித்து வந்தும் கூட இந்தியாவிற்கு எதிராகவே இயங்குகிறார்கள் என்ற மனநிலை இந்திய மக்கள் மனதில் வெற்றிகரமாக பதியப்பட்டிருக்கிறது.

காஷ்மீரிகளை விட இதுவரை இந்தியாவின் எந்த பகுதியும் மோசமான ஒடுக்குமுறையை சந்தித்ததில்லை. ஒருமுறை கூட காஷ்மீர்




மக்களின் கோரிக்கையை இந்திய அரசு காது கொடுத்து கேட்டதில்லை.

உலகிலேயே கொரோனா நோய் வருவதற்கு முன்பாகவே லாக்டவுனில் இருந்த ஒரே பகுதி காஷ்மீர் மட்டும் தான். அதுமட்டுமல்ல இரண்டு வருடத்திற்கு மேலாக அந்த மக்களுக்கு இன்று வரை 4ஜி இணைய வேகம் தடை செய்யப்பட்டிருக்கிறது. ஆனாலும் அந்த மக்களின் வலியை இந்தியாவின் எந்த ஊடகமும் இந்திய மக்களிடம் கொண்டு சேர்த்ததில்லை.

அதற்கு மாறாக காஷ்மீரில் தீவிரவாதி யென்று சுட்டுக்கொல்லப்படும் செய்தியை இந்தியாவின் மூலை முடுக்கெங்கும் கொண்டு செல்லும் வேலையை தவறாமல் செய்து வருகிறார்கள். அதுவே அது போலி என்கவுண்டர் என்று நிரூபிக்கப்படும் போது அச்செய்திகள் அதே வீரியத்துடன் மக்களை சென்றடைவதில்லை.

இப்படியாக ஊடகங்களின் ஒருதலைப்பட்சமான செய்திகள் இந்திய மக்களிடத்தில் காஷ்மீரிகள் பற்றிய தவறான தோற்றத்தை ஆழமாக விதைத்திருக்கிறது. அதனால் ஒவ்வொரு முறை காஷ்மீரில் பொதுமக்கள் கொல்லப்பட்டால் கூட, அவர்களுக்கு இது தேவை தான் வருத்தப்பட அவசியமில்லை என்ற மனநிலைக்கே இந்திய மக்கள் வருகிறார்கள்.

காஷ்மீரை பயன்படுத்தி இந்தியா முழுக்க முஸ்லிம்களுக்கெதிரான மனநிலையும் அவர்களால் உருவாக்க முடிகிறது. முஸ்லிம்கள் ஒரு பகுதியில் பெரும்பான்மையாக இருந்தார்களானால் காஷ்மீரை போல ஒரு பயங்கரவாத இடமாக தான் மாறும் என்ற கருத்தை திணிக்க நினைக்கிறார்கள். இதன் வெளிப்பாடு தான் காஷ்மீரின் கோரங்களுக்கு எதிரான குரல் தொடர்ச்சியாக இஸ்லாமியர்களிடமிருந்து மட்டுமே வருகிறது.

## காஷ்மீரில் இராணுவத்தினருக்கு கொடுக்கப் பட்டிருக்கும் சலுகைகளும், உரிமைகளும்

இந்தியாவில் பின்பற்றப்படும் சட்ட வழிமுறைகள் பெரும்பாலும் காஷ்மீரில் வேறு மாதிரியாக இருக்கிறது. எப்போது வேண்டுமானாலும் யாரையும் விசாரணைக்காக இழுத்து செல்லலாம். யாரையும் கைது செய்து விசாரிக்கலாம் என்ற உரிமைகள் இராணுவத்திற்கு சாதாரணமாக வழங்கப்பட்டிருக்கிறது.

உதாரணத்திற்கு தமிழகத்தில் ஒருவரை விசாரிக்க காவல்நிலையத்திற்கு அழைக்க வேண்டுமென்றால் முறையாக சம்மன் அனுப்ப வேண்டும். கைது செய்ய வேண்டுமென்றால் உறவினர்களுக்கு தெரிவித்து விட்டு முறையான அனுமதியுடன் கைது செய்ய வேண்டும். கைது செய்து 24 மணி நேரத்திற்குள் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட வேண்டும். ஆனால் இது ஏதும் காஷ்மீரில் நிகழ்வதில்லை.

இத்தனை கட்டமைப்பும் கொண்ட தமிழகத்திலேயே ஜெயராஜ், பென்னிக்ஸ் என்ற இருவர் காவலர்களால் அடித்து கொல்லப்பட்டது நமக்கு தெரியும். இந்த நிலையில் எந்த மேற்பார்வையும் இல்லாமல் ஒருவரை விசாரிக்க அனுமதி தரும் சட்டங்கள் இருந்தால் மனித உரிமை மீறல்கள் நடப்பதை எப்படி தடுக்க முடியும்?

''காஷ்மீரில் இராணுவ அதிகாரிகள் மீது

கடந்த காலத்திலும், தற்போதும் நிகழ்த்திய தவறான நடவடிக்கைகளுக்கு உரிய சட்ட நடவடிக்கைகள் எடுக்காத வரை காஷ்மீரின் வன்முறை சூழல் முடிவடையாது” என்று தெற்காசிய மனித உரிமை கழகத்தின் இயக்குனரான மீனாக்சி காந்தி கூறுகிறார்.



THE ECONOMIC TIMES | News

English Edition • | 12 January, 2021, 08:12 AM IST | E-Paper

Indian Army Captain staged Amshipura encounter for Rs 20 lakh: Police charge sheet

காரணம், இராணுுவ அதிகாரிகள் செய்யும் எந்த தவறுக்குமான தண்டனை அவர்களுக்கு தரப்படுவதில்லை. ஆனால் அதற்கு பகரமாக அவர்களுக்கு பதவி உயர்வுகள் வழங்கப்படுகிறது.

ஜாவித் ஹுசைன் ஷா என்ற வழக்கறிஞர் முதலில் காஷ்மீர் போராளிக்குழுவில் இணைந்து பிறகு மனந்திரும்பி வழக்கறிஞராக பணிபுரிந்து சிறையில் இருந்த பல அப்பாவி காஷ்மீர் இளைஞர்களை விடுவித்தார். ஆனால் அவர் ஒரு நாள் கொல்லப்பட்டார். இந்த கொலையை தீவிரவாதிகள் தான் செய்தனர் என்று காஷ்மீர் காவல்துறை கூறியது. ஆனால், ஷாஹ் கொல்லப்படுவதற்கு முன், “இதற்கு முன்னால் கொல்லப்பட்ட காஷ்மீர் பத்திரிக்கையாளர்கள், பிபிசி பத்திரிக்கையாளர் என பலர் போலீசார் சொன்னது போல தீவிரவாதிகளால் கொல்லப்படவில்லை காவலர்களால் தான் கொல்லப்பட்டார்கள்” என்று கூறியிருந்தார். இதற்காகவே ஷாஹ் கொல்லப்பட்டதாக கூறப்பட்டது. ஆனால் அதை தொடர்ந்து எந்த விசாரணையும் இல்லை.

காஷ்மீரில் இருக்கும் ஒன்றிணைந்த சிவில் சொசைட்டி என்ற அமைப்பு ஆய்வு செய்து ஒரு அறிக்கை வெளியிட்டார்கள். அதில், “காஷ்மீரில் தீவிரவாதிகள் என்று கொல்லப்பட்ட 50 பேர் சாதாரண அப்பாவி பொதுமக்கள் என்று தெரிய வந்தது. அதே போல் 58 போலி என்கவுண்டர் வழக்குகள் நீதிமன்றத்திற்கு சென்றன. அதில் 2ல் மட்டுமே குற்றவாளிகள் தண்டிக்கப்பட்டனர்.” என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

இப்படி அநேக போலி என்கவுண்டர் சம்பவங்கள் இருக்கிறது. 2000ம் ஆண்டு மார்ச் மாதம் காஷ்மீரில்ஐந்து லஷ்கரேதொய்பாதீவிரவாதிகள் என்று மொத்தம் 5 முஸ்லிம் இளைஞர்கள் கொல்லப்பட்டனர். கொல்லப்பட்டவர்களின் உடல்கள் தனித்தனியாக புதைக்கப்பட்டது. ஆனால் அவர்கள் அப்பாவிகள் எங்கள் குழந்தைகள்என போராட்டத்தை தொடர்ந்தனர் இளைஞர்களின் உறவினர்கள். அதன் பிறகு DNA சோதனை செய்யப்பட்டது. அதில் காஷ்மீர் மக்களுக்கு எதிராகவே முடிவு வந்தது. அதன்பிறகு DNA சோதனையில் செய்யப்பட்ட குளறுபடிகள் வெளிவர DNA சோதனை முறையாக நடந்து ஐந்து இளைஞர்களும் அப்பாவிகள் என்று தெரிய வந்தது. 2012ல் விசாரணை செய்த சிபிஐ போலி என்கவுண்டர் என்பதை உறுதி செய்தது.

இது உதாரணத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட ஒரு சம்பவம் தான். என்கவுண்டர் செய்யப்பட்டு புதைத்து விடும் உடலுக்கு சொந்தக்காரரர் யார் என்பதை பல நேரங்களில் சொல்வது இல்லை. குடும்பத்தாருக்கு தகவல் வந்து அவர்களின் நீண்ட போராட்டத்திற்கு பின்பே DNA சோதனை எடுக்கப்பட்டு அப்பாவிகள் என்று தெரிய வரும். தற்போது 20 லட்ச பரிசுத்தொகைக்காக நடத்தப்பட்ட போலி என்கவுண்டரும் இப்படியாக வெளிவந்தது தான்.

காஷ்மீரில் இதுவரை 8000க்கும் மேற்பட்டோர் காணாமல் போயிருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் இந்த நிலை தான் ஏற்பட்டிருக்கும் என்று காஷ்மீரின் சமூக அமைப்புகள் எண்ணுவதாக ஃபிரண்ட்லைன் இதழ் தெரிவிக்கிறது. (Frontline 09.11.2016)

இராணுவத்தினரின் இத்தகைய நடவடிக்கைகளுக்கு தூண்டுவதாக அமைவது அவர்களுக்கு இருக்கும் கட்டற்ற அதிகாரம். அதற்கு பெயர் "AFSPA" (ஆயுதப்படைகளுக்கான சிறப்புச் சட்டம்). இதன் அடிப்படையில் யாரையும் எந்த முன் அனுமதியின்றி கைது செய்யலாம். எந்த வீட்டையும் சோதனை செய்யலாம். இதுபோன்ற அதிகாரங்கள் இராணுவத்தினருக்கு கொடுக்கப்பட்டுள்ளது.

*2017*ல் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தில் "AFSPA" மூலம் மனித உரிமை மீறல்கள் எங்கு அதிகம் நடக்கிறது என்று கேட்ட போது மத்திய அரசு காஷ்மீரில் தான் AFSPA சட்டத்தின் கீழ் அதிக மனித உரிமை மீறல்கள் நடக்கிறது என பதில் கொடுத்திருந்தார்கள். (livemint 29.07.2017)

*1990*ல் காஷ்மீரின் குனான் கிராமத்தில் *20* பெண்கள் இராணுவத்தால் பாலியல் வன்புணர்வுக்கு உள்ளாக்கப்பட்டனர். அதன் வேதனையை இன்றும் அவர்கள் அனுபவித்து வருகிறார்கள். அவர்களுக்கான நீதி கிடைக்க வில்லையென ஒவ்வொரு வருடமும் கருப்புக் கொடி ஏந்தி போராடி வருகிறார்கள். (3.12.2014 the Hindu)

பரிசு பணத்திற்காகவும், பதவி உயர்வுக்காக வும் காஷ்மீரில் போலி என்கவுண்டர்கள் நடத் தப்படுகிறது. இப்படி *2010*ல் மூன்று காஷ்மீர் இளைஞர்கள் பதவி உயர்வுக்காகவும், பதக்கத் துக்காகவும் போலி என்கவுண்டர் மூலம் கொல் லப்பட்டதாக தெரிய வந்தது. இந்த நிகழ்வுகளின் தொடர்ச்சி தான் தற்போது *20* லட்ச பரிசுத் தொகைக்காக நடத்தப்பட்ட என்கவுண்டர். *(தமிழ் முரசு 07.06.2010)*

இதுபோலான சம்பவங்கள் ஏராளமாக இருக் கிறது. இராணுவ வீரர்கள் செய்யும் தவறான நடவடிக்கைகளுக்கு தக்க நடவடிக்கை எடுக்கா மல் அவர்களை ஊக்குவிக்கும் விதமாக அதிகா ரங்களை அதிகப்படுத்துதல், நடவடிக்கைகளிலி ருந்து விடுவித்தல் போன்றவை காஷ்மீர் மக்கள் மீதான அடக்குமுறைக்கு முக்கியமான காரண மாக இருக்கிறது.

## காஷ்மீர் மக்கள் மீதான இராணுவ அதிகாரிகளின் மனநிலை

காஷ்மீர் மக்களின் மீது வன்முறை நிகழ்த்துவது தவறில்லை என்ற பொது மனநிலை காஷ்மீரில் பணியாற்றும் இராணுவ வீரர்களின் மனநிலையாக இருக்கிறது, அது பல்வேறு சமயங்களில் வெளிவந்திருக்கிறது.

காஷ்மீரில் மத்திய அரசுக்கு எதிராக நடந்த போராட்டம் ஒன்றில் காஷ்மீர் இராணுவ வீரர்கள் காஷ்மீர் இளைஞர் ஒருவரை ஜீப்பின் முன்னால் கட்டி வைத்து ஊர்வலமாக கொண்டு சென்றனர். இந்த வீடியோ சமூக வலைத்தளங் களில் பரவிய போது அதனை சாதாரணமாக எடுத்துக்கொண்டு இதில் மனித உரிமை மீற லெல்லாம் இல்லை. இராணுவத்தினரின் பாது காப்புக்காக செய்யப்பட்டது என்று பதிலளித்த னர். இந்த செயலை செய்த மேஜர் கோகய் அவர் களுக்கு இந்த செயலுக்காக விருதும் வழங்கப் பட்டது. (15.04.2017 Times Of India)

ஒரு அப்பாவி இளைஞரை மனித கேடயமாக ஜீப்பின் முன்னால் கட்டி வைத்து ஊர்வலமாக சென்றதை மனித உரிமை மீறலாக கருதாமல் பாராட்டி விருது வழங்கி கவுரவப்படுத்தும் மனநிலையே காஷ்மீர் இராணுவ வீரர்களுக்கு இருக்கிறது.

காஷ்மீரின் முன்னாள் உயர் இராணுவ அதிகாரியாக இருந்தவர் பல கோடி மக்கள் பார்வையில் ஒளிபரப்பாகி கொண்டிருக்கும் விவாதத்தில் காஷ்மீரில் நிகழும் பலாத்காரங்கள் அது இராணுவ வீரர்களின் மீது நிகழ்த்தப்படும் தாக்குதலுக்கு பழிவாங்கும் ஒன்றாகவே நடத்தப் படுகிறது என்று பேசினார். இராணுவ வீரரால் ஒரு காஷ்மீர் பெண் பாலியல் வன்புணர்வுக்கு உள்ளாவது காஷ்மீரில் இராணுவ வீரர்களுக் கெதிராக நடக்கும் தாக்குதலுக்கான எதிர் விளைவு என்றார். ஆனால் கடைசி வரை இந்த கருத்தை பின்வாங்கவில்லை.

காஷ்மீர் உயர் பாதுகாப்பு அதிகாரிகள் தங்களது சமூக வலைத்தளங்களில் காஷ்மீர் மக்களையும் அதனுடன் தொடர்புபடுத்தி இஸ்லாமிய மதத்தையும் தரக்குறைவாக விமர் சிக்கும் முறையும் தொடர்ந்து வருகிறது.

இத்தகைய சம்பவங்கள் முழுக்க காஷ்மீரிகள் பற்றியான இராணுவத்திருக்கு இருக்கும் மன நிலையை படம்பிடித்து காட்டுகிறது.

இந்த அடிப்படை காரணங்களை சரி செய்யா மல் காஷ்மீரை அமைதி நிலைக்கு திருப்ப முடி யாது. தொடர்ச்சியாக காஷ்மீர் மக்கள் மீதான அத்துமீறல்கள் தொடர்ந்து கொண்டே இருக்கும். இதன் விளைவு காஷ்மீர் மக்களையும் தூண்டி விடுவதாக அமைந்து நம் இராணுவ வீரர்களுக்கு தொடர் நெருக்கடிகளை தரும் சூழல் உருவாகி கொண்டே இருக்கும்.

– அபூ சித்திக்




# 'லவ்' ஜிஹாத் எனும் மாயை

முஸ்லிம் ஆண்களுக்கு வேறு வேலையே இல்லை. அவர்கள் இந்து பெண்களை காதலிக்கிறார்கள். பின்பு இஸ்லாம் மதத்திற்கு மாறினால்தான் திருமணம் செய்வேன் என்று கட்டாயப்படுத்துகிறார்கள். இந்த நிலை தொடர்ந்தால் இந்துக்கள் சிறுபான்மையினராக இந்த நாட்டில் ஆகிவிடுவார்கள். இதனை தடுத்திட வேண்டும். அப்பாவி இந்து பெண்களை காத்திட வேண்டும். இப்படி இடைவிடாமல் பிரச்சாரம் செய்துவந்தன இந்துத்துவ கும்பல்கள். ஒரு இந்து பெண் முஸ்லிம் ஆணுடன் சேர்ந்து செல்வதை, பழகுவதை இந்த கும்பல்கள் பார்த்துவிட்டால் அவர்களை அவமானப்படுத்தி அடித்து விடுவார்கள்.

இதைப் போன்ற சம்பவங்கள் சில இடங்களில் நடந்ததுண்டு. இந்த கும்பல்களுக்கு உத்வேகம் கொடுக்கும் வண்ணம் அவசர சட்டத்தை இயற்றி இருக்கிறார்கள்.

உத்தரபிரதேசத்தில் காட்டு தர்பார் நடத்தி வரும் யோகி ஆதித்யநாத் அவசர சட்டத்தை உருவாக்க அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். அதன்படி மாநில சட்ட கமிஷன் புதிய மசோதா தயாரித்து அரசுக்கு அனுப்பியது. உத்தரப் பிரதேச சட்ட விரோத மதமாற்ற தடுப்பு அவசர சட்டம் 2020 என்கிற இந்த சட்டத்துக்கு அம் மாநில ஆளுநர் அனுமதி கொடுத்துள்ளார்.

இச்சட்டத்தின்படி திருமணத்திற்காக கட்டாய மதமாற்றம் செய்பவர்களுக்கு 10 ஆண்டு சிறை தண்டனையும் அபராதமும் விதிக்கப்படும். திருமணத்திற்காகவே மட்டும் மதம் மாறியிருந்தால் அத்திருமணம் இச்சட்டத்தின் படி செல்லாதது ஆகிவிடும்.

வரவிருக்கும் சட்டப்பேரவை மழைக்கால கூட்டத்தொடரில் இம் மசோதா தாக்கல் செய்யப்பட்டு முறைப்படி சட்டம் ஆக்கப்படும். உத்தரபிரதேசத்தை தொடர்ந்து பாஜக ஆளும் மாநிலங்களான அரியானா, மத்திய பிரதேஷ், அசாம், கர்நாடகாவிலும் இதைப்போன்ற சட்டத்தை கொண்டுவர திட்டமிடப்பட்டுள்ளது.

தற்போது மதச் சுதந்திர சட்டம் அல்லது மத மாற்றத்திற்கு எதிரான சட்டம் 8 மாநிலங்களில் செயலில் இருக்கிறது. பெண்கள் தங்களுடைய துணையை தேர்ந்தெடுப்பதற்கோ அல்லது தாங்கள் விரும்புகின்ற மதத்தை பின்பற்றுவதற்கோ எந்தவித சுதந்திரமும் அற்றவர்கள் என்று நினைத்து கொண்டுதான் இந்த லவ் ஜிஹாத் சட்டத்திற்கு லாபி பாடுகின்றனர். அரசியலமைப்புச் சட்டம் வழங்கியிருக்கும் உரிமையை கூட இவர்கள் கணக்கில் எடுத்துக்

கொள்ளவில்லை.

## நீதிமன்றத்தின் இரண்டு தீர்ப்புகள்

காதல் திருமணம் செய்த தம்பதி ஒன்று தங்களுக்கு பாதுகாப்பு வழங்கக்கோரி அலகாபாத் உயர் நீதிமன்றத்தில் மனு ஒன்றை தாக்கல் செய்தது.

மனுவை தாக்கல் செய்த பெண் ஒரு முஸ்லிம். இந்து ஆணுடன் திருமணம் செய்து கொள்வதற்காக திருமணத்திற்கு ஒரு மாதத்துக்கு முன் இந்து மதத்திற்கு அவர் மாறியுள்ளார்.

மனுதாரர் 29/6/2020 அன்று மதம் மாறியுள்ளார். 31/7/2020 அன்று திருமணம் நடந்துள்ளது. இந்த மத மாற்றம் திருமணத்துக்காக மட்டுமே நடந்துள்ளது. இது ஏற்கக் கூடியதல்ல என நீதிமன்றம் உத்தரவிட்டதோடு தம்பதியரின் மனுவையும் தள்ளுபடி செய்தது. இந்தத் தீர்ப்பு 2020 அக்டோபர் 21 அன்று வழங்கப்பட்டது.

கடந்த வருடம் (2019) இஸ்லாம் மதத்திற்கு மாறி சலாமத் அன்சாரியை திருமணம் செய்து கொண்டார் பிரியங்கா கர்வார். தன் மகளை கடத்தி சென்று கட்டாய மதமாற்றம் செய்துள்ளதாக அந்தப் பெண்ணின் தந்தை காவல்துறையில் புகார் கொடுத்திருந்தார். அதனடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது. இதனை ரத்து செய்யக்கோரி சலாமத் அன்சாரி சார்பில் அலகாபாத் உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. தங்களுக்கு விருப்பமானவர்கள் உடன் வாழ்வதற்கு அரசியல் சாசனத்தில் உரிமை வழங்கப்பட்டுள்ளது. இந்த விவகாரத்தில் தலையிடுவது அவர்களது தனிப்பட்ட சுதந்திரத்தில் தலையிடுவது ஆகும் என்று கூறி எஃப் ஐ ஆர் ஐ ரத்து செய்தது நீதிமன்றம். இந்தத் தீர்ப்பு 2020 நவம்பர் 11 அன்று வழங்கப்பட்டது.

மேலும் இந்த நீதிமன்றம் திருமணம் செய்வதற்காக மட்டுமே மதம் மாறுவதை ஏற்க முடியாது என்று இதற்கு முன்னர் தீர்ப்பளித்துள்ளது. அது சட்டத்துக்கு ஏற்புடையது அல்ல என்றும் விளக்கியது நீதிமன்றம்.

முதலில் வழங்கிய தீர்ப்பு தங்களுடைய அஜெண்டா விற்கு சரியாக ஒத்து வரும் என்பதால் மதமாற்றத்தை தடைசெய்யும் மசோதாவை உருவாக்கும் முயற்சியில் இறங்கியது உபி அரசு.


வயது வந்த பெண்களுக்கு தங்களுடைய விருப்பத்தின் அடிப்படையில் திருமணம் செய்து கொள்ளும் உரிமை உண்டு என்று ஹதியா வழக்கு உட்பட இன்னும் பல வழக்குகளில் உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்த பின்னரும் சங்பரிவாரக் கும்பலின் பிரச்சாரம் ஓயவில்லை.

பசு பாதுகாப்பு என்ற பெயரிலும் பெண்ணின் கற்பை பாதுகாக்கிறோம் என்ற பெயரிலும் சிறுபான்மையினர் களை குறி வைக்கின்றனர். கேரளாவில் இதற்காக லவ் ஜிகாத் உதவி மையம் செயல்படுகிறது. உத்தரபிரதேசத்தில் ரோமியோ எதிர்ப்புப்படை செயல்படுகிறது. சிறுபான்மையினர்களை குறிவைத்து இவர்கள் இயங்குகின்றனர்.

இவர்களின் அடாவடி செயலுக்கு ஒரு உதாரணத்தைக் கூறலாம். தங்களுடைய இந்து மருமகளுக்கு வளைகாப்பை நடத்துகின்றார் முஸ்லிம் மாமியார் ஒருவர். இப்படி ஒரு விளம்பரத்தை வெளியிட்டது தனிஷ்க் ஜுவல்லரி நிறுவனம். உடனேயே, இந்நிறுவனத்தை புறக்கணிக்க வேண்டும் என்று ஆன்லைனில் பிரச்சாரம் பற்றியது. ஒரு கும்பல் அந்நிறுவனத்தின் கடைக்கு சென்று மிரட்டியது. வேறு வழியில்லாமல் விளம்பரத்தை திரும்பப் பெற்றுக் கொண்டு மன்னிப்பு கோரியது அந்நிறுவனம். கடந்த பத்து வருடத்தில் மட்டும் 170 லவ் ஜிஹாத் சம்பவங்கள் நடந்துள்ளன. 20,000 பெண்கள் லவ் ஜிகாதினால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று விஷ்வ ஹிந்து பரிஷத் அமைப்பின் பொறுப்பாளர் ஒருவர் இச்சர்ச்சை யை சுட்டிக்காட்டி கூறியுள்ளார். இச்செயல்கள் மக்கள் தொகையின் மீது நடத்தப்படும் தாக்குதல் என்று விவரித்துள்ளார் VHP இன் தலைவர் ஒருவர்.

10 ஆண்டுகால மக்கள் தொகை கணக்கெடுப்பு விவரங்கள் முஸ்லிம்கள் எண்ணிக்கையில் அதிகமாகி கொண்டிருக்கிறார்கள் என்ற மாயையை பொய்யாக்கி விடுவதால், லவ் ஜிகாத் என்னும் பூச்சாண்டியை வேண்டுமென்றே கிளப்பி தங்கள் அஜெண்டாவிற்கு வலு சேர்க்கின்றனர். முஸ்லிம் ஆண்களால் எண்ணற்ற இந்து பெண்கள் கடத்தப்பட்டுள்ளனர் அல்லது வசீகரிக்க பட்டுள்ளனர் என்பதற்கு எந்தவித அரசு தரப்பு சான்றுகளும் இல்லை.

## மக்கள் தொகையும் முஸ்லிம்களின் எண்ணிக்கையும்




2001ஆம் ஆண்டு எடுத்த மக்கள் தொகை கணக்கின்படி, நாட்டின் மொத்த மக்கள் தொகையில்

இந்துக்கள்– 80.5%(827 மில்லியன்)

முஸ்லிம்கள் –13.4%(138 மில்லியன்)

கிறிஸ்தவர்கள் – 2.3%(24 மில்லியன்)

சீக்கியர்கள் – 1.9%(19 மில்லியன்)

புத்திஸ்டுகள்– 0.8% (8 மில்லியன்)

ஜெயினர்கள் – 0.4%( 4 மில்லியன்)

2011 ஆம் ஆண்டு எடுத்த கணக்கின்படி,

இந்துக்கள்– 79.8%(966.3 மில்லியன்)

முஸ்லிம்கள் –14.2%(172.2 மில்லியன்)

கிறிஸ்தவர்கள் – 2.3%(27.8 மில்லியன்)

சீக்கியர்கள் – 1.7%(20.8 மில்லியன்)

எல்லா மதத்தவருமே எண்ணிக்கையில் அதி கரித்து இருந்தாலும், சதவிகித அடிப்படையில் இந்துக்கள், கிறிஸ்தவர்கள் விகிதத்தில் மிகச் சிறிய வீழ்ச்சி உள்ளது. ஒரு சதவிகிதத்திற்கும் குறைவாகத்தான் முஸ்லிம்களின் எண்ணிக்கை மொத்த மக்கள் தொகையில் அதிகரித்துள்ளது.

இது பெரிதுபடுத்திக் காட்டப்படுகின்றது. வளர்ச்சி விகிதம் என்ற அடிப்படையில் பார்த் தால் 20 ஆண்டுகளில் (1991–2010) எல்லா மதத் தவரின் வளர்ச்சி விகிதமும் குறைவு தான். முஸ்லிம்களின் எண்ணிக்கை அதிகரித்து இருப் பதற்கு காரணம் பெண்கள், பெண் குழந்தைகள் இவர்களின் வாழும் சூழல்/நிலை அதிகரித்து இருப்பதும், குடிமகன்களாக பதிவு செய்யும் எண்ணிக்கை அதிகரித்தலும் ஆகுமே தவிர சட்ட விரோத ஊடுருவல் என்ற கூப்பாட்டினால் அல்ல.

பெரும்பான்மையாக இந்துக்களே இந்தியா முழுவதும் இருந்த போதிலும் அவர்களின் எண் ணிக்கை குறைந்து விட்டது என்று ஊடகத்தின் உதவியுடன் பிரச்சாரம் செய்யப்படுகிறது.

## முஸ்லிம்களின் பாலின விகிதத்தில் வளர்ச்சி

சமூகத்தில் பெண்களின் நிலை எப்படி உள்ளது என்பதை அறிந்திட உதவுவது பாலின விகிதங்கள். கடந்த 20 ஆண்டுகளில் வயது வந்த பெண்கள், பெண் குழந்தைகள் இவர்களின் நிலை வீழ்ச்சியையே சந்தித்துள்ளது.

ஆனால் மத வாரியாக எடுத்துக் கொண் டால், எல்லோரையும் விட, இந்துக்களிடம் இந்த பாலின வீழ்ச்சி அதிகமாக உள்ளது. சிறுபான்மையினர்களை எடுத்துக்கொண்டால், 2001 ஆம் ஆண்டில், குழந்தை பாலின விகிதத் தில் கிறிஸ்தவர்களின் நிலை நன்றாக உள்ளது. அதாவது 1000 ஆண்களுக்கு 964 பெண்கள். அதற்கு அடுத்தபடியாக முஸ்லிம்கள் (பெண்கள் 950), புத்திஸ்டுகள்(பெண்கள் 942), ஜெயினர்கள் (பெண்கள் 870), சீக்கியர்கள் ( பெண்கள் 786),. இந்துக்கள் (பெண்கள் 925). ஒட்டு மொத்த இந்தியாவில் இதன் சராசரி 927.

வயது வந்தவர்களின் பாலின விகிதத்தை எடுத்துக் கொண்டால், இந்து பெண்களின் எண் ணிக்கை 931. இது ஒட்டுமொத்த இந்தியாவின் சராசரியான 933 ஐ விட குறைவு.

*கிறிஸ்தவர்களுக்கு **1009**, புத்திஸ்டுகளுக்கு **953**, ஜெயினர்களுக்கு **940**, முஸ்லிம்களுக்கு **936**, சீக்கியர்களுக்கு **893**. ஆண் குழந்தைகளை விரும்புவது தான் பாலின விகித ஏற்றத் தாழ்வுக்கு காரணம் என்கின்றனர் சமூக அறிவியலாளர்கள். சிறுபான்மை யினர்களில் சீக்கியர்களை தவிர, மற்ற மதத்தவர்களில் பெண்களின் வாழும் சூழல் / நிலை நன்றாக உள்ளது.*

*கேரளாவின் **2001** மக்கள் தொகையை எடுத்துக் கொள்வோம். இங்கே **54.72** சதவிகித இந்துக்கள் வாழ்கின்றனர். இங்கே பாலின விகிதம் அதிகம். அதாவது பெண்கள் **1058** பேர். இந்துக்கள் பெரும்பான்மையாக வாழும் அரியா னாவில் பெண் பாலின விகிதம் **860**. இந்துக்கள் பெரும்பான்மையாக வாழும் மாநிலங்களில் பெண் குழந்தைகளின் பாலின விகிதம் குறிப் பிடத்தக்க அளவில் குறைந்துள்ளது. பிறப்பிலும் அதற்கு அடுத்து வரும் வாழ்க்கையிலும் பெண் குழந்தைகளிடத்தில் பாரபட்சம் காட்டப்படு கிறது என்பதைத் தான் இது குறிக்கின்றது.*

# உத்திரப்பிரதேச “லவ்” ஜிஹாத் சட்டம்

இந்தச் சட்டம், இல்லை பிரகடனம். அவசர அவசரமாகக் கொண்டுவரப்பட்டது. அதனால்தான் இதனை மாநில கவர்னர் வழியாக பிரகடனப்படுத்திவிட்டு உடனேயே செயலில் வருகின்றது என அறிவித்தார்கள்.

அதாவது ஓர் அவசரப் பிரகடனம் வழியாக ஒரு குருட்டுச் சட்டத்தை 2020 ஆம் ஆண்டு நவம்பர் 27–ஆம் நாள் பிரகடனப்படுத்தியது உத்திரப்பிரதேச அரசு.

இந்தச் சட்டம் ஏற்கெனவே 8 மாநிலங்களிலிருக்கும் மதமாற்றத் தடை சட்டங்களை விட வித்தியாசமான ஒன்றல்ல. வழக்கமாக இந்த மதமாற்றச் சட்டங்களில் பின்வரும் நிபந்தனைகள் இடம்பெறும். அவை

*Misrepresentation ஒருவரிடம் நான் அவர், இவர், எனப் பொய்ச்சொல்லி மதமாற்றம் செய்வது, நான் இன்னாரின் பிரதிநிதி எனப் பொய்ச் சொல்வது *Force ‘பரப்பிரயோகம் செய்து மதம் மாற்றுவது, Allurement - அதைத் தருவேன் இதைத் தருவேன் எனக்கூறி ஆசை வார்த்தைகளைக்காட்டி மதமாற்றம் செய்வது.

Undue Influence பெரிய இடங்களில் படிக்க வைப்பேன், அவரிடம் சொல்லி அதை செய்து தருவேன் என அளவுக்கதிமாக அழுத்தங்களைத் தருவது.

கட்டாயமாக மதம் மாறியே ஆக வேண்டும் எனக்கூறி நிர்பந்திப்பது. வேறு தவறான வழிகள் வழியாக மதம் மாற்றுவது அல்லது திருமணம் செய்வது எனக்கூறி மதம் மாற்றுவது.

இந்தத் தவறான வழிகள் என்பதில் ‘திருமணம் செய்வேன் எனக்கூறுவது அல்லது அதுபோன்ற வாக்குறுதிகளைத் தருவது என்பதுதான் இந்தச் சட்டத்தில் புதிதாக உள்ளது’ ஏனையவை எல்லா மத மாற்றச் சட்டங்களிலும் உள்ளவைதான்.

இதில் பட்டியலின மக்கள் அல்லாதவரை மதம் மாற்றினால், மதம் மாற்றுபவருக்குக் (கலிமா சொல்லி) கொடுப்பவருக்கு ஓர் ஆண்டுக்கு குறையாமல் ஐந்து ஆண்டுகள் வரை தண்டனை, அத்தோடு ரூ. 15,000 அபராதம்.

பட்டியலின மக்களை மதம் மாற்றினால் மூன்று ஆண்டிலிருந்து 10 ஆண்டுகள் வரை தண்டனை ரூ. 25,000 அபராதம். கூட்டாக மக்களை மதம் மாற்றின ால் 3 ஆண்டிலிருந்து 10 ஆண்டுகள் வரை தண்டனை, ரூ. 50,000 அபராதம்.

இந்தச் சட்டத்திற்கு The Uttar Pradesh Prohibition of Unlawful Conversion of Religion Ordinance - 2020 என்றுதான் பெயர்.

ஆகவே, Lawful Conversion என்ற நேர்மையான மதமாற்றங்களுக்குத் தடை இல்லை. இனி, இஸ்லாத்தில் மேலே உள்ள எதைச் செய்தும் மதம் மாற்ற அனுமதியில்லை. இஸ்லாமும் இதைத்தான் கூறுகின்றது. ஆனால் உத்திரப்பிரதேச அரசு இல்லாததையும் பொல்லாததையும் சொல்லி, அப்பாவி முஸ்லிம்களை கைது செய்து கொட்டடிகளில் அடைத்து வருகின்றது. கற்பம் தரித்தப் பெண்களின் கற்பைக் கலைக்கின்றது.

கைது செய்யப்பட்டவர்களுக்கு இப்போது அவர்களுக்குப் பிணையும் கிடைத்துள்ளது. உயர் நீதிமன்றங்களில் இந்தச் சட்டம் செல்லாது. ஏனெனில், அரசியல் சாசன சட்டத்திற்கு எதிரானது என வழக்குகள் தொடரப்பட்டுள்ளன. – அலஹாபாத் உயர்நீதிமன்றம் இந்த வழக்கை விசாரிக்க உள்ளது.

ஆனால், உச்ச நீதிமன்றம் இந்தப் பாசிச சட்டத்தைக் காப்பாற்றி, நிறைவேற்றிட வழி செய்யும் என்றேப்படு கின்றது. நடுநிலையான இந்தத் தேசத்தின் மீது பற்றுள் ளவர்கள் இன்று ஒன்றிணைந்து போராடுகிறார்கள். இன்ஷா அல்லாஹ் பொறுந்திருந்து பார்ப்போம்.

- MGM



# பிப்ரவரி – மால்கம் X மாதம்

## மால்கம் X

19 May, 1925 - 21 Feb, 1965

அமெரிக்காவின் நிறவெறி கொள்கையை இஸ்லாத்தை முன் வைத்து முறியடித்த மாவீரன் மால்கம் X என்ற மாலிக் அல்ஷாபாஸ் ஷஹீத்.

தான் இஸ்லாத்தை ஏற்றார், அமெரிக்காவில் ஆயிரக்கணக்கான கறுப்பு நிறத்தைக் கொண்டவர்களை இஸ்லாத்தில் இணைத்தார். நிறவெறிக் கொடுமைகளிலிருந்து நிரந்தரமாக மீட்டார்.

'ஹஜ்' பயணம் என்ற புனித மக்கா மாநகரம் சென்று இஸ்லாம் தொடங்கிய பூமியில் தன் கடமையை முடித்தார். சவூதி அரேபியா அரசின், அரசு விருந்தினர் என்ற கண்ணியத்தாடு.

*16* ஆப்ரிக்கா நாடுகளுக்குச் சென்று இஸ்லாத்தைப்பிரச்சாரம்செய்தார். லட்சக்கணக்கான கறுப்பு நிறம் கொண்டவர்களை இஸ்லாத்தில் இணைத்தார். இஸ்லாத்தைப் பிரச்சாரம் செய்யும் தனது பெரும் பயணத்தின் ஒரு பகுதியாக, 'கேசியஸ் கிளே' என்ற உலக மகா குத்துச் சண்டை வீரனை முஹம்மத் அலீ கிளேயையும் இஸ்லாத்தில் இணைத்தார்.

ஆனால், அமெரிக்காவின் வெள்ளை நிற வெறியர்களால், இதைப் பொறுத்துக்கொள்ள இயலவில்லை. அவர்கள் அதாவது, குழு கிளக்ஸ் கிளான் என்ற வெள்ளை நிற அமைப்பைச் சார்ந்தவர்கள் அமெரிக்காவின் உளவுத்துறையின் உதவியோடு மால்கம்–X அவர்களை பிப்ரவரி *21–1965* இல் கொலை செய்து விட்டார்கள்.

இஸ்லாத்தை ஏற்றுக்கொள்ளாத கறுப்பர்களின் நிலை அமெரிக் காவில் குரூரம் நிறைந்த ஒன்றாகவே இருக்கின்றது. இதனை அண்மையில் கொலை செய்யப்பட்ட ஜார்ஜ் பிளாயிட் George Floyd என்ற கறுப்பின அப்பாவியை நடு ரோட்டில் வைத்து கழுத்தை நெறித்து கொலை செய்த குரூரம் உலகிற்கு உணர்த்தியது.

அன்றும், இன்றும் என்றும் இஸ்லாம் மட்டுமே அமெரிக்காவின் அடிப்படை பிரச்சனையாம், நிறவெறியைத் தீர்க்க வல்லது. இதனால் அமெரிக்காவின் எதிர்காலம், இஸ்லாத்தின் மூலம்தான் மலரும்.

இதனை நன்றாக உணர்ந்தது அமெரிக்க முஸ்லிம்கள் தங்கள் இஸ்லாம் அடிப்படை மார்க்க கடமையாம் இஸ்லாமியப் பிரச்சாரத்தை நிறைவாகவே நிறைவேற்றி வருகின்றார்கள். இதில் அவர்கள் சந்தித்த சோதனைகள் சொல்லி

மாளாது. டிரம்ப் நாளும் ஒரு நெருக்கடியைக் கொடுத்தார்.


2020 நவம்பரில் அமெரிக்காவில் நடந்த தேர்தலில் அவமானம் நிறைந்ததொரு தோல்வியை மக்கள் டிரம்ப்–க்கு கொடுத்தார்கள். அவருடைய திட்டங்களில் ஒன்றாக அங்குள்ள கறுப்பர்களுக்கு வாக்குரிமையை மறுப்பதாக இருந்திருக்கின்றது. நம் நாட்டில் கொண்டுவரப்பட்ட CAA என்ற குடியுரிமைத் திருத்தச் சட்டத்தைப் போல் (Defranchise the afro americans) அமெரிக்காவில் வாழும் கறுப்பு நிறம் கொண்டவர்களை ஆஃப்ரோ – அமெரிக்கர்கள் என்றே அழைப்பார்கள். அவர்களுக்கு வாக்குரிமையை மறுப்பது ஒரு பெரும் இலக்காக இருந்திருக்கின்றது டிரம்ப்–இன் வெள்ளை நிற வெறி கும்பலுக்கு. இதுதான் அவரைத் தேர்தலில் எதிர்த்து நின்ற ஜோசப் பிடனின் மகத்தான வெற்றிக்குக் காரணம். அமெரிக்கர்கள் ஒற்றுமையுடன் இருப்போம் என்ற ஒற்றை முழக்கத்தை முன் வைத்து வென்றார் பிடன்

ஆகவே ஒற்றுமையை பேசும், பிடன் வெற்றிபெற முடியுமானால் சமத்துவத்தையும் சகோதரத்துவத்தையும் நிரந்தரமாக நடைமுறை வாழ்க்கையில் நிலை நிறுத்திய இஸ்லாம் நிச்சயமாக அங்கே வெற்றிபெறும் நிரந்தரமாக, நிலை நாட்டப்படும். இன்ஷா அல்லாஹ்.

## தாருல் இஸ்லாம்

வருடந்தோறும் மால்கம் – X ஷஹீதாக்கப்பட்ட பிப்ரவரி 21 ஆம் நாளை மையமாகக் கொண்டு, பிப்ரவரி மாதம் முழுவதும் தாழ்த்தப்பட்ட, அமுக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைக்கு இஸ்லாமே மருந்து என்ற பிரச்சாரத்தைச் செய்து வருகின்றோம். தாருல் இஸ்லாம் சார்பில் இதனை முன்னிட்டு மால்கம் – X நூலை, குறைந்த விலையில் மக்களுக்கு விநியோகித்து வருகின்றோம்.

**80 ரூபாய் விலையுள்ள அந்நூல்–ஐ ரூ. 60/– க்கு கிடைக்கச் செய்கின்றோம். இந்த மாதம் மட்டும்.**




## நூல் தேவைக்கு

சென்னை – 81481 29887
மதுரை – 95246 26457
திருப்பூர் – 96551 35154
கோவை – 86954 21821
மேட்டுப்பாளையம் – 86108 40476
பொள்ளாச்சி – 94898 32769
திருச்சி – 93810 29717
நாகை – 82489 63991
காரைக்கால் – 98657 37232
நாகர்கோவில் – 81908 1075

இவண்,

**தாருல் இஸ்லாம் ஃபவுண்டேஷன் டிரஸ்ட்,**

**நீதி அமைதிக்கான மக்கள் இயக்கம்**

52/1, மண்ணடித் தெரு,
மண்ணடி, சென்னை – 600 001.
செல் : 81481 29887

# பெண்களின் நிலையைப் பற்றி மேலை நாட்டவர்களின் திரிபுகள்

என்னதான், பெண்மையின் மேன்மையை நாம் எடுத்துச் சொன்னாலும், அடுக்கடுக்கான ஆதாரங்களை அள்ளித்தந்தாலும், மேலை நாட்டவர்கள், தங்கள் வக்கிர விமர்சனங்களை நிறுத்துவதில்லை. தங்களது வலுவிழந்த பேனாக்களை திறந்தார்கள். உண்மைகளைத் திரித்தார்கள்.

இஸ்லாத்தின் மீது இல்லாததையும், பொல்லாததையும் புனைந்தவர்கள். சகோதர மத நம்பிக்கையாகிய கிருஸ்தவத்தை ஏற்றுக் கொண்ட அன்பர்கள்தாம்.

இவர்கள் கண்ணாடிக் கூண்டுக்குள் இருந்து கொண்டு கல்லெறிந்தார்கள்.

அவர்கள் இஸ்லாத்தில் பெண்களின் நிலை என்று வருகின்றபோதெல்லாம். அதை காமத் தோடும், களியாட்டங்களோடும் ஒப்பிட்டே பேசினார்கள். தங்களுடைய எழுத்துக்களை ஆபாசங்களைக் கொண்டே அலங்கரித்தார்கள். இப்படி எழுதிட இவர்கள் வெட்கப்படவில்லை.

ஆனால்மேலைநாட்டவர்களோ, பெண்தான் பாவங்களின் பிறப்பிடம் எனப் பிதற்றியவர்கள்.

இத்தகையதொரு அசிங்கமான பின்னணியைத் தங்களுக்குப் பின்னால் வைத்துக் கொண்டு அவர்கள் வெளியே ஓர் பயங்கர நாடகத்தை அரங்கேற்றினார்கள். அந்த நாடகம்,

பெண்கள் உரிமை என்பதையே எடுத்துப் பேசியது அவர்கள் தாம் என்றும், இன்றும், பெண்களுக்காகப் போராடியும் வாதாடியும் வருபவர்கள் அவர்கள்தாம் என்பதனாலேயே அந்த நாடகங்கள்.

கிருஸ்தவம் பெண்களை பாவத்தின் பிறப்பிடம் என்கின்றது.

இன்று கிருஸ்தவ உலகில் அல்லது கிருஸ்தவ சமுதாய அமைப்பில் பெண்கள் சிறிதளவாவது உரிமைகளை அனுபவிக்கின்றார்கள் என்றால் அது கிருஸ்தவத்தால் அல்ல. காரணம் கிருஸ்தவ உலகிலிருந்து கிருஸ்தவம் மூட்டை முடிச்சுகளோடு வெளியேற்றப்பட்டுவிட்டது. இன்று கிருஸ்தவம் மேலை நாடுகளைவிட கீழை நாடுகளிலேயே வேகமாப் பரப்பப்படுகின்றது.

காரணம் மேலை நாடுகளில் முதலாளித்துவ கொள்கைகளையும் சுரண்டல் வழிகளையும் கிழை நாடுகளில் விரிவாக்கிட இஃது மிகவும் பயன்படும்.

திடுதிப்புமென பெண்களின் ஒரே இரட்சகனாக தன்னைக் காட்டிட துடிக்கின்றது கிருஸ் தவம். ஆனால், அஃது அடிப்படையில் பெண்ணினத்தை பாவத்தின் பிரதி பிம்பமாகவே காட்டிற்று.

இன்று பெண்கள் விடுதலையடைந்துவிட்டதாகப் பீற்றிக் கொள்கின்றார்கள் என்றால் அஃது அவர்கள் கிருஸ்தவத்தின் பிடியிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டார்கள்.அவ்வளவு தான். அல்லாமல் யாரோ அவர்களை அடக்கி, ஒடுக்கி அடிமைகளாக வைத்திருந்தார்கள். அவர்கள் அதிலிருந்து தங்களை விடுவித்துக் கொண்டார்கள் என்பதனால் அல்ல.




இந்த விடுதலையும் சிக்கல் நிறைந்ததுதான்.

காரணம் அவர்கள் தங்களை ஆண்களின் பிணைப் பிலிருந்தே விடுவித்துக் கொண்டதாக அவர்கள் பறை சாற்றிக் கொண்டிருக்கின்றார்கள். இந்த விடுதலை என்ற முழக்கத்துடன் அதல பாதாளத்தில் வீழ்ந்துவிட்டாள் என்பதை அவள் புரிந்துகொள்ளவில்லை.

- MGM

– தொடரும்.

மேலை நாடுகள் எனப்படுபவை, பிரிட்டன், பிரான்ஸ், ஜெர்மனி முதலாய ஐரோப்பிய நாடகளைக் குறிக்கும். அமெரிக்கா தனிக் கண்டனத்தில் வரும், என்றாலும் நடைமுறையில் அமெரிக்கா இந்த ஐரோப்பிய நாடுகளில் ஒன்றாகவே செயல்படுகின்றது. கீழை நாடுகள் என்பவை வளைகுடா நாடு ஆகிய நாடுகள் ஆகியவற்றைக் குறிக்கும் சவூதி அரேபியா, ஈரான், ஈராக் ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகள் கீழை நாடுகள். சிங்கப்பூர், மலேசியா ஆகிய நாடுகள் இதில் அடங்கும்.




## கொரோனா காலத்தில் முஸ்லிம் பெண் டாக்டர்கள் அணிந்திட கொரோனா ஹிஜாப்

டாக்டர் ஃபரா ஷஹீரா ரோஸ்லன் என்ற இளம், முஸ்லிம் பெண் டாக்டர் இதனை கண்டுபிடித்துள்ளார். இவர் மலேசியாவில் பிறந்தவர். லண்டனில் பயிற்சி மருத்துவராக இருந்து கொண்டிருக்கின்றார். இவர் Disposable Surgical Hijap. மருத்துவப் பணியில் பயன்படுத்திவிட்டு, களைந்துவிடும், ஹிஜாப் என்றொன்றை கண்டுபிடித்துள்ளார். இவர் கண்டுபிடித்துள்ள இந்த ஹிஜாப் உலக நாடுகளில் மகத்தான வரவேற்பை பெற்றுள்ளது. பிரிட்டனுக்கு ஒரு நல்ல வியாபா ரத்தையும் தந்துள்ளது.

Radiance" Views Weekly. January 27-23-2021

பெண்தான் பாவங்களின் பிறப்பிடம் என்பதற்கு கிருஸ்தவ உலகத்தினர் ஓர் அற்புதமான கதையைக் கட்டி விட்டார்கள். அஃது ஆதிமனிதர்களான ஆதம்–ஹவ்வா. ஆதாம், ஏவாள் இவர்கள் சொர்க்கத்தில் சுதந்திரமாகச் சுற்றித் திரிந்தார்கள். இவர்கள் சொர்க்கத்தில் எதை வேண்டுமானாலும் அனுபவிக்கலாம், சுவைக்கலாம், புசிக்கலாம் என இறைவன் ஓர் அனுமதியை வழங்கி இருந்தான். இந்தப்பொது அனுமதிக்கு ஓர் விதிவிலக்கு.

அதாவது சொர்க்கத்தில் ஒரு மரம் தடுக்கப்பட்டதாக இருந்தது. அந்த மரத்தை இவர்கள் நெருங்கவும் கூடாது, அதன் கனியை புசிக்கவும் கூடாது. கிருஸ்தவம் புனையும் வரலாற்றின் அடிப்படையில் ஆதாம் அந்த மரத்திலிருந்து ஒதுங்கியே இருந்தார்.

ஆனால், ஏவாள் அவரை விட வில்லை. அந்த தடுக்கப்பட்ட மரத்தை நெருங்கும்படியும், அந்தக் கனியை புசிக்கும் படியும் தூண்டினாள். ஆதாம் பாவம் செய்தார். இதனால் இறைவனின் கோபத்திற்கு ஆளானார். இந்தக் கோபம் அவர்களுக்கு வழங்கப்பட்டத் தண்டனையாக மாறிற்று. அதனால் அவர்கள் பூமிக்கு வந்தார்கள். இதை ஆதிபாவம் Orinigionalsim என்கின்றார்கள்.

ஆகவே பெண்கள்தாம் பாவத்தின் பிறப்பிடம் என்பது மேலை நாட்டினர் நம்பிக்கை அது, அவர்கள் பின்பற்றும் கிருஸ்தவம் அவர்களுக்குக் கற்றுக் கொடுத்த பாடம்.

இஸ்லாம், இரண்டு பேருமே அந்த மரத்தை நெருங்கினார்கள். அதன் கனியைப் புசித்தார்கள். இரண்டு பேருமே சம அளவில் பாவத்தைச் செய்தார்கள். பின்னர் இரண்டு பேருமே இறைவனிடம் பாவமன்னிப்புக் கேட்டார்கள். இறைவன் இரண்டு பேரையுமே மன்னித்தான். அவர் மன்னிக்கப்பட்டவர் களாகவே பூமிக்கு வந்தார்கள் என்கின்றது.

# அமெரிக்க முஸ்லிம் பெண்களின் சாதனை!

அமெரிக்காவின் 46ஆவது குடியரசு தலைவராக ஜோபிடன் ஜனவரி 20,2021—இல் பதவி ஏற்றார். அவருடைய அதிகார பீடத்தில்பலநாட்டவர்களும் அமர்த்தப்படுகின்றார்கள்.




நமது இந்திய வம்சா வழியினர் 20 பேர் பதவி ஏற்கின்றார்கள். அதேபோல் அரபு பாலஸ்தீன முஸ்லிம் பெண்மணி ரீமா டோடின் (Reema Dodin) ஜோபிடன் அதிகாரப் பீடத்தில் முக்கியப் பொறுப்பை ஏற்கிறார்.

இவரது தாத்தா, முஸ்தபா டோடன்ஜோர்டன்நாட்டில் சமுதாய வளர்ச்சித் துறையில் அமைச்சராக இருந்தவர். பேத்தி அமெரிக்க அதிகார வட்டத்தை அலங்கரிக்கின்றார்.

இவர் சட்டத்துறையில் தலை சிறந்து விளங்குபவர். அதனால் இவரை ஜோபிடன் Director of the White House office of the LegisLative affairs. இதனை சுருக்கமாக இப்படிச் சொல்லலாம்.

“வெள்ளை மாளிகையில் சட்டம் இயற்றும் விவகாரங்களை ஒருங்கிணைப்பவர்”. இஃதோர் மிக, மிக முக்கியமான பொறுப்பு. இந்த பொறுப்பை ஏற்கும் முதல் பாலஸ்தீன அமெரிக்கர் இவர்.

அமெரிக்காவில் 2020 ஆம் ஆண்டு நடந்த அதிபர் தேர்தலில் தீவிரவாதி டோலாண்டு டிரம்ஃப். அவமானமான ஒரு தோல்வியைச் சந்தித்தார். அவமானமான தோல்வி என ஏன் கூறுகின்றோம்?

## அவமானமான தோல்வி

அமெரிக்க மக்கள். மிக அரிதாகவே ஒரு அதிபருக்கு இரண்டாவது முறை அதிபர் பதவியை மறுப்பார்கள். அப்படி இரண்டாவது முறை அதிபர் பதவி மறுக்கப்பட்டவர் தீவிரவாதி டொனால்ட் டிரம்ஃப். அவரால் இந்த அவமானத்தைத் தாங்கிட இயலவில்லை. அதனால், தன்னை எதிர்த்து தேர்தலில் வென்ற ஜோபிடன் அவர்களின் வெற்றியை வசைபாடினார், வழிமறித்தார். பல மாநிலங்களில் தேர்தலில் தில்லு முல்லுகள் நடந்தது என்றும், இறுதியில் வாக்குகளை எண்ணுவதில் தில்லுமுல்லுகள் நடந்தன என்றும் குற்றம் சாட்டினார்.

பல மாநில தேர்தல் முடிவை எதிர்த்து, வழக்குகளைத் தொடுத்தார். இந்த வழக்குகளைச் சந்திப்பதில் முக்கியப்பங்கு வகித்தார் ரீமா டோடின். அதனால் இவர் இப்போது சட்ட அமைச்சகத்தின் முக்கியப் பொறுப்பில் நியமிக்கப்பட்டுள்ளார்.

மனித உரிமை தளத்தில் சிறந்த வழக்கறிஞர். ஆய்வுகள் பலவற்றை மேற்கொண்டவர். இதனை பல ஊடகங்களால் பொறுத்துக்கொள்ள இயலவில்லை. அவரது புகைப்படத்தை வெளியிடுவதிலும், அவரை சித்தரிப்பதிலும் தங்கள் வெறுப் பைக் காட்டுகின்றார்கள்.

## மீண்டும் இஸ்லாம்

ஒருஇணைதளம்"IslamisBackinWhiteHouse" இஸ்லாம் மீண்டும் வெள்ளை மாளிகையில் வந்துவிட்டது எனத் தலைப்பிட்டிருக்கின்றது. அதாவது தனது வயிற்றெரிச்சலை கொட்டி இருக்கின்றது. அவர்களுக்குச் சொல்வோம்.

“அமெரிக்கா, இஸ்லாம் வேகமாக வளர்ந்து வரும்நாடுகளில்ஒன்று. இதனால்இஸ்லாம்நிசசயமாக” ஆளும் காலம் வரும். இன்ஷா அல்லாஹ்.

அங்குள்ள குடிமக்கள் ஷரீஅத் சட்டங்களில் தங்கள் நல்வாழ்வு இருப்பதாக நம்புகின்றார்கள். அமெரிக்காவில் பல நிறுவனங்கள் இதற்காகக் கட்டுப்பாட்டுடன் செயல்பட்டு வருகிறது.

அமெரிக்க முஸ்லிம் பெண்கள் தொடர்ந்து இஸ்லாத்தைப் பிரச்சாரம் செய்து வருகின்றார்கள். அவற்றுள் தலையாயது (AIR Centre for American Islamic Relations.

அமெரிக்காவில் இஸ்லாத்தை ஏற்றுக்கொள்

ளாதவர்கள் கூட தங்கள் சொந்தப் பிரச்சனை களில், இஸ்லாம் சொல்லும் தீர்வுகளை ஏற்றுக் கொண்டுள்ளார்கள். இதனால் அமெரிக்காவில் உளவு நிறுவனமான "CIA - சி.ஐ.ஏ. அமெரிக்கா வின் மிகப்பெரிய அபாயம், 'ஷரீஅத்' – Sharia The Tareat to America என்றொரு அறிக்கையை 2010 – 2012 ஆம் ஆண்டுகளில் சமர்ப்பித்து, இதனை வைகறை வெளிச்சம் 2012 ஆம் ஆண்டில் ஜனவரி இதழில் வெளியிட்டிருந்தோம். அந்த அறிக்கையில் இஸ்லாம் ஜனநாயகத்தை விட விரிவானது விசாலமானது எனக் குறிப்பிட்டி ருந்தது குறிப்பிடத்தக்கது.

அதேபோல் அமெரிக்க முன்னாள் அதிபர் பில் கிளிண்டர், மோனிகா என்றொரு பெண் ணோடு தொடர்பு வைத்திருந்து அதுபெரிய பிரச்சனையான போது அவருடைய மதிப்பு இஸ்லாத்தை ஏற்றால் இரண்டு மனைவியரை மணந்துகொள்ளலாம் என பரிந்துரைத்தது. அப்போது உலக அரங்கில் மிகப்பெரிய விவாத மானது. அப்போதைய இஸ்ரேலிய பிரதமர், பில்கிளிண்டன் அவர்களிடம் நாம் இஸ்லாத்தை உலகமெல்லாம் எதிர்க்கின்றோம். ஜனநாயக நமது வீட்டிலேயே இஸ்லாம் புகுந்துள்ளது என க்கூறியது. உலகையே ஆச்சர்யத்தில் ஆழ்த்தியது.

■ - MGM

Inputs from "Radiance" Views Weekly, January 17-23-2021

## உலகில் ஆற்றல் மிக்க 100 பெண்களில் 20 முஸ்லிம் பெண்கள் இடம்பெறுகின்றனர்

BBCS பிரிட்டனின் ஊடக நிறுவனம் 100 பெண்களின் பட்டியல் ஒன்றை வெளியிட்டுள்ளது. அதில் உலகெங்குமுள்ள சாதனை பெண்கள் 100 பேர் இடம் பெறுகின்றனர். இவர்களில் உலகெங்கு முள்ள 20 முஸ்லிம் பெண்களும் இடம் பெறுகின்றனர்.

இந்தப் பெண்கள் அவரவர்கள் எடுத்துக் கொண்ட துறையில் வியக்கத்தக்க அளவில் சாதனை செய்தவர்கள். ஏனைய மக்களுக்கு உத்வேகமும், உற்சாகமும் தருபவர்கள் என்பதனால் சாதனையா ளர்கள். (Radiance" Views Weekly. January 27-23-2021)

அமெரிக்காவில் நடைபெற்ற தேர்தலில் அமெரிக்க அதிபராக இருந்த டிரம்ப் தோற் கடிக்கப்பட்டு ஜோ பிடன் ஜனவரி 20,2021ல் அமெரிக்க அதிபராக பொறுப்பேற்றார்.

ஜோபிடன் நிர்வாகத்தில் இந்திய வம்சா வளிகளின் நியமனம் பெரும் வரவேற்பை பெற்றுள்ளது அதில் பெரிதும் வரவேற்பை பெற்றுள்ளது காஷ்மீரை பூர்விகமாக கொண்ட சமீரா ஃபாசிலியின் (Sameera Fazili) நியமனம்.

சமீரா ஃபாசிலி (sameera fazili) அமெரிக்க பொருளாதார தேசிய கவுன்சிலின் துணை இயக்குனராக நியமிக்கப்பட்டிருக்கிறார். இந்த பதவி அமெரிக்காவின் மிக முக்கியமான பதவி.

அமெரிக்காவின் பொருளாதார கொள் கையை நியமிக்கும் இடத்தில் இருக்கும் ஒரு பதவியாக இருக்கிறது. இந்த பதவிக்கு முற்றிலும் பொருத்தமானவர் ஃபாசிலி. இவர் முன்னாள் அமெரிக்க அதிபர் ஒபாமாவின் நிர்வாகத்தில் பங்கு பெற்ற போது பெரிதும் பிரபலமானவர். நிர்வாகத்திலிருந்து வெளியேறுவதாக அறிவித்த போது அமெரிக்க அதிபராக இருந்த ஒபாமா வால் தனியாக பெரிய விடைபெறுதல் நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

இவர் தற்போது அமெரிக்காவின் முக்கிய பதவியில் அமர்த்தப்பட்டதற்கு காஷ்மீரின் ஸ்ரீநகர் பகுதியில் உள்ள அவரது சொந்தங்கள் தங்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர். சமீரா ஃபாசிலி கடந்த 2006ம் ஆண்டு காஷ்மீருக்கு வந்து சென்றிருக்கிறார். தன் வரலாற்றின் மீது அதிக பற்றுக்கொண்ட ஃபாசிலி தன் மகளுக்கு காஷ்மீரின் கடைசி மன்னனின் யூஸுப் ஷாவின் மனைவியின் பெயரை தான் வைத்திருக்கிறார்.

எப்போதும் ஹிஜாபுடன் வலம் வருபவராக வும் காஷ்மீர் மக்களின் உரிமையை பேசுபவராக வும் இவர் இருப்பதால் சமீரா ஃபாசிலியின் நிய மனம் பெரிதும் எதிர்பார்ப்பை உருவாக்கியிருக் கிறது. (The Hindu 15.01.2021)

இதர இந்தியர்களின்நியமனம்

### ஆயிஷா ஷாஹ்


வெள்ளை மாளிகையின் டிஜிட்டல் வியூகத்தை அமைக்கும் கவுன்சிலின் மேலாளராக நியமிக்கப்பட்டிருக்கிறார். ஆயிஷா ஷாஹ் காஷ் மீரில் பிறந்து அமெரிக்காவில் படித்து பட்டம் முடித்தவர். காஷ்மீரை சேர்ந்தவர்கள் இரண்டு பேர் அமெரிக்காவின் அரசு நிர்வாகத்தில் அமைந் திருப்பது காஷ்மீருக்கு பெருமை சேர்ப்பதாக காஷ்மீரக மக்கள் கூறுகிறார்கள்.

இதுபோக வினய் ரெட்டி, ரோஹித் சாப்ரா, ரீமா ஷாஹ், நேஹா குத்பா, விதுத் சர்மா, வேதந் பட்டேல் ,சோனியா அகர்வால் என இந்திய வம்சாவளிகள் பலர் ஜோபிடன் அரசு நிர்வாகத் தில் இடம்பெற்றுள்ளனர்.

சிலுவைப் போர்கள் 2.0

தொடர்

# இஸ்லாம் ஒரு தீவிரவாத மார்க்கம்




அது அப்பாவிகளைக் கொலை செய்யும் மார்க்கம் என்ற பிரச்சாரங்கள் ஓய்வின்றி செய்யப்படுகின்றன. மேலை நாடுகள், இதனை முன்னுக்கு நின்று செய்து வருகின்றன. இதற்காக பெருமளவில் நிதி திரட்டப்படுகின்றது. அவை பயங்கர திட்டங்களின் கீழ் செலவு செய்யப்படு கின்றது.

மீடியாக்கள் என்ற ஊடகங்கள் இதில் காட்டும் ஆர்வம் அலாதியானது. இஸ்லாத்தின் மீதும் முஸ்லிம்கள் மீதும் வெறுப்பை வளர்க்கும் நிகழ்ச்சிகளை ஒளிபரப்பினால், பணம் கொட்டோ, கொட்டு எனக் கொட்டுகின்றது! பேஸ்புக் (எ) முகநூல் என்ன செய்து கொண்டி ருக்கின்றது என்பதை வைகறை வெளிச்சம் 2021 ஜனவரி இதழில் தந்துள்ளோம்.

இந்நிலையில் முஸ்லிம்கள் ஒவ்வொருவரும் தன்னால் இயன்றதையெல்லாம் செய்து நம்மோடு வாழும் சகோதர சமுதாயத்தின் மனங்களில் விதைக்கப்படும் வெறுப்புகளை வேரறுக்க வேண்டும்.

அதற்கு இந்தத் தொடர் பெரிதும் பயன்படும், என்பதனாலேயே இதனை இடைவிடாமல் தொடர்ந்து வெளியிட்டு வருகின்றோம்.

இந்தத் தொடர் வாசகர்களிடையே முதலில் அவ்வளவாக வாசிக்கப்படவில்லை. பின்னர் அதிகமாக வாசிக்கப்பட்டது. சில கல்வியாளர் களும், சிந்தனையாளர்களும் நமது முயற்சியைப் பாராட்டினார்கள். தொடரை ஊக்குவித்தார்கள்.

இப்போது நமது முழுக்கவனமும், சகோதர சமுதா யத்தின் மனங்களில் விதைக்கப்படும் வெறுப்பை அகற்றுவதில் கவனம் செலுத்த வேண்டும் என்று முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றோம்.

இது காலந்தாழ்ந்த விழிப்புணர்வே என்றா லும், நமது முயற்சிகள் பயன்தர தொடங்கி யுள்ளன. இன்ஷா அல்லாஹ் தொடரும்.

இந்தத் தொடர் "ஜான் பெஃப்பர்" அவர்கள் எழுதிய "Crusade 2.0. The West's Resurgent War on Islam" என்ற ஆங்கில நூலை அடிப்படையாகக் கொண்டது.

இப்போது "ஜான் பெஃப்பர்" அவர்கள் சொல் லுக்கு வருவோம். அதில் இன்னும் எப்படி யெல்லாம் வரலாற்றுத் திரிபுகளின் வழி, இஸ்லாத்தின் மீதும், முஸ்லிம்கள் மீதும் வெறுப்பை வளர்க்கின்றார்கள் என பார்ப்போம்!

ஜான் பெஃப்பர் கூறுகின்றார் :

இஸ்லாத்தின் மீதும், முஸ்லிம்கள் மீதும் நாங்கள் மெத்த சிரமங்களுடன், பயங்கர திட்டங் களுடன், வெறுப்பை வளர்த்து வந்தோம். இதற்காக நாங்கள் முதல் சிலுவைப் போரின் வரலாறுகளை வேண்டிய அளவுக்கு திரித்தோம். எங்கள் பிரச்சாரம் பிஞ்சு நெஞ்சங்களிலும், கல்லூரி மாணவர்களின் மனங்களிலும் நன்றாகப் பதிந்தன.

இஸ்லாமியப் பேராபத்திலிருந்து, நாம் தப்பித்தே ஆக வேண்டும் என்ற நிலை எல்லோர் மனங்களிலும் பதிந்தது.

ஒவ்வொருவரும் தங்களால் இயன்ற அளவுக்கு இந்த வெறுப்பை வளர்ப்பதற்கு பங்காற்றினார்கள்.

இதற்காக நாங்கள் பல முஸ்லிம் எழுத்தாளர்களை விலைக்கு வாங்கினோம். சிலர் எங்கள் பிரச்சாரத்திற்குப் பலியானார்கள். அவர்களும் எங்கள் பிரச்சாரத்தில் இரண்டறக் கலந்தார்கள்.

இப்படி எங்கள் முயற்சிகளை களத்திலே பல நன்மைகளைத் தந்தன. நாங்கள் பல நாடுகளில் முஸ்லிம்களைப் பதற்றத்திலும் பீதியிலேயுமே வாழ வைத்தோம். பல்வேறு காரணங்களையும் சொல்லி கொன்றொழித்தோம்.

இனி இஸ்லாம் தலையெடுக்காது என நாங்கள் கங்கணம் கட்டிக் கொண்டிருந்தபோது, இமாதுத்தின் ஸங்கி, நூருத்தின் ஸங்கி தலையெடுத்தார்கள். மொத்த வரலாற்றையும் தாங்கள் பெற்ற வெற்றிகளின் வழி திருப்பிப் போட்டார்கள்.

சலாஹுத்தின் அய்யூபி பெற்ற வெற்றியில் முஸ்லிம்கள் மீண்டும் தலை நிமிர்ந்தார்கள். இஸ்லாம் மிகப்பெரியதொரு உந்து சக்தி என்ற பெயரை மீண்டும் பெற்றது.

அதையும் முறியடிக்க நாங்கள் பிரயத்தனம் பல செய்திட வேண்டியதாயிற்று. மீண்டும் பல குரூரமான முயற்சிகளை எடுத்து மெல்ல, மெல்ல வெற்றியின் பக்கம் திருப்பினோம். அதாவது முஸ்லிம்கள், இஸ்லாம் இவையெல்லாம் ஆபத்து பலவற்றை அகத்தே கொண்டவை என்ற பீதியைக் கிளப்பினோம். முஸ்லிம்களை ஒட்டுமொத்தமாக வீழ்த்துவது ஒன்றேவழிஎன்ற பிரச்சாரங்களைக் கட்டியது. பல இடங்களில் முஸ்லிம்கள் நடோடிகளாக ஆக்கப்பட்டார்கள். வாழ்வாதாரங்களை இழந்தார்கள். தேசமற்றவர்களாக அலைந் தார்கள்.

நூறு ஆண்டுகள் மீண்டும் எங்கள் பிரச்சாரம் சரியாக வேலை செய்ததாக உணர்ந்தோம்.

ஆனால், **1453**–இல் சற்றும் எதிர்பாராமல் இஸ்லாம் மீண்டும் தலை நிமிர்ந்தது.

கிலாபத் என்ற முஸ்லிம்களின் தலைமை உதுமானியப் பேரரசாக மிளிரத் தொடங்கியது. எங்கள் கான்ஸ்டாண்டி நோபிள் வெற்றி கொள்ளப்பட்டது. இஸ்தான்புல் என்றானது. இதனை துருக்கிய கிலாபத் என்றார்கள். எங்களால் இதனை பொறுத்துக்கொள்ள இயலவில்லை. ஆனால் அவர்கள் வெற்றிக்கு மேல் வெற்றியைக் குவித்துக்கொண்டே இருந்தார்கள்.

இனி பழைய சிலுவைப் போர் கதைகள் மட்டும் போதாது என முடிவு செய்தோம். வரலாறு உள்ளவரை, வாழும் வரை துருக்கியர்களை வில்லன்களாக, காட்டுமிராண்டிகளாக காட்டிட வேண்டும் என முடிவு செய்தோம்.

துருக்கியர்கள் மனிதாபிமானமற்ற கொலைகாரர்கள், காட்டுமிராண்டித்தனத்தை மட்டுமே வழிமுறையாகக் கொண்டு கிருஸ்தவ உலகத்தை ஆக்கிரமிப்பவர்கள். கிருஸ்துவத்தை அழிக்க வந்தவர்கள் என்றெல்லாம் பிரச்சாரங்களைச் செய்யத் தொடங்கினோம்.

இந்தப் பிரச்சாரத்தின் பின்னணியில் உலகெங்கும் முஸ்லிம்களைக் கொலை செய்தோம். இந்தக் கொலைகளை நியாயப்படுத்திட நாங்கள் முஸ்லிம்கள், உலகை ஆட்கொள்ள தயாராகி வருகின்றார்கள். அவர்களை அழித்தொழிக்காவிட்டால், உலகமே இஸ்லாமிய மயமாக்கப்பட்டுவிடும். மொத்த உலகமும் ஒரே இஸ்லாமியத் தலைமையை – கிலாபத்தை நிலை நாட்டி விடுவார்கள் என்றோம். இதற்கு ஆதாரமாக அவர்கள் கான்ஸ்டாண்டி நோபிளை வெற்றிக் கொண்டதும், அதன் பெயரை இஸ்தான்ஃபுல் எனப் பெயர் மாற்றம் செய்ததையும் காட்டினோம்.

**1095**–இல் போப் அர்பன் II ஓர் உரையை நிகழ்த்தினார். (முதல்) சிலுவைப் போரைத் தொடங்கிட.

அந்த உரையில், நாங்கள் இப்போது துருக்கியையும் இணைத்துக் கொண்டோம். அந்த உரையை நாங்கள் இப்படி மாற்றினோம்.

இந்த உலகின், இந்தச் சிறிய பகுதி, நம்முடையது. அதனை, போரையே பொழுது போக்காகவும், முக்கிய தொழிலாகவும், கொண்ட துருக்கியர்களும், சாராசன்ஸ் என்ற அரபுக்களும் தங்களதாக ஆக்கிக் கொள்ளத் துடிக்கின்றார்கள்.

கடந்த **300** ஆண்டுகளாக நமது ஸ்பெயின் நாட்டையும் பெலாரிக் தீவுகளையும் தங்கள் கைகளில் வைத்துக் கொண்டார்கள். அவர்கள் மீதி இடங்களையும் கையகப்படுத்திடலாம் என்ற நம்பிக்கையில் இருக்கின்றார்கள்.

இது முழுக்க முழுக்க நாங்கள் (ஐரோப்பியர்கள்) இட்டுக்கட்டியவை என்று சொல்லிட இயலாது. காரணம், தொடக்கக் காலத்தில் தாருல் இஸ்லாம் – என்ற இஸ்லாத்தின் வீடு

(Darul Islam i.e. House of Islam) இப்படியொரு இலட்சியத்தைக் கொண்டிருந்தது என்பது உண்மையே!

இதை நாங்கள் நன்றாகத் திரித்து காலமெல்லாம் இஸ்லாம் நம்மைக் கவ்விப்பிடிக்க வந்து கொண்டிருக்கின்றது எனப் பிரச்சாரம் செய்தோம். (இதனை, நவம்பர், டிசம்பர் 2020 ''வைகறை வெளிச்சம்'' இதழில் இதனை விரிவாக வெளியிட்டிருக்கின்றோம்)

இங்கே ஆய்வாளர்களும், மற்றவர்களும் ஒன்றைக் கவனிக்க வேண்டும்.

நாங்கள் (ஐரோப்பிய கிருஸ்தவர்கள்) இடைக்கால வரலாற்றை (அதாவது இஸ்லாமிய வரலாற்றை) திரித்தும், மறித்தும், முஸ்லிம்கள் ஆபத்தானவர்கள் எனக் காட்டுவது, தவறான தகவல்களைத் தருவது இவற்றிற்குப் பின்னால் ஒரு நோக்கம் உண்டு. அது, ஐரோப்பிய கிருஸ்தவ உலகம் முஸ்லிம்களைக் கொலை செய்வதற்கான காரணங்களாக அவற்றைக் காட்டுவதற்குத்தான்.

அதாவது, வரலாற்றைத் திரித்தும், மறித்தும் கூறி, முஸ்லிம்கள் கொலை செய்யப்பட வேண்டியவர்களேஎனக்காட்டுவதற்குத்தான். அல்லாமல் வெறுமனே ஒரு வரலாற்றுத் திரிப்பை செய்ய வேண்டும் என்பதற்காக அல்ல.

ஒரு கிருஸ்தவர் தன்னுடைய கொலை பாதகச் செயலை நியாயப்படுத்திட வேண்டும் என்றால் கொலை செய்யப்படுபவர் ஒரு பெரும் பாவியாக இருக்க வேண்டும்.

அந்தப் பாவத்தின் சம்பளமே அவர் பெற்ற மரணம் என உலகுக்குச் சொல்லிவிட வேண்டும். இதனால் முதலில் முஸ்லிம்களைப் பாவிகளாக மாற்றிடுகின்றோம். மக்கள் மத்தியில் காட்டி விடுகின்றோம்.

1227–ல் ரோம் நாட்டைச்சார்ந்த ஹம்பெர்ட் என்பவர் ''முஸ்லிம்கள் முதல் தர குற்றவாளிகள். கடினமாக தண்டிக்கப்பட வேண்டியவர்கள். நமது தேவாலயங்கள் வாளால் தண்டிக்கும் உரிமையை பெற்று விடுகின்றன.

முஸ்லிம்கள் செய்யும் பாவங்கள், கிருஸ்தவர்களின் நடவடிக்கைகளை நியாயப்படுத்தி விடுகின்றன. (The Song of Roland)

அதேபோல் இன்றைய நாட்களைப் பற்றிப் புகட்டப்படும் பொய்கள், இஸ்லாம் எங்கே இந்த உலகை ஆட்கொண்டுவிடுமோ என்ற அச்சத்தில் புகட்டப்படுபவைகளே!

நாங்கள் – (ஐரோப்பிய கிருஸ்தவர்களாகிய நாங்கள்) இன்று முஸ்லிம்கள் மேல் நடத்தும் வன்முறைக்கும், சில நியாயங்களைக் கற்பித்தாக வேண்டும். இதற்கு எங்களுடைய இராணுவ தளபதிகளும் அமைச்சர்களும், வழிகாட்ட வேண்டும் என எதிர்பார்க்கின்றோம். இந்த எதிர்பார்ப்பை நிறைவேற்றிடும் அளவில், “இஸ்லாம் வன்முறையைப் போதிக்கின்றது” என "Pat Robertson" பாட் ரோபர் சன் என்ற மத போதகர் (இலாகிலிஸ்ட்) 2005–இல் பிரகடனப்படுத்தினார். (Media Metters July 18, 2005)

“திருக்குர்ஆன் வன்முறையையே போதிக்கின்றது, எல்லா முஸ்லிம்களும், மிதவாதிகள் எனச் சொல்லக்கூடிய முஸ்லிம்களும், வன்முறையின் மீது நம்பிக்கை உள்ளவர்கள்” என இராணுவ தளபதி ஜெரிகுரி (Jerry Curry) என்பவர் அறிவித்தார். இவர் அமெரிக்க இராணுவத்திலிருந்து ஓய்வு பெற்றவர். இவர், ஜிம்மி கார்ட்டர், ரீகின் மற்றும் புஷ் (Sr) ஆகியோரின் ஆட்சிக் காலத்தில் இராணுவத் தளபதியாக இருந்தார்.

ஜெரி ஃபால்வெல் என்பவர் “60 நிமிடங்கள்” என்ற அறிக்கையில், ''முஹம்மத் ஒரு தீவிரவாதி'' (நவூதுபில்லாஹ்) ''போரின் மனிதர்'' அவர் ஜீசஸ்–ஐயும், மோசசையும் போன்றவரல்ல.

இப்படி அதிகார வர்க்கம் கர்ஜித்தவுடன் நாங்கள், உற்சாகம் பெற்றோம். இதைத் தொடர்ந்து மதக் குருக்களும் தங்கள் பங்கை ஆற்றினார்கள்.

– இன்ஷா அல்லாஹ் தொடரும்

# பிழை திருத்தம்

சென்ற ‘வைகறை வெளிச்சம்’ (ஜனவரி 2021–இல்) அட்டைப்படக் கட்டுரையில், காந்தி 30.12.1948–இல் கொலை செய்யப்பட்டார் என வந்தது தவறு. அது 30–1–1948 என இருந்திட வேண்டும். தவறுக்கு வருந்துகின்றோம். சுட்டிக்காட்டிய அன்பர்களுக்கு நன்றி!

– MGM


# நபி இப்ராஹிம் (அலை) அவர்களும்
# சூரியனும் சந்திரனும் வீனஸும்

இப்ராஹிம் நபியின் மீது ஸலாம் உண்டாவதாக. யூத, கிறிஸ்தவ, இஸ்லாமிய வரலாற்றில் இப்ராஹிம் நபிக்கு என்று தனி இடம் உண்டு. குர்ஆன், பைபிள் இரண்டிலும் இப்ராஹிம் நபியை பற்றி ஒரே மாதிரியான சம்பவங்கள் கூறப்பட்டிருந்தாலும் சில சம்பவங்கள் ஒன்றில் மட்டும் காணப்படுகின்றன. கீழே நாம் கூறப் போகும் சம்பவம் குர் ஆனில் மட்டும் காணப் படுபவை. இருபதாம் நூற்றாண்டில் மேற்கொள் ளப்பட்ட தொல்லியல் ஆராய்ச்சிகள் குர்ஆனில் கூறப்பட்ட சம்பவத்தோடு ஒத்துப் போகின்றதா என்பதை பார்க்கலாம்.

## பாபிலோனியா:

பாபிலோனியாவில் இப்ராஹிம் நபி பிறந்தார் என்றே யூத, கிறிஸ்தவ, இஸ்லாமிய குறிப்புகள் கூறுகின்றன. அதாவது இன்றைய ஈராக். ஆண் கடவுள்கள் என்றும் பெண் கடவுள்கள் என்றும் பலவற்றை வணங்கி உள்ளனர் அங்கே வாழ்ந்த வர்கள். குறிப்பாக நட்சத்திரங்களையும் கோள் களையும் வணங்கியுள்ளனர். அவற்றுள் சந்திரன், சூரியன், வீனஸ் ஆகிய கோள்களை பிரதான கடவுள்களாக அவர்கள் வணங்கியுள்ளனர் என்று அறியப்பட்டுள்ளன.

உர் மற்றும் ஹரன் நகரங்களில் பிறை வடிவம் கொண்ட சந்திர கடவுள் நன்னா தெய்வமாக வழிபடப்பட்டுள்ளது. உர் நகரத்தின் சந்திரக் கடவுள் நன்னாவை வணங்குவதற்காக கி.மு.2100 ஆண்டுகளில் சிக்குரட் (Ziggurat of Ur) எனப் படும் கட்டிடம் கட்டப்பட்டுள்ளது.


சிக்குரட்

சர் லியோனர்டு வூலி என்ற தொல்லியல் நிபுணர் உர் நகரத்தில் உள்ள ஒரு வீட்டில் களிமன் பலகைகளை கண்டெடுத்தார். அதில் சந்திரக் கடவுள் நன்னாவை பற்றிய குறிப்புகள் காணப்பட்டன. வரலாற்று ஆய்வாளர்களின் கருத்துப்படி, கிறிஸ்து பிறப்பதற்கு முந்தைய 3000 ஆண்டுகளின் இறுதிக்கட்டத்தில் இருந்து சந்திரக் கடவுள் நன்னாவை குறிப்பதற்காக பிறை வடிவம் பயன்படுத்தப்பட்டுள்ளது.


[ஹஸாமர் உருளை வடிவ கல்,
காலம் : கி.மு. 2100 ஆண்டு, உர் நகரத்தின் அரசர், பிறை வடிவ சந்திர கடவுள் நன்னா - இவற்றை குறிக்கிறது


லர்சா, சிப்பார் நகரங்களில் சமாஸ் என்ற ழைக்கப்பட்ட சூரியக் கடவுளை குறிப்பதற்கு சூரிய வட்டம் பயன்படுத்தப்பட்டுள்ளது. கிறிஸ்து பிறப்பிற்கு முந்தைய 3000 ஆண்டுகளின் பிற்பகுதியில் இருந்து இந்த வடிவம் பயன் படுத்தப்பட்டுள்ளது.


உர் நம்மு சிற்பத்தூண், காலம் : கிமு 2112-2095, மெசபடோமியர்களின் கலைக்கு ஓர் எடுத்துக்காட்டு, உர் நகரத்தின் அரசர், அவரது குருக்கள் ஆகியோர் சந்திரனுக்கும் சூரியனுக்கும் யாகங்கள் நடத்துவதை இச்சிற்பம் குறிக்கிறது. சூரிய கடவுளும் சந்திர கடவுளும் தூணின் மேற்பகுதியில் பொறிக்கப்பட்டுள்ளதை படத்தில் காணலாம்

சந்திரன், சூரியன் இதனோடு வீனஸையும் உர் நகரத்து மக்கள் வழிபட்டுள்ளனர். இந்த வெண்கல சிலை உர் நகரின் ஆட்சியாளரை குறிக்கிறது. தெற்கு ஈராக்கின் உருக் நகரம், உர் மூன்றாவது வம்சாவளி, கிமு 2100–2000 ஆண்டுகளுக்கு உட்பட்டது இந்த சிலை. பெண் கடவுள் இஸ்தரை இதில் பொறிக்கப்பட்டுள்ள வடிவங்கள்குறிக்கின்றன. வரலாற்று ஆய்வாளர்களின் கருத்துப்படி, கிறிஸ்து பிறப்பிற்கு முந்தைய 2000 ஆண்டுகளில் ஆரம்பத்திலிருந்து அல்லது 3000 ஆண்டுகளில் இருந்து மெசபடோமியர்களின் இலக்கியங்களில் முழுவதும் வீனஸ் கோளை குறிக்க இஸ்தர்/இனான என்ற சொல்லே பயன்படுத்தப்பட்டுள்ளது.



சந்திர கடவுள் நன்னாவை வழிபடும் தலைமை அர்ச்சகியான என்ஹெடுவானாவின் (கிமு 2285 – 2250) படைப்புகளில் இஸ்தர் / இனான பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. எட்டு முனைகளை கொண்ட நட்சத்திர வடிவம் இஸ்தரக்கு பயன்படுத்தப்பட்டுள்ளது.




## சந்திரன் சூரியன் வீனஸ் இவற்றிற்கு இடையே உள்ள தொடர்பு:

மெசபடோமியர்களின் நம்பிக்கையின்படி, சூரியன் சந்திரன் வீனஸ் இம்மூன்றும் ஒரே குடும்பத்தை சார்ந்தவை. வீனஸ் பெண் கடவுளான இஸ்தர் / இனான சூரிய கடவுள் சமாசுக்கு சகோதரி முறை. இவர்கள் இருவரும் சந்திரக் கடவுள் நன்னாவின் வழித்தோன்றல்கள். சுமேரியர்களின் இலக்கியங்களில் இத்தொடர்பு விவரிக்கப்பட்டுள்ளது. என்ஹெடுவாதன்னுடைய இலக்கியங்களில் சின் / சுவன் – இக்கு மகளாக இஸ்தர் / இனானவை குறிப்பிட்டுள்ளார். வரலாற்று ஆய்வாளர்களின் கருத்துப்படி, சுமேரியர்கள் நன்னா என்று குறிப்பிட்டதை அக்காதியர்கள் சின் / சுவன் என்று குறிப்பிட்டுள்ளனர்.

சமீபத்திய தொல்லியல் ஆராய்ச்சிகள் இந்த மூன்று கோள்களுக்கும் உள்ள நெருக்கத்தை காட்டுகின்றன. சுசா நகரத்தில் கண்டுபிடிக்கப்பட்ட "Kudurru of King Melishipak I" என்ற சிற்பத் தூண் முக்கோள்களையும் ஒன்று சேர காட்டுகின்றன.



ஸிப்பார் நகரத்தில் கண்டுபிடிக்கப்பட்ட Kudurru of Nebuchadnezzar ஐ என்ற சிற்பத் தூணில் மெசபடோமியர்கள் வணங்கிய பல கடவுள்கள் தனித் தனியே பிரித்து காட்டப்பட்டுள்ளன. சூரியன், சந்திரன், வீனஸ் இவற்றின் சிறப்பை தனியே உயர்த்தும் வண்ணம் அவை தூணின்மேல் பகுதியில் பொறிக்கப்பட்டுள்ளன.


Kudurru of Nebuchadnezzar

ஹரன் நகரத்தில் கண்டுபிடிக்கப்பட்ட Stele of Nabonidus என்ற சிற்பத்தூணும் முக்கோள்களை ஒன்று சேர காட்டுகின்றன. வெவ்வேறு நகரங்களில் இருந்து கண்டுபிடிக்கப்பட்ட இந்த சிற்ப தூண்கள் சூரியன், சந்திரன், வீனஸ் கோள்கள் அப்பகுதி முழுவதும் முக்கிய கடவுளாக வணங்கப்பட்டுள்ளதை எடுத்து காட்டுகின்றன.

Stele-of-Nabondus


## குர்ஆனும் இப்ராஹிம் நபியின் சரித்திரமும்

இப்ராஹிம் நபியின் சமூகத்தினர் எப்படிபட்ட சிலை வழிபாடுகளை மேற்கொண்டனர் என்பதை குர்ஆன் இப்படி கூறுகிறது.

*6:75* இவ்வாறே வானங்கள் மற்றும் பூமியின் ஆட்சியமைப்பை நாம் இப்ராஹீமுக்குக் காண்பித்துக் கொடுத்தோம்; உறுதியான நம்பிக்கை யுடையோரில் ஒருவராய் அவர் திகழ வேண்டும்

என்பதற்காக!

*6:76* எனவே, இரவு அவரைச் சூழ்ந்தபோது அவர் ஒரு நட்சத்திரத்தைக் கண்டு "இதுதான் என்னுடைய இறைவன்" என்று கூறினார். ஆனால் அது மறைந்துவிட்டபோது, "மறைந்து போகின்றவற்றை நான் நேசிப்பவனல்லன்" என்று உரைத்தார்.

*6:77* பின்னர் சந்திரன் உதயமாவதை கண்ட அவர் "இதுதான் என்னுடைய இறைவன்" என்று கூறினார். ஆனால் அதுவும் மறைந்தபோது "என்னுடைய இறைவன் எனக்கு வழிகாட்டவில்லையெனில் வழிதவறிய கூட்டத்தாருள் நிச்சயமாக நானும் சேர்ந்திருப்பேன்" என்று கூறினார்.

*6:78* பின்னர் சூரியன் உதயமாவதை கண்டபோது "இதுதான் என்னுடைய இறைவன்; இது எல்லாவற்றையும் விட மிகப் பெரியது" என்று கூறினார். ஆனால் அதுவும் மறைந்து போகவே, "என் சமூகத்தவரே! நீங்கள் இறைவனுக்கு இணைவைக்கும் அனைத்தை விட்டும் திண்ணமாக நான் விலகி விட்டேன்.

*6:79* வானங்களையும், பூமியையும் படைத்தவனின் பக்கம் ஒருமனத்துடன் என் முகத்தை நான் திருப்பிவிட்டேன்; மேலும், ஒருபோதும் நான் இணைவைப்பவர்களில் உள்ளவனல்லன்" என்று கூறினார்.

இப்ராஹிம் நபி அவருடைய சமூக மக்கள் செய்த வழிபாட்டை எப்படி விவாதித்து அதை தவறு என்று எடுத்து கூறினார் என்பதை மேற் கண்ட வசனத்தில் கண்டோம். சூரியன், சந்திரன் மேலும் ஒரு நட்சத்திரத்தையும் அம்மக்கள் வணங்கினர் என்று கூறுகிறது குர்ஆன்.

'இரவு அவரைச் சூழ்ந்தபோது அவர் ஒரு நட்சத்திரத்தைக் கண்டு "இதுதான் என்னுடைய இறைவன்"என்றுகூறினார். ஆனால்அது மறைந்து விட்டபோது, "மறைந்து போகின்றவற்றை நான் நேசிப்பவனல்லன்" என்று உரைத்தார்.

'கவ்கபன் என்ற அரபி வார்த்தை இங்கே நட்சத்திரம்' என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. விண்பொருள்களை குறிக்க இவ்வார்த்தை பயன்படுகிறது. நட்சத்திரம் அல்லது கோள் இவை இரண்டிற்கும் இவ்வார்த்தையை பயன் படுத்தலாம்.

'இரவு அவரைச் சூழ்ந்தபோது.... மறைந்து போகின்றவற்றை நான் நேசிப்பவனல்லன்' என்ற வசனத்தை கவனியுங்கள்.

இரவு நேரத்தின் ஆரம்பத்தில் குறிப்பிட்ட நேரம் மட்டுமே தெரியும் விண்பொருளை குர்ஆன் கூறுகிறது. இந்த விளக்கங்கள் இஸ்தர் / இனானவோடு ஒத்துப்போகின்றது. இஸ்தர் / இனானவிற்கு மாலை விண்மீன் என்ற பெயரும் உண்டு. ஏனெனில் சூரியன் மறைந்த பிறகு குறிப்பிட்ட நேரம் மட்டுமே இக்கோள் தெரியும் என்பதால்.

குர்ஆனின் இந்த வசனங்கள் வீனஸை தான் குறிக்கின்றன என்று பல குர்ஆன் விரிவுரை யாளர்கள் கூறியுள்ளனர். உதாரணமாக 14−ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த இஸ்மாயில் இப்னு கதீர் தன்னுடைய விரிவுரையில்...

'இப்ராஹிம் நபியவர்கள் மீது ஸலாம் உண்டாவதாக. அவர்கள் முதலில் வீனஸ் வணங்கத் தகுதியானதல்ல என்பதை நிரூபித்தார்'.

மேலும் 15−ஆம் நூற்றாண்டைச் சார்ந்த அறிஞர் ஜலாலுதீன் அல் மஹல்லி தன்னுடைய விளக்க உரையில்...

'இரவு அவரைச் சூழ்ந்தபோது அவர் ஒரு நட்சத்திரத்தைக் கண்டார் − வீனஸ் என்று கூறப் படுகிறது.'

சுருக்கமாக கூறின்,. இப்ராஹிம் நபியின் சமூகத்தினர் தெய்வங்களாக எதை வணங்கினர் என்ற குர் ஆனின் கூற்றில் உள்ள உண்மைகள் மேலே கூறிய வரலாற்று ஆதாரங்களான முக்கோள்களின் வணக்க வழிபாடு முறையோடு மிகச்சரியாக ஒத்துப் போகின்றது.

வரலாற்று ஆய்வாளர்களின் கணிப்பின்படி இப்ராஹிம் நபி கிமு 2100−1550 இடைப்பட்ட காலத்தில் வாழ்ந்திருக்க வேண்டும். பண்டைய பாபிலோனிய மதங்கள் பற்றிய அறிவு நமக்கு 2 ஆயிரம்வருடங்களாகதொலைந்துபோனஒன்று.

சமீபத்திய அதாவது இருபதாம் நூற்றாண்டில் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் ஆராய்ச்சிகளே நமக்கு இந்த உண்மைகளை மீண்டும் வெளி உலகிற்கு கொண்டு வந்தன. இருபதாம் நூற்றாண்டுக்கு முன்பு வரை நமக்கு உர் நகரத்தை பற்றிய உண்மைகள் தெரியாது. இப்ராஹிம்

நபி காலத்தில் பேசிய சுமேரியர்களின் மொழி பற்றிய தகவலும் நமக்கு தெரியாமல் இருந்தது.

கிபி முதல் நூற்றாண்டு வரை இம்மொழி வழக்கத்தில் இருந்துள்ளது. அதன்பின்பு இது மறைந்து விட்டது. பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஜார்ஜ் ஸ்மித் (1840–1876), ஹென்றி ராவில்சன்(1810–1895) அகிய இருவர் கல்வெட்டுகளில் பொறிக்கப்பட்ட வற்றை ஆங்கிலத்திற்கு மொழி பெயர்த்தனர்.

ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த முஹம்மது நபிக்கு இந்த உண்மைகள் எப்படி தெரிந்திருக்கும்? முக்கோள்களை இப்ராஹிம் நபியின் சமூகத்தினர் வணங்கினர் என்பதை துல்லியமாக எப்படி முஹம்மது நபியால் கூற முடிந்தது? பைபிளின் கதைகளும் யூத புராணங்களுமே அன்று வழக்கத்தில் இருந்தவை. பைபிளை ஆராய்ந்தால் இவ்வளவு தெளிவான குறிப்புகள் இல்லை. வேற தேவர்களை வணங்கினார்கள் என்று பொதுவாகவே உள்ளது.


அப்பொழுது யோசுவா சகல ஜனங்களையும் நோக்கி: இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்: பூர்வத்திலே உங்கள் பிதாக்களாகிய ஆபிரகாமுக்கும் நாகோருக்கும் தகப்பனான தேராகு என்பவன், நதிக்கு அப்புறத்திலே குடியிருந்தபோது அவர்கள் வேறே தேவர்களைச் சேவித்தார்கள். யோசுவா 24:2

யூதப் புராணத்திலும் இவ்வளவு தெளிவாக இல்லை. சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள் இவற்றின் அருகே நெருப்பு, தண்ணீர், பூமி இவற்றையும் அவர்கள் கடவுளாக வைத்து வணங்கினர் என்றே யூத அறிஞர் ஆபிரஹாம் குறிப்பிடுகிறார். நட்சத்திரங்கள் என்று பொதுவாக உள்ளது. வீனஸ் என்று ஒரு கோளை குறிப்பிட்டு சொல்லும் வசனங்கள் இல்லை.

ஒருவேளை யூத புராணத்தில் இருந்து வசனங்கள் எடுக்கப்பட்டிருந்தால் குர்ஆனிலும் நெருப்பு, தண்ணீர், பூமி பற்றிய வசனங்கள் இருந்திருக்கும். தொலைந்து போன வரலாற்றை குர்ஆன் மிகத் துல்லியமாக 1400 ஆண்டுகளுக்கு முன்பே எடுத்து கூறியுள்ளது அல்லவா!

மேலதிக தகவல்களுக்கு
https://www.manyprophetsonemessage.com/

– அபூஹாசின்






நவம்பர்–26, 2008இல் மும்பையில் ஒரு பெரும் தாக்குதல். அதைத்தான் 26/11 என அடையாளமிட்டு அழைக்கின்றார்கள்.

இந்துத்துவ பாசிச பரிவாரத்தினர் அரியணை ஏறிட வழிவகுத்த தீவிரவாத தாக்குதல்களில் மிகவும் முக்கியமான தாக்குதல் இது.

இதில் ஏற்பட்ட மிகப்பெரிய இழப்பு என்னவெனில் ஹேமந்த் கர்கரே என்ற மிகத்திறமையான, நேர்மையான காவல்துறை அதிகாரி கொலைச் செய்யப்பட்டுவிட்டார் என்பதே. இவர்தான் நாட்டில் நடந்த குண்டு வெடிப்புகள் எல்லாம் இந்துத்துவ தீவிரவாதிகளின் ஏற்பாடு என்பதைக் கண்டறிந்தவர். அதன்பின்னர்தான் காவி தீவிரவாதம் என்ற சொல் உலக அரங்கில் புழக்கத்தில் வந்தது.



# கர்கரே

## கொலையில் புதிய திருப்பம்

சுருங்கச் சொன்னால் "இந்திய தீவிரவாதத்தின் உண்மை முகத்தை" உலகுக்கு உணர்த்தியவர்.

இவரைக் கொலைச் செய்தது அபிநவ் பாரத் என்ற சங்கப் பரிவாரத்தின் ஒரு கை! மத்திய உளவுத்துறையின் திட்டத்தின் கீழ்தான் இவர் கொலை செய்யப்பட்டார் என்பதை மராட்டிய காவல்துறையின் இன்னொரு அதிகாரியான எஸ்.எம். முஷ்ரிஃப் நிறுவுகின்றார் : ("Who Killed Karkare" The Real Face of Terrorism in India)

இந்த வகையில் எஸ்.எம். முஷ்ரிஃப் அவர்கள் முதலில் உச்ச நீதிமன்றத்திலும், பின்னர் உச்ச நீதிமன்றத்தின் வழிகாட்டுதலின் கீழ் மும்பை உயர் நீதிமன்றத்திலும் வழக்குகளைத் தொடர்ந்தார்கள். நீதிமன்றங்களில் நீதி கிடைக்கவில்லை என்பதனால் மக்கள் மன்றத்திற்கு வந்தார்.

தான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தவற்றையெல்லாம் ஒரு நூலாகத் தந்தார்கள். அதுதான் ("Who Killed Karkare" The Real Face of Terrorism in India) இந்த ஆங்கில நூலை தமிழில் "வேர்கள் பதிப்பகம்" வெளியிட்டது. கர்கரேயைக் கொலை செய்தது யார்? "இந்தியத் தீவிரவாதத்தின் உண்மை முகம்". இப்போதும் விற்பனையில், விலை ரூ. 200 /–

"கசாப்" என்ற அப்பாவி ஒருவரை தூக்கிலிட்டு மும்பைத் தாக்குதலின் மொத்த உண்மையையும் மறைத்து – உண்மையான குற்றவாளிகளை காப்பாற்றிட திட்டமிட்டிருந்தது மத்திய அரசு. அப்போது காங்கிரஸ்தான் மத்தியில் ஆட்சியிலிருந்தது.

உச்ச நீதிமன்றத்திற்கு முழு உண்மையையும் சொல்லிட வேண்டும். நீதியை நிலை நாட்டிட

வேண்டும் என்ற முனைப்போடு உச்ச நீதிமன்றத்திற்கு விரைந்தார் எஸ்.எம். முஷ்ரிஃப் அவர்கள், இராதகாந்த் யாதவ் என்ற சமூக ஆர்வலர் வழியாக!

அங்கே மிகச்சிறந்த மூத்த வழக்கறிஞரான ராஜூ இராமச்சந்திரன் என்ற வழக்கறிஞரை அணுகி முழு உண்மையையும் விளக்கினார் எஸ்.எம். முஷ்ரிஃப்! தேவையான ஆதாரங்கள் அனைத்தையும் தந்தார். அதை ராஜூ இராமச்சந்திரன் உச்ச நீதிமன்றத்தில் அனைத்தையும் சமர்ப்பித்தார்.

ஆனால், ஏற்கெனவே திட்டமிட்டிருந்தபடி, கசாப்–ஐ இரகசியமாகத் தூக்கிலிட்டு எல்லா உண்மைகளும் மண் தோண்டி புதைக்கப் பட்டன.

இந்த உண்மைகளை விளக்கி வேர்கள் வெளியீட்டகம் ஒரு நூலை வெளியிட்டிருக்கின்றது. அதன் பெயர் : ''கசாப்'–ஐ'' இரகசியமாகத் தூக்கிலிட்டது ஏன்?''

## மீண்டும் மக்கள் மன்றம்

உச்ச நீதிமன்றத்தில் தான் எடுத்த முயற்சிகள் பயன்தரவில்லை–நீதிநிலைநாட்டப்படவில்லை என்பதால் விரக்தியடைந்து ஓய்ந்திருக்கவில்லை எஸ்.எம்.முஷ்ரிஃப் அவர்கள். மீண்டும் மொத்த விவகாரத்தையும் மக்கள் மன்றத்தில் வைத்தார் ஒரு நூலாக அதுதான் 26/11 Why Judiciary Also Failed ? இந்த நூலையும் 'வேர்கள் பதிப்பகம்' தமிழ் கூறும் நல்லுலகத்திற்குத் தந்தது. **''26/11 நீதித்துறையும் மயங்கியது ஏன்?''**

## இன்னொரு முயற்சி

இத்தனை முறை தனது முயற்சிகளை நீதி மன்றங்கள் முனை மழுங்கச் செய்தாலும், மனந் தளரவில்லை. தனது இனிய நண்பர் நேர்மையான அதிகாரி ஹேமந்த் கர்கரே எப்படிக் கொலை செய்யப்பட்டார் ? என்பதைத் தொடர்ந்து அகழ்ந்தெடுத்துக் கொண்டே இருந்தார்!

அவரும் நாமும் சற்றும் எதிர்பாராத உண்மை ஒன்று இப்போது அம்பலமாகின்றது. அதனை இங்கே தருகின்றோம்.

உண்மையைச் சொன்னால், எஸ்.எம். முஷ்ரிஃப் அவர்கள் இப்போது அகழ்ந்தெடுத்த உண்மைகளுள் ஒன்று.

## கர்கரேயின் கொலையில் புதிய திருப்பம்

அண்மையில் அவர் நமக்கனுப்பிய தகவல்

''கர்கரேயின் கொலைக்குப் பின்னால் நடந்த பிரேத பரிசோதனையின், அறிக்கையை இப்போது கண்டெடுக்க முடிந்தது. இந்த அறிக்கை கர்கரேயின் மரணத்தைப் பற்றி பல புதிரான புதிய தகவல்களைத் தருகின்றது. திடுக்கிட்டுப்போனேன்.

கர்கரேயின் பிரேத பரிசோதனை அறிக்கை அன்று **26/11** மும்பை தாக்குதல் பற்றி தாக்கல் செய்யப்பட்ட குற்றப் பத்திரிகையின் ஒரு பகுதி என்றாலும், அதில் ஓர் பிரதியைப் பெறுவது இயலாத ஒன்றாகவே இருந்தது. ஆனாலும் நான் அதன் ஓர் உண்மை நகலை எடுத்துவிட்டேன். அதனை மிகவும் நுணுக்கமாக ஆய்வு செய்தேன். அதில் பின்வரும் உண்மைகள் தெரியவந்தன.

*1)* குற்றப் பத்திரிகையில் புனையப்பட்டபடி ஒரு அஜ்மல் கசாப் என்பவரும், இஸ்மாயில் கான் என்பவரும் தான், கர்கரேயின் மீது AK 47 ரக துப்பாக்கியால் சுட்டார்கள். ஆனால் உண்மையில் துப்பாக்கியால் சுட்டவர்கள், அபிநவ் பாரத் என்ற அமைப்பைச் சார்ந்தவர்கள். கர்கரே உள்ளிட்டவர்கள் ஒரு குவாலிஸ் காரில்தான் (Qualis Car) அங்கே கொண்டுவரப்பட்டார்கள். குவாலிஸ் காரில் கொண்டுவரப்பட்ட அனைவரும் கொலை செய்யப்பட்டுவிட்டார்கள். ஒரே ஒரு போலிஸ்காரரைத் தவிர.

*2)* கர்கரேயின் பிரேத பரிசோதனையின் அறிக்கையைப் படிக்கும்போது எதிர்பாராத ஓர் உண்மை அம்பலமாகின்றது. அது, ஐந்து ரிவால்வார் (கைத் துப்பாக்கி) குண்டுகள் அவருடைய கழுத்துப் பகுதியிலிருந்து கீழாகப் பாய்ச்சப்பட்டுள்ளன. குண்டுகளின் திசை கழுத்திலிருந்து தொடங்கி கீழாகச் செல்கின்றது. அந்த குண்டு உடலிலேயே இருந்தன. இரண்டு குண்டுகள் உடலில் ஆழமான பகுதியில் இறங்கி அமிழ்ந்திருந்தன. அவருடைய உடலில் வேறு எந்த குண்டுபட்ட காயங்களுமில்லை. பிரேத பரிசோதனையின் உண்மை நகலும் அதன் தட்டச்சு வடிவமும் இங்கே தரப்பட்டிருக்கின்றன.

உண்மை நகலுக்கு இங்கே கிளிக் செய்யவும்.

https://drive.google.com/file/d/1NWFATz7fGdtQ5rtRsgYQQdUk00ymnpN/view?usp=sharing




தட்டச்சுப் பிரதிக்கு இங்கே கிளிக் செய்யவும் https://drive.google.com/file/d/1ADI2FRV5Q1VzeXpGyWVKTi2phbOic6HB/view?usp=sharing).

அந்தக் குவாலிஸ் காரில் இருந்த வேறு யாருடைய உடலிலும் (Revolver) கைத் துப்பாக்கியால் சுட்ட குண்டுகள் இல்லை.

3) இதிலிருந்து பெறப்படும் உண்மை என்ன வெனில் அவர் அணிந்திருந்த குண்டு துழைக்காத மேலாடை தீவிரவாதிகளின் குண்டுகளிலிருந்து காப்பாற்றியே இருக்கின்றது. (ஆனால் அந்தக் கவசத்தைக் காணாமல் ஆக்கிவிட்டார்கள்.) தீவிரவாதிகள் தங்கள் தாக்குதலை முடித்தவு டனேயே ஏதோ ஒருவர் அந்தக் குவாலிஸ் காரின் உள் (ஊர்தியின் உள்)புகுந்து தன்னுடைய கைத் துப்பாக்கியால் கர்கரே மீது குண்டுகளை பாய்ச்சி இருக்கின்றார். புல்லட்கள் – குண்டுகள் – கர்கரே அணிந்திருந்த குண்டு துழைக்காத மேலாடை யின் காலர் பகுதியிலுள்ள சிறிய இடைவெளி வழியாக (அவருடைய கழுத்திற்கும்) பாய்ச்சப் பட்டுள்ளன.

இதில் மிகப்பெரிய வேதனை என்னவெனில் இந்த பிரேத பரிசோதனை அறிக்கையை வழக்கை விசாரித்த மூன்று நீதிமன்றங்களும் தங்களது தீர்ப்பில் கண்டுகொள்ளவில்லை.

அந்த மூன்று நீதிமன்றங்கள், முதலில் விசாரித்த விசாரணை நீதிமன்றம் (Trial Court) உயர்நீதிமன்றம், உச்ச நீதிமன்றம்.

இதுபோன்ற அப்பட்டமான அநியாயங்கள், மர்மங்கள் – கர்கரேயின் மரணத்தில் இருக்கின் றன. அதனால் அவருடைய மரணம், மறு ஆய்வுக்கு உட்படுத்தப்பட வேண்டும்.

என்னுடைய ஆய்வில், கர்கரேயின் கழுத்தில் அந்தக் குண்டுகளைப் பாய்ச்சியவர் மும்பை துணை காவல்துறை ஆய்வாளர் (இப்போது துணை ஆணையர்) சஞ்சய் கொவல்கர் (Sanjai Gowalkar) தான். அதனால் கர்கரேயின் மரணம் முற்றிலும் புதிய மறு ஆய்வுக்கு உட்படுத்திட வேண்டும்.

இந்த வகையில் நான் நிறைவான ஆதாரங் களுடன் மராட்டிய மாநில தலைமைச் செய லாளருக்கு ஓர் அறிக்கையை 19, நவம்பர் – 2019 இல் விரைவு தபாலில் (Speed Post-இல்) அனுப்பி உள்ளேன். ஒரு வருடம் கடந்துவிட்டது. எதுவும் நடக்கவில்லை.

IPS Association என்ற ஐ.பி.எஸ். காவல்துறை அதிகாரிகளின் சங்கம் இந்த வழக்கை எடுக்க வேண்டும்.

– எஸ்.எம்.முஷ்ரிஃப்

# குர்ஆனின் வசன அமைப்புகள்



குர்ஆனின் முன்பின் வசனங்கள் ஒன்றுக்கொன்று தொடர்பற்றவை என்ற மிக நீண்ட கால விமர்சனத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கும் வண்ணம் பல அறிஞர்கள் குர்ஆனின் வசன அமைப்புகளை ஆராய்ச்சி செய்து அதன் தொடர்புகளை விளக்க முயற்சித்துள்ளனர். அந்த வரிசையில் இக்கட்டுரையும் எழுதப்படுகிறது. மேலும் வசனங்களின் அமைப்பை விளங்கி கொள்வதன் மூலம், அதன் உள்ளார்ந்த அர்த்தத்தை மென்மேலும் புரிந்து கொள்வதற்கும் இக்கட்டுரை உதவும் என நம்புகிறேன்.

## மூன்று விதமான முறைகளில் குர்ஆனின் வசன அமைப்புகள் இருக்கின்றன என்று கூறப்படுகிறது.

*1)* இணை அமைப்பு: வசனங்கள் AB/A'B' என்ற அமைப்பில் இருக்கும். அதாவது முதலில் ஒரு கருத்தை மையப்படுத்தும் வசனங்கள். அதன்பின்பு மற்றொரு கருத்தை வயப்படுத்தும் வசனங்கள். இதற்கு அடுத்ததாக மீண்டும் முதல் கருத்தையே மையப்படுத்தும் வசனங்கள். அதனை தொடர்ந்து இரண்டாவது கருத்தை மையப்படுத்தும் வசனங்கள். இந்த அமைப்பு நீண்டு கொண்டே செல்லலாம். அதாவது ABC/A'B'C' , ABCD/A'B'C'D'.

*2).* முரண்தொடர்அணி: வசனஅமைப்புகள் ABCD/D'C'B'A' என்ற வடிவில் இருக்கும்.

*3)* பொதுமைய வளைய அமைப்பு: இதுவும் முரண் தொடர் அணியை போன்றதுதான். எனினும் மையத்தில் தனித்துவமான கருத்து கூறப்பட்டிருக்கும். AB/C/B'A' , ABC/D/C'B'A'.

குர் ஆனின் ஒவ்வொரு அத்தியாயத்திலும் இதுபோன்ற வசன அமைப்புகள் காணப்படுகின்றன. அதன் மூலம் வசனங்கள் ஒன்றுக்கொன்று பிணைந்தவையாகவும், இறுக்கமான கட்டமைப்பையும் கொண்டுள்ளன.

இந்த மூன்று வடிவ அமைப்புகளிலும் இறுதியாகக் கூறப்பட்ட பொதுமைய வளைய அமைப்பே குர்ஆன் முழுமைக்கும் பெரும்பாலும் காணப்படுகிறது. ஆரம்பித்த இடத்திற்கே வந்து வசனங்கள் முடிவதன் மூலம் ஒரு வளையத்தை ஏற்படுத்துகின்றன வசனங்கள். ஆரம்பத்தில் கூறப்பட்ட அதே வார்த்தையை அல்லது வாக்கியத்தை முடிவிலும் மீண்டும் கூறுவதன் மூலம் ஒரு தொடர்பு ஏற்படுத்தப்படுகிறது. மேலும், கருத்து ஒற்றுமையும் ஆரம்பத்திலும் முடிவிலும் காணப்படுகின்றன. மையத்தில் கூறப்பட்டிருக்கும் கருத்திற்கு அதிக கவனம் செலுத்துவது தான் இதுபோன்ற வசன அமைப்புகளின் நோக்கம் என்கிறார் மேரி டக்ளஸ். வளைய அமைப்பாக பிரிக்கும் வசனங்களுக்கு உள்ளும் மீண்டும் குறுகிய வளைய அமைப்புகள் காணப்படுகின்றன.

குர்ஆனின் மிக நீண்ட அத்தியாயமான அல் பகரா விலிருந்து வசன அமைப்பை புரிந்து கொள்ள முயற்சி செய்வோம்.

அத்தியாயம் பசு-வில் காணப்படும் பெரும்பாலான வசனங்கள் கிபி *622* இல் மதினாவிற்கு நபி (ஸல்) அவர்கள் ஹிஜ்ரத் செய்த பின்பு அருளப்பட்டதே.

அனைத்து புறத்திலிருந்தும் எதிர்ப்புகள் சீறி வந்தபோது, சொந்த ஊரான மக்காவிலிருந்து வெளியேறும் நிலைக்கு தள்ளப்பட்டார்கள் நபி (ஸல்) அவர்கள். மக்கா உடன் ஒப்பிடும்போது இஸ்லாம் மார்க்கத்தினை வரவேற்கும் சூழ்நிலை மதினாவில் நிலவிய போதும், நிலைமை எப்பொழுது வேண்டுமானாலும் மாறிவிடும் என்ற ஒரு நெருக்கடியான நிலையே நிலவியது. ஓர் இறைவனை வணங்குவதற்காக கட்டி எழுப்பப்பட்ட இறையில்லமான கஅபா வில் சிலை வணக்கம் நடந்துகொண்டிருந்தது. புனித யாத்திரைக்கு செல்ல முயன்ற முஸ்லிம்களின் உயிர்கள் ஆபத்தை எதிர் கொண்டன. மதீனா யூத,

கிறிஸ்தவர்களிடம் இருந்து சவால்களும் சச்சரவுகளும் வந்துகொண்டிருந்தன. அந்த சமயத்தில் முஸ்லிம்களை அழுத்திக் கொண்டிருந்த பிரச்சினைகளின் தீர்வுகளைப் பற்றி பேசின அத்தியாயம் பசுவில் கூறப்பட்டிருந்த வசனங்கள். ஒன்பது வருடங்களாக இந்த அத்தியாயத்தின் வசனங்கள் இறக்கப்பட்டுள்ளன.

அப்பொழுது கடைபிடிக்கபட்டிருந்த யூத கிறிஸ்தவ சமயத்திலிருந்து இஸ்லாம் எப்படி வேறுபடுகிறது என்பதையும் முஸ்லிம்கள் ஒரு நடுநிலையான சமுதாயம் என்பதையும் இந்த அத்தியாயத்தின் வசனங்கள் எடுத்து கூறின. மேலும், மக்கா வாழ் ஓரிறை நிராகரிப்பாளர்களுடன் ஏற்படவிருந்த இராணுவ மோதலுக்கு முஸ்லிம்களை தயார்படுத்தின.

அத்தியாயம் 2 I ஒன்பது பாகங்களாக பிரிக்கலாம்.

A (1-20) இறை நம்பிக்கை Vs இறை நிராகரிப்பு

B (21-39) இறைவனின் படைப்பு. அனைத்தையும் சூழ்ந்துள்ள அவனது அறிவு (இங்கே ஆதமும், அவர் துணைவியரும் செய்த பாவம்)

C (40-103) இஸ்ரவேலர்களின் சந்ததிகளுக்கு நபி மூசா சட்டத்தை வழங்குதல்

D (104-141) நபி இப்ராஹிம் சோதிக்கப் பட்டார். நபி இப்ராஹீமும் இஸ்மாயிலும் கஅபாவை கட்டி எழுப்புதல். வேதம் வழங்கப்பட்டவர்களுக்கு பதில்

E (142-152) கஅபா: புதிய கிப்லா. யார் நம்பிக்கை கொண்டுள்ளனர் என்பதை சோதிப்பதற்காக கிப்லா மாற்றம். நன்மை செய்வதில் முந்துங்கள்.

D '(153-177) முஸ்லிம்களும் சோதிக்கப்படுவார்கள். கஅபா, ஸஃபா, மினா. பல கடவுள் கோட்பாட்டளர்களுக்கு பதில்

C'(178-253) நபி (ஸல்) அவர்கள் முஸ்லிம்களுக்கு சட்டங்களை வழங்குதல்

B'(254-284) இறைவனின் படைப்பு. அனைத்தையும் சூழ்ந்துள்ள அவனது அறிவு (இங்கே தர்மம், பணம் கொடுக்கல், வாங்கல்)

A'(285-286) இறை நம்பிக்கை Vs இறை நிராகரிப்பு

ஒவ்வொரு பாகத்தையும் தனித்தனியாக பார்க்கலாம். மேலும் இந்த அத்தியாயத்தின் உடைய வசனங்களின் ஒற்றுமையும் அதன் முக்கிய செய்திகளையும் பார்க்கலாம்.

ஆரம்பப் பகுதி, நடுப்பகுதி, முடிவு பகுதி (A,E,A') இவை தவிர மற்ற எல்லா பகுதிகள்/ பாகங்களின் ஆரம்ப வசனங்கள் விழித்துக் கூறும் பார்முலாவை கொண்டுள்ளன. (அதாவது மனிதர்களே, இஸ்ராயீலின் சந்ததியினரே, நம்பிக்கையாளர்களே). மேலும் எல்லாப் பாகங்களின் இறுதி வசனங்கள் நம்பிக்கையையோ, இறை மறுப்பையோ, அதன் விளைவுகளையோ அல்லது தவறு செய்பவர்களை தண்டிக்கும் வல்லமை பெற்றவன் இறைவன் என்பதையோ குறிக்கும் வசனங்களாக உள்ளன.

A(1-20):

அலிப், லாம் மீம் என்ற எழுத்துக்களுடனும் இறைவனை அஞ்சுபவர்களுக்கு குர்ஆன் வழிகாட்டியாகும் என்ற உறுதி மொழியுடன் ஆரம்பிக்கிறது வசனங்கள்.

இதற்கு முந்தைய அத்தியாயமான தோற்றுவாயின் (அல் ஃபாத்திஹா) இறுதி வசனங்கள் நேர் வழியை காண்பிக்க சொல்லி கோரின. அல்பகரா அத்தியாயத்தின் ஆரம்ப வசனங்கள் குர்ஆன் நேர் வழிகாட்டியாகும் என்று கூறி முந்தைய அத்தியாயத்துடன் தொடர்பை ஏற்படுத்துகிறது.

முதல் பாகத்தை A(1-20) மீண்டும் இரு சிறிய பாகங்களாக (வளைய அமைப்புகளாக) பிரிக்கலாம்.

*1−2:* குர்ஆன் நேர் வழிகாட்டியாகும்

*3−4:* ... நம்பிக்கையாளர்களுக்கு

*5:* அவர்கள் இறைவனின் நேர்வழியை பின் பற்றுபவர்கள். அவர்களே வெற்றி பெறுபவர்கள்

*6−7:* இறைவனை நிராகரிப்பவர்கள் நம்பிக்கை கொள்ள மாட்டார்கள். இறைவன் அவர்களின்

செவிப்புலன்கள் மீது முத்திரை வைத்துவிட்டான். அவர்களின் பார்வைகளின் மீதும் திரையிடப்பட்டு விட்டது.

*8–14:* சிலர் நம்பிக்கை கொண்டுள்ளோம் என்று கூறுவர். ஆனால் அவர்கள் நயவஞ்சகர்கள்.

*15–20:* அவர்கள் செவிடர்களாகவும் குருடர்களாகவும் இருக்கின்றனர். அவர்களின் கேள்வி புலன்களையும் பார்வைப் புலன்களையும் இறைவன் பறித்து விடுவான்.

B (21-39) :

யாரையும் குறிப்பிட்டு இப்பகுதியின் வசனங்கள் அமையவில்லை என்றாலும் அதனுடைய பொருளிலிருந்து நிராகரிப்பாளர்களை தான் வசனங்கள் குறிக்கின்றன என்பதை புரியலாம். உங்களைப் படைத்த இறைவனை வணங்குங்கள் என்று அறிவுரை கூறுகிறது, ஆர்வமூட்டுகிறது. இது இறைவனுடைய வேதம் தானா என்ற சந்தேகத்தில் இருப்பவர்கள் இதைப்போன்று ஒரு அத்தியா யத்தை கொண்டு வாருங்கள் என்று சவால் விடுகிறது. பூமியில் உள்ள அனைத்தையும் உங்களுக்காக படைத்தான். வானங்களைப் படைத்தான். உயிர் அற்றவராக இருந்த உங்களை உயிர்ப் பித்தான். அப்படி இருக்கும் பொழுது எவ்வாறு நம்ப மறுக்கிறீர்கள்?. அதனைத் தொடர்ந்து ஆதமின் படைப்பையும் அவரை பூமியில் பிரதிநிதியாக ஆக்கிய தையும், அவர் செய்த பாவத்தையும், அதனைத் தொடர்ந்து கேட்ட பாவமன்னிப்பையும், பின்பு மன்னிக்க படுவதையும் அடுத்தடுத்த வசனங்கள் கூறுகின்றன. நிராகரிப்பவர்களுக்கு நரக நெருப்பு உண்டு என்பதை மறுபடியும் கூறி இப்பகுதியின் வசனங்கள் நிறைவு பெறுகின்றன.

*21–24:* மனிதர்களுக்கான அறிவுரை, ஆர்வ மூட்டுதல்: உங்களைப் படைத்த இறைவனை வணங்குங்கள். இறைச்செய்தியில் சந்தேகம் இருந்தால் இதைப்போன்று கொண்டு வாருங்கள். நரக நெருப்பை பற்றி பயந்து கொள்ளுங்கள்.

*25:* நம்பிக்கை கொண்டு நற்கருமங்கள் செய்பவர்களுக்கு சுவனங்கள் தயார் செய்யப் பட்டுள்ளன. அங்கு தூய துணைகளும் உண்டு. தங்குமிடமும் உண்டு.

*26–29:* நிராகரிப்பவர்களை நோக்கி கேள்வி: உங்களையும் வானங்களையும் பூமியையும் படைத்த இறைவனை எப்படி நம்ப மறுக்கிறீர்கள்.

*30–38:* சுவனத்தில் இருந்து ஆதமும் அவரின் மனைவியும் வெளியேற்றப்படுதல். ஆதமின் பாவமன்னிப்பை இறைவன் ஏற்றுக்கொள்ளுதல். நேர்வழியைப் பின்பற்றுபவர்களுக்கு எவ்வித கவலையும் இல்லை.

*39:* நம்பாமல் இறைவனின் அத்தாட்சிகளை பொய் என்று கூறுபவர்களுக்கு நரக நெருப்பு உண்டு.

**C (40-103):**

இஸ்ராயீலின் சந்ததிகளை குறித்துதான் பெரும்பாலும் இப்பாகம் பேசுகிறது.

*40–46:* இறைவனின் வேதத்தின் மீது நம்பிக்கை கொள்ளுங்கள் என்ற அறிவுரை. அவனை அஞ்சுங்கள். நன்மையை ஏவி விட்டு நீங்கள் மறந்து விடுகிறீர்களா? ஆகிய கருத்துக் களை இப்பகுதி உள்ளடக்கியுள்ளது.

*47–96:* நீண்ட மத்திய உட்பகுதி இது, வரலாற்றில் இறைவன் அவர்களுக்கு புரிந்த அருட்கொடை, அவனின் மன்னிப்பு, ஒப்பந்தத்தை மீறிய அவர்களின் செயல்கள் ஆகிய வற்றை நினைவு படுத்துகிறது.

*97–103:* ஜிப்ரீலுக்கு யாரெல்லாம் எதிரியோ அவர்கள் இறைவனுக்கும் எதிரி. முந்தைய வேதங்களை மெய் படுத்துவதற்காக இறைச் செய்தியை ஜிப்ரீல் கொண்டு வருகிறார். இஸ்ராயீலின் சந்ததிகளில் பெரும்பாலோர் இதில் நம்பிக்கை கொள்வதில்லை.

மூசா நபியையும் இஸ்ராயீலின் சந்ததிகள் செய்த வரம்பு மீறிய செயல்களையும் மத்திய உட்பகுதி நினைவு கூறுகிறது. ஆரம்பத்தில் இறைவன் அவர்களுக்கு புரிந்த அருட்கொடைகளை மறந்து, இறைச் செய்தியை உதாசீனம் செய்து வழிதவறி சென்றனர். காளைக் கன்று பற்றி இரண்டு முறை கூறப்பட்டுள்ளது. மீண்டும் காளைக் கன்றை பற்றி இரண்டு முறை கூறப்பட்டுள்ளது. (வசனங்கள்

*51, 54,– 92, 93).* இது வளைய அமைப்பை குறிக்கிறது. நம்மை வசனங்களுக்கு மத்தியில் என்ன கூறப்பட்டுள்ளது என்பதை நோக்கி திருப்புகிறது. மத்திய பகுதியில் பசு மாட்டின் உதாரணங்களை கூறுவதை காணலாம். (வசனங்கள் *67– 74).* பசு மாட்டின் பெயராலேயே இந்த அத்தியாயம் அழைக்கப்படுகிறது. மூசா நபி கொண்டுவந்த கட்டளையை நிராகரிக்க யூதர்கள் என்னவெல்லாம் கூறினார்கள் என்பதைத்தான் இந்த வசனங்களில் கூறப்பட்டுள்ள உவமைகள் விளக்குகின்றன. பசுமாட்டை பலியிட விருப்பமில்லாமல் அல்லது அந்த கட்டளைக்கு செவி சாய்ப்பதற்கு மனமில்லாமல் கேள்விமேல் கேள்விகளை கேட்டுக் கொண்டிருந்தனர். அடுத்துவரும் வசனங்கள் அவர்கள் மறைத்தவற்றை அல்லாஹ் வெளியாக்குவான் என்றும் அவர்களின் இதயங்கள் இறுகி விட்டன என்றும் அறுதியிட்டு கூறுகின்றன. (வசனங்கள் *72–74).* உங்களுக்காக அவர்கள் நம்பிக்கை கொள்வார்கள் என்று நீங்கள் எதிர் பார்க்கிறீர்களா என்று முஸ்லிம்களிடம் இறைவன் கேள்வி நயத்துடன் விளக்குகின்றான். (வசனங்கள் *75–82).*

முஸ்லிம்களின் கண்ணோட்டத்தில் பாகம் C-இன் மத்திய பகுதியானது இஸ்ரவேல் சமூகத்தின் இரண்டு முக்கிய தவறுகளை எடுத்துக்காட்டுடன் விளக்குகிறது. இறைத்தூதர்களை நிராகரிக்கும் பண்பு, மார்க்கத்தை பொதுவாகவே அவர்கள் அணுகும் முறை. மதீனாவிலும் இறை தூதரிடம் கேள்விகளை கேட்டுக்கொண்டே இருந்தனர். இந்த வசனங்களின் உவமைகள் அதைத்தான் குறிப்பிடுகின்றன.

மேலும் முஹம்மது நபியின் காலத்திலும் அவர்களின் குற்றத்தை இறைவன் வெளியே கொண்டு வருவான் என்பதையும் வசனங்களில் கூறப்பட்டுள்ள உவமானங்களிலிருந்து புரிந்து கொள்ளலாம். மார்க்கத்தை பின்பற்றுவதற்காக அவர்கள் அதைக் கேட்கவில்லை. இறைத் தூதரையும் இறைச் செய்தியையும் லேசாக எடுத்துக் கொண்டனர்.

பாகம் C இன் இறுதிப் பகுதியை ஒரு சிறிய வளைய அமைப்பாக எடுத்துக்கொள்ளலாம். அவை நம்பிக்கை, நிராகரிப்பை பற்றிப் பேசுகின்றன.

*97:* இறைத்தூதருக்கு வேதம் வழங்கப்பட்டுள்ளது. அது முன்னுள்ள வேதங்களை உண்மைப் படுத்துகின்றது.

*98:* சத்தியத்தை மறுப்பவர்களுக்கு இறைவன் எதிரியாவான்

*99:* பாவிகளே கீழ்படிய மறுப்பவர்கள்.

*100:* இஸ்ராயில் சந்ததிகளின் பெரும்பாலோர் சத்தியத்தை மறுப்பவர்கள்

*101:* முன்னுள்ள வேதங்களை உண்மை படுத்தும் விதமாக இறைத்தூதர் சுலைமான் இறை செய்தியை கொண்டு வந்தார். ஒரு கூட்டம் அதனை நிராகரித்தது.

C பகுதியின் முதல் ஏழு வசனங்களில் கூறப்பட்டுள்ள அதே கருத்துக்களை/வார்த்தைகளை கொண்டே C பகுதியின் கடைசி ஏழு வசனங்கள் அமைகின்றன. நம்பிக்கை, நிராகரிப்பு *(41; 97–103).* முந்திய வேதங்களை உண்மைப்படுத்தும் விதமாக வந்துள்ள இறைச்செய்தி *( 41; 97–101).* மேலும் இலக்கிய நயத்துடன் வரும் வினைச்சொல்லான தஹ்லமூன் (நீங்கள் அறிந்து கொண்டே) அதே போன்ற இலக்கிய நயத்துடன் யஹ்லமூன் (அவர்கள் அறிந்து) என்று கடைசி மூன்று வசனங்களில் *(101–103)* கூறப்பட்டுள்ளது. இப்பகுதியில் வேற எந்த இடத்திலும் இந்த வார்த்தைகள் பயன்படுத்தப்படவில்லை.

சுருக்கமாக,

*40–46:* இறை வேதத்தை நம்புங்கள் என்று இஸ்ராயில் சந்ததிகளுக்கு அறிவுரை

*47–66:* காளைக் கன்று

*67–82* பசுமாடு

*83–96* காளைக் கன்று

*97–103:* இஸ்ராயில் சந்ததிகளில் பெரும் பாலோர் நம்பிக்கை கொள்ள மாட்டார்கள்.

– இன்ஷா அல்லாஹ் தொடரும்

– அபூஹாசின்

# கொரோனா காலத்தில் மூத்தோர் நலம்!

- டாக்டர், முனைவர் ஸ்ரீ.வ.செ. நடராஜன்



## கொரோனோ காலத்தில் முதியவர்கள் என்ன செய்ய வேண்டும் / என்ன செய்யக் கூடாது?

### செய்ய வேண்டியவை

■ அவசியமானால் மட்டுமே வெளியே செல்ல வேண்டும். முகக் கவசம் அணிய வேண்டும்.

■ முறையாக அடிக்கடி கை கழுவ வேண்டும்.

■ சமூக இடைவெளியைத் தவறாமல் கடைப் பிடிக்க வேண்டும்.

■ தங்களுக்கு உள்ள நோயைக் குறைத்தோ அல்லது மிகைப்படுத்தயோ பார்க்காமல் மருத்துவரின் ஆலோசனைப்படி கட்டுக்குள் வைத்திருக்கவும்.

■ சிறிது நேரம் நடைப்பயிற்சி, முடிந்தால் வெயிலில் செல்வது நல்லது.

■ தினமும் தவறாமல் காலையிலும் மாலை யிலும் மூச்சுப் பயிற்சி செய்யவும். மூச்சை உள்ளே இழுக்கும் போது வயிறு நன்றாக மேலே வர வேண்டும். மூச்சை வெளியில் விடும்போது வயிற்றுப் பகுதியை முழுமையாக உள்ளே இழுக்க வேண்டும். நுரையீரல் நன்றாக சுருங்கி விரிவடைய இது உதவும். கொரோனா முதலில் தாக்குவது தொண்டை, பின்பு நுரையீரல். இப்பயிற்சியை தவறாமல் செய்தால் நுரையீரல் ஆரோக்கியமாக இருக்கும்.

■ புதிதாக சமைத்த உணவை சாப்பிடவும். ஃபிரிட்ஜில் வைத்த உணவை முடிந்தவரை தவிர்க் கவும். வெளி உணவு வேண்டவே வேண்டாம்.

■ தண்ணீரை சற்று அதிகம் பருக வேண்டும்.

### செய்யக்கூடாதவை

■ தேவையற்ற மரண பயம் கூடாது.

■ விழாக்கள் மற்றும் பொது நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதை தவிர்க்கவும்.

■ ஏர்கண்டிஷனை மிகவும் குறைந்த அளவில் தொடர்ந்து வைத்திருப்பது.

■ அவசரமில்லாத அறுவை கிசிச்சைகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பது. உதாரணம் : கண்புரை அறுவை சிகிச்சை.

## நிமோனியா தடுப்பூசியால் கொரோனாவைத் தடுக்க முடியுமா?

தடுக்க முடியாது. பாக்டீரியா தொற்றால் வரும் நிமோனியாவைத் தடுக்கவே நிமோனியா தடுப்பூசி உதவும். கோவிட்–19 போன்ற வைரஸ் தொற்றால் வரும் கொரோனா நிமோனியாவைத் தடுக்க முடியாது.

## கொரோனா காலத்துக்கு சரியான உணவு எது?

■ இதற்கு உணவுப் பத்தியம் ஏதுமில்லை.

■ உடற்பயிற்சி குறைவதால் உடல் எடை அதிகரிக்க வாய்ப்புண்டு. எனவே, அரிசி சாதம் குறைத்து, சிறுதானிய உணவுகளை அதிகமாக்கிக் கொள்ளலாம்.

■ நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்க நெல்லிக் காய், ஆரஞ்சு, எலுமிச்சை, கொய்யா, பாதாம் போன்ற கொட்டை வகைகள், தேன், பூண்டு, இஞ்சி, மிளகு, மஞ்சள் போன்றவற்றை உணவில் அதிகம் சேர்த்துக் கொள்ளலாம்.

■ அசைவ உணவை உண்பதில் தவறில்லை. ஆனால், முழுமையாக சுத்தப்படுத்திய புதிய

உணவாக இருக்க வேண்டும்.

## குடும்பத்தில் மூத்தோர்கள் எப்படி இருக்க வேண்டும்...

இளைஞர்கள் பல பிரச்சனைகளுடன் இருப்பார்கள். அவசியமான அறிவுரை என்றால் மட்டும் தக்க சமயம் பார்த்துக் கூற வேண்டும். குடும்பப் பெண்களுக்கு வேலைப்பளு அதிகமாக இருக்கும். அவர்களுக்கு சிரமம் கொடுக்காமல், கிடைத்ததை சாப்பிடுங்கள். குழந்தைகளிடம் இடைவெளி விட்டு அமர்ந்து நல்ல கதைகளைச் சொல்லுங்கள். கேரம், தாயம் மற்றும் பரமபதம் போன்ற விளையாட்டுகளை குழந்தைகளோடு விளையாடுங்கள்.

கொரோனா பாதிப்பு ஏற்பட்டால் மணமும், ருசியும் குறையும் என்கிறார்கள். இதற்கு கொரோனாவைத் தவிர வேறு காரணங்கள ஏதாவது உண்டா?

மணமும், ருசியும் குறைய கொரோனா வைத் தவிர மறதி நோய், பார்க்கின்சன்ஸ் என்கின்ற உதறுவாதம், மூளையின் முன் பகுதியில் ஏற்படும் கட்டி, நாள்பட்ட சைனஸ் நோய் ஆகியவையும் காரணமாக இருக்கலாம். ஒரு சில மூக்கு தெளிப்பான்களும் (Nasal Spray) இதை ஏற்படுத்தலாம்.

கொரோனா தொற்றலர் பாதிக்கப்பட்டவர் களில் பலர் தங்களின் நுகரும் சக்தியை இழப்ப தாக ஆய்வுகள் சொல்கின்றன. எனவே மக்களின் நுகரும் திறனை பரிசோதித்து கொரோனாவை ஆரம்பத்திலேயே கண்டறிய முயற்சிக்கலாம். இதற்கு ரோஜா, மல்லிகை, ஊதுபத்தி போன்ற வற்றைப் பயன்படுத்தலாம். ■

# சும்மா கேளுங்கள்....

வயதில் மூத்தவர்கள் நேரிலோ, தொலைபேசியிலோ நிறைய பேசினால் பரவாயில்லை. பொறுமையாகக் கேளுங்கள். திரும்பத் திரும்ப பேசினாலும் பரவாயில்லை, கேளுங்கள். சின்ன விஷயத்தைப் பெரிதுப்படுத்திப் பேசினால் பரவாயில்லை, கேளுங்கள். சுய தம்பட்டமாக, வாய்ச்சவடாலாக பேசினால் பரவாயில்லை, கேளுங்கள். அறிவுரையாக, இடித்துரைப்பதாக பேசினால் பரவாயில்லை, கேளுங்கள். எதைப் பேசினாலும் சரி, சும்மா கேளுங்கள்.

கொரோனாவால் எல்லோரையும் விட வயது முதிர்ந்தவர்களுக்குத்தான் பாதிப்புகள் அதிகம். அவர்கள் இழப்பது ஏராளம். இன்று நம்மிடம் இருந்து அவர்களுக்கு தேவைப்படுவதும், நம்மால் அவர்களுக்குக் கொடுக்க முடிவதும், ஒன்றுதான்! அது, ‘உம்’ கொட்டியபடி அவர்கள் சொல்வதை எல்லாம் பொறுமையாகக் கேட்பது மட்டும்தான்.

ஒருவேளை இதை நீங்கள் இன்று செய்யாமல் போனால், மீண்டும் இந்த வாய்ப்பு உங்களுக்குக் கிடைக்காமலே போகலதம். காலமெல்லாம் கடமை தவறியது குறித்து நீங்கள் வருந்தவும் நேராலம்.

– இளங்கோவன் கீதா

# அதுவே சொர்க்கம்!

கனிவான சொல்லும் காரமில்லா உணவும், அளவான மருந்துகளும் அளவளாவ நட்பும், சூழல் பழிக்கும் மழலையோடு பேரன் பேத்தியும் பழகிய வீட்டிலேயே வளையவரும் பேறும், சொன்னதையே சொன்னாலும் சலிக்காத மகனு(ளு)ம், சொன்னதெல்லாம் மறந்தாலும் அலுக்காத மருமகளு(னு)ம், வலைத்தளத்தில் சற்றுப் பரிச்சயமும், வற்றாத சேமிப்பும், தளராத மனமும், துணை பிரிந்தபின் நீளாத வாழ்வும், இறக்கும் வரை இறை துதிக்கும் மனமும் போதும். இறைவனை சேரும் வரை அதுவே சொர்க்கம்.! – திருமதி. ஹேமா நரசிம்மன், சென்னை.

– நன்றி : முதுமை எனும் பூங்காற்று



## உச்ச நீதிமன்றத்தின் தாழ்ச்சியும் வீழ்ச்சியும் – 4

# கோவிட்-19 ம் உச்ச நீதிமன்றமும்

## இரண்டாம் பாகம்

### பல சட்டப் பிரச்சனைகள்

உச்ச நீதிமன்றம், தன் பொறுப்பை, பொறுப்பற்ற முறையில் தட்டிக் கழித்த பின்னர், நாம் உச்ச நீதிமன்றத்தைப் பற்றிய பல்வேறு விமர்சனங்களை ஏறெடுத்துப் பார்த்திட வேண்டியவர்கள் ஆகின்றோம்.

முதலில், இதுபோன்ற தேசிய பேரிடர்– பெருந் தொற்றுக் காலத்தில் ஓர் அரசு என்ன செய்திட வேண்டும்? குறிப்பாக குடிமக்களின் அடிப்படை உரிமைகள் விவகாரத்தில் எப்படி நடந்திட வேண்டும்? வழிகாட்டும் கொள்கைகள் விவகாரத்தில் எப்படி நடந்திட வேண்டும்?

இன்னும் குறிப்பாக இதுபோன்ற பெருந் தொற்று, பேரிடர் காலங்களில் ஏழைகள், வாழ்வைத் தேடி புலம் பெயர்ந்தவர்கள். இவர்கள் விவகாரத்தில் ஓர் அரசு எப்படி நடந்திட வேண்டும்? என்ற வினாக்கள் வரிசையாக வருகின்றன.

### "INTRO" நுழையுமுன்

அன்பார்ந்த வாசகர்களே!

இந்தக் கட்டுரை பொதுமக்களுக்குத் தெரியாத பல அடிப்படை உரிமைகளைப் பற்றிப் பேசுகின்றது. இவற்றை எல்லா மக்களுக்கும் புரிய வைப்பது நமது கடமையாகும்.

பொது வாழ்விலும், மக்கள் சேவையிலும் இருப்பவர்கள் இவற்றை அவசியம் தெரிந்திருக்க வேண்டும்.

அதனால் இதனை பரவலாக்குங்கள். நமது நாட்டை வேட்டைக்காடாய் ஆக்கி காட்டுமிராண்டிகளின் காலத்திற்கு அழைத்துச் செல்லும், பாசிச சக்திகளுக்கு தூபம் போடுகின்றது நீதித்துறை. அதனைத் தூக்கி நிமிர்த்திப் பணியை நாட்டை உண்மையிலேயே காப்பாற்றிட நினைக்கும் நல்ல உள்ளங்கள் செய்து வருகின்றன. அவற்றுள் ஒருவர் மிகிர் தேசாய்.

நமது உச்ச நீதிமன்றத்தின் மூத்த வழக்கறிஞர் பிரசாத் பூஷன் அவர்கள். உச்ச நீதிமன்றத்தின் இன்றைய போக்கை இடித்துக் காட்டுவது. எடுத்துச் சொல்வது. இந்த நாட்டின் உண்மையான குடிமகன் என்ற அடிப்படையில், என் அடிப்படை கடமை என்கின்றார். (ஆதாரம் வழக்கறிஞர் பிரசாத் பூஷன் அவர்கள், உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்த ஆவணம். Live Law in)

கொரோனா காலத்தில் உச்ச நீதிமன்றம் தனது பொறுப்பை தட்டிக் கழித்தே வந்தது. ஆனால், நமது சட்ட வல்லுநர்களும், பத்திரிகையாளர்களும் தொடர்ந்து, தங்கள் எதிர்ப்பை உச்ச நீதிமன்றத்தைப் பற்றிய விமர்சனத்தை, ஊடகங்கள் வாயிலாக வெளிப்படுத்தி வந்தார்கள்.

ஆனாலும், உச்ச நீதிமன்றம் கண்டுகொள்ள வில்லை. இறுதியில் நாட்டை பாசிச சக்திகள் பிடியிலிருந்து மீட்பதால் அக்கறை கொண்டவர்கள் எல்லோரும் இணைந்து பல கடிதங்களை உச்ச நீதிமன்றத்திற்கு அனுப்பினார்கள். அதன்பின்னர்தான் கொரோனா விவகாரங்களில் உச்ச நீதிமன்றம் தலையிட்டது.

இந்த கடிதங்கள் ''வைகறை வெளிச்சம்'' இடமிருக்கின்றது. அவற்றை எதிர்வரும் இதழ்களில் வெளியிடுவோம். – இன்ஷாஅல்லாஹ்.



உணவு பெறும் உரிமை அடிப்படை சுகாதார வசதிகளைப் பெறும் உரிமை. இவையெல்லாம் என்ன ஆனது? அடுத்து அரசின் தோல்வியைத் தொடர்ந்து நீதி மன்றங்கள் செய்திட வேண்டியது என்னென்ன?

அதேபோல், அரசு எடுக்கும் சில பொறுப்பற்ற முடிவுகளில் உச்ச நீதிமன்றம் எங்களுக்கும் அதற்கும் எந்த சம்பந்தமுமில்லை. காரணம், அவை அரசின் கொள்கை முடிவு என விட்டு விடலாமா?

ஏனெனில் இந்த விவகாரங்கள் அதாவது பெருந்தொற்று போன்ற விவகாரங்கள்; மருத்துவ அறிவு, விஞ்ஞான அறிவு, பொருளாதார அறிவு இவற்றோடு சம்பந்தப்பட்டவை. அதனால் நீதித்துறை செய்வதற்கெதுவுமில்லை என நீதித் துறை கைகளைக் கழுவிடலாமா?

அல்லது

நீதித்துறை தலையிட்டு, புலம்பெயர்ந்த தொழிலாளர்கள், ஏழைகள் வாழ்வாதாரத்தை இழந்தவர்கள், இவர்களுக்கு தங்கும் வசதி, ஜீவித்திருக்க உணவு, மருத்துவ உதவி, பயண உதவிகள் இவற்றில் ஏதாவது செய்திட வேண்டுமோ? இயலுமா? சட்டத்தின் முந்தைய வரலாற்றில் இவற்றிற்கு இடமிருக்கின்றதா? என்பவையெல்லாம் விவாதிக்கப்பட வேண்டியவை. மக்களிடம் எடுத்துச் சொல்லி விழிப்புணர்வை ஏற்படுத்திட வேண்டியவை. (அதனால் விளக்கமாக மக்களிடம் கொண்டு சேர்க்கப்பட வேண்டியவை.) இது சட்டத்தின் கடமை. அரசு செய்திட தயங்கிடும் போது. நீதிமன்றம், தலையிட்டு அரசை செய்திட வைக்க வேண்டும்.

## அரசின் கடமைகள்

முதலில் கவனம் செலுத்திட வேண்டியது, எல்லோருக்கும் எட்டிடும் அளவில் மருத்துவ உதவிகள், புலம் பெயர்ந்தவர்களுக்கு கை செலவுக்கு கொஞ்சம் பணம், ஏழைகளின் கைகளில் சிறிது பணம், இவையெல்லாம் அரசின் கடமைகள். இவற்றிற்கு ஏற்பாடு செய்வதன் மூலம் அரசு தனது கடமையை நிறைவேறுகின்றதோ அல்லாமல், ஏதோ சில இலவச சேவையை செய்கின்றது

> “வாழும் உரிமை என்பதில், தூய்மையா குடிநீரை பெறும் உரிமையும் அடங்கும், இதனை உச்ச நீதிமன்றம், பின் வரும் வழக்கில் வழங்கிய தீர்ப்பில் உறுதி செய்தது. A.P. Pollution Control Board 2001. 2 SCC 62. இதே வழக்கில், வாழும் உரிமை என்பதில் உணவு பெறும் உரிமையும் அடங்கும் எனப் பிரகடனப் படுத்தியது.
>
> இவையெல்லாம் அரசு மனது வைத்தால் வழங்கலாம் என்றில்லை. அதேபோல் இந்த உரிமைகளை வழங்குவது. அரசு செய்யும் சேவை அல்லது தர்மம் என்பதல்ல. மாறாக, இவையெல்லாம் வழங்கப்படவில்லை என்றால் மக்கள் கேட்டுப் பெற்றுக் கொள்ளலாம் என்ற அளவில் உறுதி செய்யப்பட்ட அடிப்படை உரிமைகள்.
>
> பேரிடர் காலங்களில் மக்களுக்கு எல்லா அடிப்படை வசதிகளையும், செய்து தந்திட வேண்டும் என்பது 16 ஆம் நூற்றாண்டிலேயே உறுதி செய்யப்பட்ட உரிமை.”

என்றில்லை. இதனை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

பெருந்தொற்று போன்ற மருத்துவ நெருக்கடி காலங்களிலும், இதர நெருக்கடி காலங்களிலும், இவற்றையெல்லாம் பெறுவது மக்களின் அடிப்படை உரிமைகள்.

உலக அரங்கில் நம்நாடு ஒத்துக்கொண்டவை. எல்லாவற்றையும் விட, மேலாக இந்தியாவின் அரசியல் நிர்ணயச் சட்டம் இவற்றை உறுதி செய்கின்றது.

இவையெல்லாம்தான் மக்கள் நலன் காக்கும் அரசு (Welfare) என்பதன் அடிப்படைக் கோட்பாடுகளாகும்.

1880 முதலே பஞ்சம், உணவுத் தட்டுப்பாடு ஆகியவை நாட்டில் அவ்வப்போது – நிலவி வருகின்றது. அப்போதிருந்தே. நாம் அதுபோன்ற நெருக்கடிகளில் அரசு என்னென்ன செய்திட வேண்டும், என்பதற்கான விதிகளை வகுத்து வருகின்றோம். அரசு எத்தகைய நிவாரணங்களை வழங்கிட வேண்டும் என்ற வழிமுறைகளையும் நெறிப்படுத்தி வருகின்றோம்.

பிற்றை நாட்களில் இதுபோன்ற காலங்களில் மக்களுக்கு என்னென்ன செய்ய வேண்டும் என்பதை வரையறுத்திடும் சட்டங்கள் வேண்டும் என உலக அளவில் அழுத்தங்கள் வந்தன. அதனடிப்படையில்சிலபலசட்டங்களைஇயற்றினோம். அவற்றை செயல்படுத்திட வேண்டும் என்ற எண்ணங்கள் இல்லை என்றாலும், உலக அரங்கிலிருந்து வரும் அழுத்தங்களைச் சமாளிக்க வேண்டும் என்பதற்காக இந்தச் சட்டங்கள் இயற்றப்பட்டன.

## பேரிடர் காலங்களில்

உலக அளவில் "Hyogo Frame works for Action' (HFA) ஹைகோ, நடவடிக்கைகளுக்கான கட்டமைப்பு ஒன்சு செயலில் வந்தது. அதாவது பேரிடர் காலங்களுக்கென முன் கூட்டியே சில ஏற்பாடுகளைச் செய்வது. அந்த ஏற்பாடுகளை எப்போதும் தயாராக வைத்திருப்பது. இதனால் பேரிடர் காலங்களில் ஏற்படும் இழப்புகளை தவிர்க்கலாம் அல்லது குறைக்கலாம் என்றொரு முன் எச்சரிக்கைத் திட்டம். இதனை ஐக்கிய நாடுகள் சபையும் ஏற்றுக் கொண்டது. அதனடிப்படையில் சட்டங்களை இயற்றிட வேண்டும் என ஐக்கிய நாடுகள் சபை, உறுப்பு நாடுகளைக் கேட்டுக் கொண்டது. இந்தப் பின்னணியில்தான் 2005 ஆம் ஆண்டு நம் நாட்டில், பேரிடர் மேலாண்மை சட்டம் 2005, இயற்றப்பட்டது. (Disaster Management Act. 2005).

இப்படி பல ஏற்பாடுகள், உலக அரங்கிலும் இந்தியாவிலும், வளர்ந்தன. இவை பேரிடர் காலங்களில், நிவாரணம், பாதிக்கப்பட்ட மக்களை அவ்விடத்திலிருந்து மீட்பது, மறு வாழ்வு வழங்குவது, இவற்றை அரசின் மீது கடமை என்றாக்கின. அதே நேரத்தில் இவற்றைப் பெறுவது மக்களின் அடிப்படை உரிமைகள் எனப் பிரகடனப்படுத்தின. அது மட்டுமல்ல, 2016–இல் தேசிய பேரிடர் மேலாண்மைத் திட்டம் ஒன்றை தீட்டி ஏற்றுக்கொண்டார்கள். (National Disaster Management Plan)

2016–இல் இந்தத் திட்டத்தின் கீழ் மட்டுமல்ல, இந்த தேசிய பேரிடர் மேலாண்மைச் சட்டம் 2005–இன் படியும், மத்திய அரசுதான் தேவையான நிதியை தந்திட வேண்டும்; அதாவது பேரிடர்களின்போது போதிய நிதியை மத்திய அரசு

> “ஆக, காலப்போக்கில், நாம் நாடு ஒரு மக்கள் நல அரசு என்பதை உச்ச நீதி மன்றம் தீர்ப்புகளின் வழி உறுதி செய்திருக்கின்றது.
>
> இத்தோடு நில்லாமல், காலப்போக்கில் நாம் இன்னொன்றையும் நிரூபித்திருக்கின்றோம். அது, ஆபத்தான நேரங்களில் அதாவது, கொரோனா நேரங்களில், வழிகாட்டும் கொள்கையில் சொல்லப்பட்டுள்ள உரிமைகள் எல்லாம், மக்களின் அடிப்படை உரிமைகளாகவே ஆகிவிடும்.
>
> நிலைமை இப்படி இருப்பதால்தான் கொரோனா காலத்தில் நமது உச்ச நீதிமன்றம் காட்டிய மெத்தனம், மக்கள் வாழ்க்கையில் பெரும் பாதிப்புகளையும் இழப்புகளையும் ஏற்படுத்திவிட்டது.”

தந்திட வேண்டும்.

இதற்கான நிதியை மத்திய அரசு எப்போதும் தயாராக வைத்திருக்க வேண்டும்.

*2016* ஆம் ஆண்டு திட்டம் மிகவும் நுணுக்க மாக தயாரிக்கப்பட்டது. அதன்படி பேரிடர் காலங்களில் மக்களுக்கு தேவையான பொருட் களை அரசு தேவையான எல்லாப் பொருட் களையும், சாதாரண காலங்களில் பின்பற்றப் படும் சாங்கியங்களை கூட பின்பற்றிடாமல், நேரடியாக வாங்கிடலாம். மத்திய அரசுக்கும் இந்த அனுமதி உண்டு, மாநில அரசுக்கும் இந்த அனுமதி உண்டு.

அதேபோல் இந்தப் பேரிடர் காலங்களில் மக்களுக்கு உடனடியாக சில அத்தியாவசியமான பொருட்கள் கிடைத்திட செய்திட வேண்டும். அவையாவன. போதிய அளவுக்கு சத்துணவு, பால், குழந்தைகளுக்குப் பிரத்தியோகமாகப் பால், பாலூட்டும் தாய்மார்களுக்கு நார்ச் சத்துமிக்க உணவு, நாளொன்றுக்கு மூன்று லிட்டர் குடிநீர்.

இவற்றை வழங்குவதற்கு பாதிக்கப்பட்ட மக்கள் குடும்ப அட்டை (Ration Card) வைத் திருக்க வேண்டும் என்றில்லை. இல்லையா? அந்தப் பகுதியை சார்ந்தவர்களா? இல்லையா? என் குடிமக்களா? இல்லையா? என்று கூட பார்த்திடக்கூடாது.

இதுவல்லாமல், நம் நாட்டில் *2008* ஆம் ஆண்டில், பொருந்தொற்றுகளை மனத்திற் கொண்டு இன்னொரு செயல்திட்டத்தை வகுத் தோம். அதுதான், (National Guidelines for Management of Biological Disasters) அதாவது, உடல் சம்மந்தமான அல்லது ஆரோக்கியம் சம்மந்த மான பேரிடருக்கான தேசிய வழிகாட்டும் நெறி முறைகள்.

இதில் பெருந்தொற்றுகள் மக்களை அண்ட விடாமல் தடுப்பதற்கான நெறிமுறைகள், தொற்று தொற்றி விட்டவர்களைத் தனிமைப் படுத்துதல் என்பவையெல்லாம் பற்றி விரிவான வழிமுறைகள் வழங்கப்பட்டது.

இங்கே நாம் அடிப்படை வினாவைக் கேட்க வேண்டும்.

## லாக்டவுன் என்ற ஊரடங்கு

## சட்டப்படி செல்லுமா?

இந்தியாவிலிருக்கும் எந்தச் சட்டத்திலும், மத்திய அரசோ, மாநில அரசோ "லாக்டவுன் (lockdown) என்ற ஊரடங்குகளை அறிவிக்க அனுமதி இல்லை. ஆகவே இப்போது அறிவிக் கப்பட்ட 'லாக்டவுன்' சட்டப்பூர்வமானதா? இல்லையா? என்பதை நாம் இப்போது கவனிக்க வேண்டியதிருக்கின்றது. இனிமேல் இதுபோல் நடக்காமலிருக்க. ஆனால், உரிய நேரத்தில் உச்ச நீதிமன்றம் தலையிட்டிருந்தால், எல்லாம் தெளிவாகி இருக்கும். பல நல்ல விளைவுகள் ஏற்பட்டிருக்கும்.

எது எப்படி இருந்தாலும், பேரழிவு காலங் களில் ஏழைகளை அரசு முழுமையாக கவனிக்க வேண்டும் என்பது நமது சட்டங்களில் உறுதி யளிக்கப்பட்டிருக்கின்றது.

உணவு, ஆரோக்கியத்திற்கான பாதுகாப்பு, வதியுமிடம், இவற்றையெல்லாம் அடிப்படை உரிமைகள் என நேரடியாகக் குறிப்பிட்டுக் காட்டும் சட்டங்கள் ஏதுமில்லை என்றாலும், அரசியல் நிர்ணயச் சட்டம் பிரிவு *21*–க்குத் தரப்பட்ட விளக்கங்கள் நாம் மேலே குறிப்பிட் டவையெல்லாம் அடிப்படை உரிமைகள் எனக் குறிப்பிடுகின்றன. அதாவது அரசியல் அமைப்புச் சட்டம் பிரிவு *21*–க்கு தரப்பட்ட விளக்கங்கள் அடிப்படை உரிமைகளை விசாலமாக்கி இருக் கின்றன.

அரசியல் நிர்ணயச் சட்டம் பிரிவு *21* – இப்படிக் கூறுகின்றது

"சட்டப்படி உருவாக்கப்பட்டு நிலைநிறுத்தப் பட்ட விசாரணை முறைப்படி அல்லாமல், வேறெந்த விதமாகவும், தனி நபரின் உயிரையோ அல்லது தனிமனித சுதந்திரத்தையோ பறிக்க முடியாது."

இந்த பிரிவு குடிமக்களில் வாழும் உரிமை யோடு சம்மந்தப்பட்டது. வாழும் உரிமை என்பது, விலங்குகளைப் போல் வாழும் உரிமை அல்ல. மாறாக, கண்ணியத்தோடும், கௌரவத் தோடும் வாழும் உரிமை. அத்தோடு இந்த உரிமையில் ஒரு கண்ணியமான தங்குமிடமும் உண்டு, இந்த உரிமையில் இந்த உரிமை Hellis vs BMC 1985 - 3CCC 545 என்ற வழக்கிலும், Chemeli SIng 1996.

"இன்னும் நீதிமன்றம், அடிக்கடி ஒன்றை சொன்னது. அது நாங்கள் அதிகார வர்க்கத்தின் செயல்பாடுகளில் தலையிட இயலாது. அதே போல் நாங்கள் அரசின் கொள்கை முடிவுகளில் தலையிட முடியாது.

அதேபோல், நமது உச்ச நீதிமன்றம், நாங்கள் மருத்துவத்துறையிலோ, விஞ்ஞானத்திலோ, பொருளாதார துறையிலோ, தேர்ச்சிபெற்ற நிபுணர்களில்லை. இவற்றைத் திரும்பத் திரும்பச் சொல்லி தனது கடமையைத் தட்டிக் கழித்தது நமது உச்ச நீதிமன்றம்.

எடுத்த எடுப்பில், இஃது மிகவும், புத்திசாலித் தனமான நியாயமான பதில் எனச் எண்ணிடத் தோன்றும். ஆனால், இது, நீதித்துறை தன் கடமையைச் செய்யாமல் தட்டிக் கழிப்பதற்காகச் சொல்லப்பட்ட பதில் என்பதுதான் உண்மை!

கடந்த 40 ஆண்டு காலத்தில் நமது உச்ச நீதிமன்றம், என்னென்ன செய்திருக்கின்றது என்பதை ஏறெடுத்துப் பார்த்தால், நமது உச்ச நீதிமன்றம் இப்போது செய்திருப்பது ஒரு பெரும் தகிடுதத்தம் என்பது தெளிவாக விளங்கும்."

2 SCC 549 என்ற வழக்குகளில், உச்ச நீதி மன்றத்தால் உறுதி செய்யப்பட்டவை. "Right to Adequate Healh Care" போதிய அளவு உடல் நல பாதுகாப்பையும் உள்ளடக்கியது. இதனை உச்ச நீதிமன்றம். 1982−இல் வழங்கிய தீர்ப்பில் உறுதி செய்தது. (Pudr. AIR 1982 SC 1473. PASCHIM Banga KMER MAZDOOR SAMITI - 1996 4 SCC 37)

வாழும் உரிமை என்பதில், தூய்மையா குடிநீரை பெறும் உரிமையும் அடங்கும், இதனை உச்ச நீதிமன்றம், பின் வரும் வழக்கில் வழங்கிய தீர்ப்பில் உறுதி செய்தது. A.P. Pollution Control Board 2001. 2 SCC 62. இதே வழக்கில், வாழும் உரிமை என்பதில் உணவு பெறும் உரிமையும் அடங்கும் எனப் பிரகடன ப்படுத்தியது.

இவையெல்லாம் அரசு மனது வைத்தால் வழங்கலாம் என்றில்லை. அதேபோல் இந்த உரிமைகளை வழங்குவது. அரசு செய்யும் சேவை அல்லது தர்மம் என்பதல்ல. மாறாக, இவை யெல்லாம் வழங்கப்படவில்லை என்றால் மக்கள் கேட்டுப் பெற்றுக் கொள்ளலாம் என்ற அளவில் உறுதி செய்யப்பட்ட அடிப்படை உரிமைகள்.

பேரிடர் காலங்களில் மக்களுக்கு எல்லா அடிப்படை வசதி களையும், செய்து தந்திட வேண்டும் என்பது 16 ஆம் நூற்றாண்டி லேயே உறுதி செய்யப்பட்ட உரிமை.

அமெரிக்காவில் மக்கள் நலவாழ்வு உரிமைகள் "Welfare" Benefits அடிப்படை உரிமைகள் அல்ல.

காரணம் அமெரிக்கா தன்னை ஒரு மக்கள் நல்வாழ்வு அரசு Welfare Sate என அறிவிக்க வில்லை.



ஆனால், நம் நாட்டில் அப்படி அல்ல. நமது அரசு ஒரு மக்கள் நல்வாழ்வு அரசு என்பதை உச்ச நீதிமன்றம், முன்னூறுக்கும் குறையாத தீர்ப்புகளில் உறுதி செய்து பிரகடனப் படுத்தியுள்ளது.

## வழிகாட்டும் கொள்கைகள்

அதேபோல் வழிகாட்டும், கொள்கைகள் என நமது அரசியல் நிர்ணயச் சட்டத்தால் சொல்லப்பட்டவைகளில் பல அடிப்படை உரிமைகளாக மாற்றப்பட்டுவிட்டன. அவையெல்லாம் இப்போது நாம் சட்டப்பூர்வமாகக் கேட்டுப் பெறும் உரிமைகளாக மாறியுள்ளன, அவை பல்வேறு வடிவங்களில் சட்டங்களாகவும் ஆக்கப்பட்டுள்ளன.

எடுத்துக்காட்டாக, (National Food Security Act) தேசிய உணவு பாதுகாப்புச் சட்டம். (Street Vendors Act.) தெருக்களில் வியாபாரம் செய்பவர்களின் பாதுகாப்புச் சட்டம். (National Rural Enpolyment Gurantee Act. தேசிய ஊரக வேலை வாய்ப்பு உத்திரவாத சட்டம். (Unorganised Sector Workers Social Security Act) முறை சார தொழிலாளர்களின் சமூக பாதுகாப்புச் சட்டம் Maintanence and Welfare of Senior Citizens Act. மூத்த குடிமக்களின் பராமரிப்பு மற்றும், மூத்த குடிமக்களின் நல்வாழ்வுச் சட்டம். Prohibition of Empolyment of Manual Scavengers Act. மனிதர்களை மலம் அள்ளும் வேலையில் பயன்படுத்துவதைத் தடை செய்யும் சட்டம், Scheduled Tribes and others Traditional forest dwellers (recognition of Forest Rights Act) பழங்குடியினர் மற்றும் பாரம்பரியமாக காடுகளில் வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களின் (காடுகளில் வாழும்) உரிமை சட்டம்.

இவற்றைப் போல், இன்னும் பல சட்டங்களைக் குறிப்பிடலாம். இவையெல்லாம் இந்திய அரசு ஒரு மக்கள் நல்வாழ்வு அரசு என்ற அடிப்படையில் இயற்றப்பட்ட சட்டங்கள்.

ஆக, காலப்போக்கில், நாம் நாடு ஒரு மக்கள் நல அரசு என்பதை உச்ச நீதி மன்றம் தீர்ப்புகளின் வழி உறுதி செய்திருக்கின்றது.

இத்தோடு நில்லாமல், காலப்போக்கில் நாம் இன்னொன்றையும்நிரூபித்திருக்கின்றோம். அது, ஆபத்தான நேரங்களில் அதாவது, கொரோனா நேரங்களில், வழிகாட்டும் கொள்கையில் சொல்லப்பட்டுள்ள உரிமைகள் எல்லாம், மக்களின் அடிப்படை உரிமைகளாகவே ஆகிவிடும்.

நிலைமை இப்படி இருப்பதால்தான் கொரோனா காலத்தில் நமது உச்ச நீதிமன்றம் காட்டிய மெத்தனம், மக்கள் வாழ்க்கையில் பெரும் பாதிப்புகளையும் இழப்புகளையும் ஏற்படுத்திவிட்டது.

## நீதிமன்றத்தின் அதிகாரங்கள்

இங்கே இரண்டு கேள்விகள் எழுகின்றன. ஒன்று, அதிகாரப் பீடத்தில் இருப்பவர்களிடம், இதை, இதை, செய்யுங்கள் என நீதி துறையால் சொல்லிட இயலுமா? இன்னொன்று, இது போன்ற பேரிடர், பெருந்தொற்று காலங்களில் நீதித்துறை என்னென்ன செய்திட முடியும்?

இன்னும் நீதிமன்றம், அடிக்கடி ஒன்றை சொன்னது. அது நாங்கள் அதிகார வர்க்கத்தின் செயல்பாடுகளில் தலையிட இயலாது. அதே போல் நாங்கள் அரசின் கொள்கை முடிவுகளில் தலையிட முடியாது.

அதேபோல், நமது உச்ச நீதிமன்றம், நாங்கள் மருத்துவத்துறையிலோ, விஞ்ஞானத்திலோ, பொருளாதார துறையிலோ, தேர்ச்சிபெற்ற நிபுணர்களில்லை. இவற்றைத் திரும்பத் திரும்பச் சொல்லி தனது கடமையைத் தட்டிக் கழித்தது நமது உச்ச நீதிமன்றம்.

எடுத்த எடுப்பில், இஃது மிகவும், புத்திசாலித்தனமான நியாயமான பதில் எனச் எண்ணிடத் தோன்றும். ஆனால், இது, நீதித்துறை தன் கடமையைச் செய்யாமல் தட்டிக் கழிப்பதற்காகச் சொல்லப்பட்ட பதில் என்பதுதான் உண்மை!

கடந்த 40 ஆண்டு காலத்தில் நமது உச்ச நீதிமன்றம், என்னென்ன செய்திருக்கின்றது என்பதை ஏறெடுத்துப் பார்த்தால், நமது உச்ச நீதிமன்றம் இப்போது செய்திருப்பது ஒரு பெரும் தகிடுதத்தம் என்பது தெளிவாக விளங்கும்.

## 40 ஆண்டுகால உச்ச நீதிமன்ற தீர்ப்புகள் : வரையிட்டுக் காட்டப்பட வேண்டிய வரலாற்றுத் திரிபுகள்

வரலாற்றின் ஒரு கட்டத்தில், வெளிநாட்டுக்காரர்கள் நம் நாட்டுக் குழந்தைகளைத் தத்தெடுப்பதில், அரசு இயற்றிய சட்டங்கள், ஓட்டைகள்

நிறைந்தவை என்பதைக் கண்டெடுத்தது. உட னேயே இந்தியக் குழந்தைகளை வெளி நாட்ட வர்கள் தத்தெடுக்கும் போது கடைப்பிடிக்க வேண்டிய விதிகளை விரிவாக விரித்துரைத்தது. நெறிப்படுத்தியது. (வழக்கு ஆதாரம் : Laxmikant Pandey AIR 1987 Sec.232)

கைது செய்யப்பட்டவர்களை எப்படி நடத் திட வேண்டும்? கைது செய்யப்படுவதற்கு முன் அவருடைய உரிமைகள் என்னென்ன? குற்றம் சுமத்தப்பட்டவர்களின்உரிமைகள்என்னென்ன? என்பதை உச்ச நீதிமன்றம் முறைப்படுத்தியது. (வழக்கு ஆதாரம் : D.K.Basu)

வேலை செய்யும் இடங்களில் பெண்கள் பாலியல் தொந்திரவுகளுக்கு ஆளாக்கப்படும் போது, அவர்களுக்கு என்னென்ன பாதுகாப்பு களை வழங்கிட வேண்டும் என்பதற்கு தெளி வான வழிகாட்டுதல்களை உச்ச நீதிமன்றம் வழங் கியது. இதில் உச்ச நீதிமன்றம் புதியதொரு சட் டத்தையே இயற்றியது எலாம். (வழக்கு ஆதாரம் : Visakha's Judgement, 1997.6 Sec. 241)

பாலியல் தொழில் செய்யும் பெண்களின் குழந்தைகள் எவ்வாறு கல்விக் கூடங்களில் சேர்க்கப்பட வேண்டும் என்பது குறித்தும், உச்ச நீதிமன்றம் விதிமுறைகளை வகுத்துத் தந்தது. (வழக்கு ஆதாரம் : Gavrav Jain AIR 1990 Sec. 292)

*15* ஆண்டுகளுக்கு மேலான வாகனங்களை ஓரங்கட்டிட வேண்டும் என்றொரு தீர்ப்பை உச்ச நீதிமன்றம் வழங்கியது. (இது சுற்றுப்புச் சூழல் அறிவியலோடு தொடர்புடையது) (வழக்கு ஆதாரம் : M.C. Mehta 1999 6 Sec. 12)

இன்னொரு வழக்கில் உச்ச நீதிமன்றம், முழுக்க முழுக்க விஞ்ஞான தீர்ப்பு ஒன்றையே வழங்கியது. அது விஞ்ஞான அறிவுடையோர் மட்டுமே வழங்கிட முடிந்த தீர்ப்பு. தீர்ப்பே அது. டெல்லியில் CNC வாகனங்கள் கேஸே பயன் படுத்தி வேண்டும் என்பதே! (வழக்கு ஆதாரம் : M.C. Mehta, 1999 6 Sec. 12) இது முழுக்க முழுக்க விஞ்ஞானத் தீர்ப்பே. (A Completely Scientic Direction)

அதேபோல் பொருளாதாரத்தை அடிப்படை யாகக் கொண்ட தீர்ப்புகளையும், உச்ச நீதி மன் றம் வழங்கி இருக்கின்றது. ஆசாத், ரிக்ஷா வண்டி இழுப்பவர் என்ற வழக்கில், உச்ச நீதி மன்றம், பஞ்சாப் நேஷனல் பேங்க் என்ற வங்கியிடம், ரிக்ஷா இழுப்பவர்களுக்கு கடன் வழங்கிடும் திட்டம் ஒன்றை கொண்டு வந்திட வேண்டும் என்றும், அப்படி வழங்கப்படும் கடனை திரும்ப செலுத்திட ஒரு இலகுவான திட்டத்தையும் அறிமுகப்படுத்திட வேண்டும் என்றும் வலி யுறுத்தியது. (வழக்கு ஆதாரம் : Azad Rikshaw Pullers Case AIR. 1981 Sec. 14)

பொதுவான நலம் நாடு வழக்கொன்றில், இரத்தத்தை சேகரிப்பதும், அதனை நோயாளி களில் உடலில் செலுத்துவதிலும் மருத்துவமனை கள் கடைபிடிக்க வேண்டிய நெறிமுறைகளை வரை இட்டுக்கட்டியது. அவ்வாறு இரத்தம் சேக ரிப்பதும், நோயாளிகளில் உடலில் செலுத்து வதும், எந்த பக்க விளைவுகளும் இல்லாமல் பார்த்துக்கொள்ள வழிகாட்டியது. இது முழுக்க முழுக்க மருத்துவ அறிவுக்குள் "Medical Know ledge" நுழைந்து, அளித்தத் தீர்ப்பாகும். (வழக்கு ஆதாரம் : Common Cause 1996. 1. Sec. 753)

கல்லூரிகளில் (Professional Colleges) கல்விக் கட்டணம் வசூலிப்பதற்கு ஒரு விரிவான விதி முறையைச் சொன்னது, உச்ச நீதிமன்றம்

இப்படித் தனக்கு தேவைப்படும் போதெல் லாம் உச்ச நீதிமன்றம் விதிமுறைகளை விதித்தே இருக்கின்றது. புதிய சட்டங்களைப் புனைந் திருக்கின்றது.

தனக்கு விருப்பமில்லாதபோது, நாங்கள் அரசின் கொள்கை முடிவில் தலையிட மாட்டோம் எனக் கூறிவிடுகின்றது. (இன்றைய நாட்களில் ஆட்சியாளர்களின் விருப்பத்திற்கு எதிராக நீதியின் பக்கம் நிலைத்து நிற்க நெஞ்சுரம் இல்லை, மனமுமில்லை என்பதைத் தவிர வேறு காரணங்களிலில்லை)

இவையெல்லாம், ஒருபுறமிருந்தாலும் நமது உச்ச நீதிமன்றம், அடிக்கடி ஒரு பிரகடனத்தைச் செய்திருக்கின்றது. அது சாதாரண காலங்களில் உச்ச நீதிமன்றம், அரசின் கொள்கை முடிவுகளில் தலையிடாது. ஆனால், கொள்கை முடிவுகள், ஏனோ தானோ என்றிருந்தாலோ, அடிப்படை உரிமைகளுக்கு எதிராக இருந்தாலோ நிச்சயமாக, தலையிடும். இதை கொரோனோ காலத்தில் செய்யவில்லை. அது அப்பட்டமான

அநியாயங்களை செய்தது.

அரசியல் சாசன நீதிமன்றங்களின் நோக்கமே சட்ட சபைகளுள் இயற்றும் சட்டங்களைத் சீர்தூக்கிப் பார்ப்பது, அதிகார வர்க்கத்தின் செயல்கள் எந்த அளவுக்கு சட்டப்படியாக செல்லுபடியாகும் என்பதை சீர்தூக்கிப் பார்ப்பது இவையோ! இதைத்தான் (Judical Review) அரசியல் சாசனத்தோடு நீதித்துறை ஒப்பிட்டுப் பார்ப்பது என்கின்றோம்.

கொரோனா, ஊரடங்கு செயலிருந்த கால கட்டத்தில் கடுமையான வறுமை ஏழை, எளியோரை வாட்டி எடுத்தது. பல உயிர்களைக் காவு கொண்டது.



புலம் பெயர்ந்த தொழிலாளர்களின் நிலை இன்னும் மோசமாக இருந்தது. அவர்களை எல்லோரும் கை விட்டு விட்டார்கள். அதிகார வர்க்கம் புலம் பெயர்ந்த தொழிலாளர்களை கண்டுகொள்ளவில்லை. அதிகார வர்க்கம் அவர்களை வேண்டுமென்றே புறக்கணித்தது. அரசு வேறு பக்கம் திரும்பிக் கொண்டது.

இவையெல்லாம் எல்லா செய்தி ஊடங்களிலும் வந்தன. நீதிபதிகள் ஊடகத்தை ஏறெடுத்தும் பார்ப்பதில்லை என சொல்லிவிட முடியாது. அவர்கள் நிச்சயமாக தாங்களாக முன்வந்து நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். நடந்தே நொந்து மடிந்த அந்த மக்களின் உயிர்களைக் காப்பாற்றி இருக்க வேண்டும்.

உச்சநீதிமன்றத்திற்குஜயங்கள்இருந்தால்,சில குழுக்களை அமைத்துக் களத்தில் என்ன நடந்து கொண்டிருக்கின்றது என்பதை கண்டறிந்திருக்க வேண்டும். இதையெல்லாம் விடுத்து, மத்தியிலே ஆட்சியில் இருப்பவர்கள் சொன்னதையெல்லாம் நம்பியது உச்ச நீதிமன்றம்.

மத்திய அரசின் வழக்கறிஞர், ஊடகங்கள் தான் புலம் பெயர்ந்த தொழிலாளர்களின் விவகாரம் ஊடகங்களின் மாயை Media Hype என ஓர் இமாலயப் பொய்யைச் சொன்னார். அதை அப்படியே உச்ச நீதிமன்றம் ஏற்றுக்கொண்டது. இதை நாம் உச்ச நீதிமன்றத்திடம் எதிர்பார்க்கவில்லை.

மும்பை உயர் நீதிமன்றத்தின் மூத்த வழக்கறிஞர் மிகிர்தேசாய் அவர்கள் எழுதி சபீரங் இந்தியா இணைய இதழில் வெளவந்தது. உச்ச நீதிமன்றத்திற்கு அழுத்தங்களைத் தந்த கடிதங்களுள் ஒன்று.

வழக்கறிஞர் மிஹிர் தேசாய் அவர்கள் (PUCL) "People's Union for Civil Leberties" என்ற அமைப்பின், அகில இந்தியத் துணைத் தலைவர்.

அண்மையில் 'NIA; தேசிய புலனாய்வு முகமையின் அத்து மீறல்கள், 'ஊபா' Unlawfol Activities Prevention Amendment Act. (எ) தடை செய்யப்பட்ட செயல்களில் தடைச் சட்டம் என்பனவற்றிற்கு எதிராக கருத்துருவாக்கங்களில் ஈடுபட்டு வருகின்றார்.

20–1–2021, 21–1–2021, 22–01–2021 ஆகிய நாட்களில் நடைபெற்ற காணொலி, விவாத அரங்கில், தாருல் இஸ்லாம், நீதி அமைதிக்கான மக்கள் இயக்கத்தின் சார்பில் மு. குலாம் முஹம்மத் அவர்கள் கலந்து கொண்டார்கள்.

முதல் கட்ட முயற்சியாக இந்தச் சட்டத்தை ("ஊபா") எங்கெல்லாம், அரசு தவறாகப் பயன்படுத்தியது என்பதைப் பற்றி முழு தகவல்களையும் ஆவணப்படுத்துவது என முடிவு செய்யப்பட்டுள்ளது.

– மிஹிர் தேசாய்.

மூத்த வழக்கறிஞர் – மும்பை உயர் நீதிமன்றம்,
PUCL : அமைப்பின் தேசிய துணைத் தலைவர்
தமிழ் வடிவம் – MGM

# மாநில ஆட்சியாளரும், குர்ஆனின் முதல் அத்தியாயம் அல் பாத்தியாவும்

ஒரு மாநில அரசின் உயர் அதிகாரியாக பணியாற்றிய ஒரு முஸ்லிம் அதிகாரி இஸ்லாமிய மார்க்கப்பற்று உள்ளவர். இவர் அலுவல் நேரத்தில் அலுவலகத்திலேயே தொழுகையை நிறைவேற்றி வந்தார். (காரணம் காட்டி அலுவலகத்திற்கு வெளியே செல்ல விரும்பவில்லை).

ஒருமுறை துறைசார்ந்த சந்திப்புக்காக அம்மாநிலத்தின் ஆட்சியாளரை சந்திக்கும் வாய்ப்பு, சந்தர்ப்பம் அவ்வதிகாரிக்கு அமைந்தது.

ஆட்சியாளர் சில கேள்விகளை கேட்க, அவ்வதிகாரி பொறுப்பாக பதில் அளித்தார். அது என்னவெனில்,

**ஆட்சியாளர் :** நீங்கள் பணி நேரத்திலேயே தொழுகையை நடத்துகிறீர்களாமே ?

**உயர் அதிகாரி :** நான் தொழுவது உண்மை தான். தொழுவதற்காக கை, கால், முகங்களை கழுவுகிறேன். இதற்கு 2 நிமிடம் ஆகும். தொழுவதற்கு 4 நிமிடம் ஆகும். ஆக மொத்தம் 6 நிமிடமாகும். இப்படி பணிநேரத்தில் 2 நேர தொழுகைக்காக –லுஹர் மற்றும் அஸர் – 12 நிமிடங்கள் ஆகிறது.

ஆனால் பணி நேரம் முடிந்தும் நமது அரசுக் காக 2 அல்லது 3 மணி நேரம் கூடுதலாக உழைக் கிறேன்.

**ஆட்சியாளர் :** இதை பெரிதாக நான் எடுத்துக்கொள்ளவில்லை. உங்களுடைய தரப்பு விளக்கத்திற்காக தான் இதைக் கேட்டேன்.

நீங்கள் எத்தனை முறை தொழுகிறீர்கள் ?



**உயர் அதிகாரி :** நாள்தோறும் 5 முறை தொழுகிறேன்.

**ஆட்சியாளர் :** நீங்கள் ஒவ்வொரு தொழு கையிலும் யூதர்களையும் கிறிஸ்தவர்களையும் ‘ சபிக்கிறீர்களாமே ?

**உயர் அதிகாரி :** அப்படியெல்லாம் எங்கள் தொழுகையில் இல்லையே !

**ஆட்சியாளர் :** நீங்கள் தொழும் போது ஓதும் பாத்தியா அத்தியாயத்தின் கடைசி வரிகளை சொல்லுங்கள்.

**உயர் அதிகாரி :** கைரில் மஃழூபி அலைஹிம் வலல்லாலீன் . ஆமீன்

**ஆட்சியாளர் :** அதன் அர்த்தம் என்ன ?

**உயர் அதிகாரி :** இந்த வரிக்கு முன்பாக

‘இறைவா!

எங்களுக்கு நேர்வழி காட்டுவாயாக ‘

என்பதின் தொடர்ச்சியாக

'அவ்வழி உன் கோபத்திற்கு ஆளானோர் வழியுமல்ல, நெறி தவறியோர் வழியுமல்ல' இதுவே இதற்கான அர்த்தமாகும்.

**ஆட்சியாளர் :** ஆனால் யூதர்களையும், கிறிஸ்தவர்களையும் சபிக்கிற மாதிரிதானே குர்ஆனின் விளக்க (interpretation ) குறிப்பில் உள்ளது ?

**உயர் அதிகாரி :** ஆம். விளக்க குறிப்பில் உள்ளது. ஆனால் குர்ஆனின் நேரடியான அர்த்தம் 'கோபத்திற்கு ஆளானோர் மற்றும் நெறி தவறியோர் வழியுமல்ல' என்பதாகும்.

**ஆட்சியாளர் :** அப்படியானால் குர்ஆனின் விளக்க குறிப்பு ?

**உயர் அதிகாரி :** ஆமாம். குர்ஆனின் விளக்கக் குறிப்பில் இதுதான் உள்ளது. குர்ஆனின் மார்க்க அறிஞர்கள் இதையே சொல்கிறார்கள். ஆனால் 'இறைவனின் கோபத்திற்கும், இறை செய்தியிலிருந்து நெறிபிறழ்ந்தோரையும் குறிப்பிடுவது என்பது, அந்தப் பண்பை உடையவர்கள் பாதையில் எங்களை கொண்டு சென்று விடாதே' என பிரார்த்திப்பதாகும்.

கோபத்திற்கு உள்ளானவர்கள் யூதர்கள் தான். வேதத்தின் உண்மையை உணர்ந்தும், புரிந்தும் மன முரண்டாகவும், பொறாமையுடனும் மாறு செய்ததின் காரணமாக இறைவனின் கோபத்திற்கு உள்ளானார்கள்.

நெறி தவறியோர் பாதை என்பது கிறிஸ்தவர்களை குறிக்கும். இவர்கள் பின்பற்றிய பாதையை குறிக்கும். இயேசு இறைத்தூதராக தான் இருந்தார். அவரது தாய் மரியம் (அலை ) அவர்கள் பெற்றெடுத்த பெண்மணி. இவர்கள் இறைத்தன்மை உள்ளவர்கள் இல்லை. கிறிஸ்தவர்களின் தவறான மாற்றுப் பாதையை போன்று முஸ்லிம்களாகிய எங்களை வழிபிறழ செய்யாமல் நேர்வழி காட்டுவாயாக என்பதே இதன் உள்ளார்ந்த பொருள்.

**ஆட்சியாளர் :** இதற்கு விளக்கம் தேவைப்பட்டது. நீங்கள் மிக சரியான விளக்கத்தை கொடுத்தீர்கள் .

**படிப்பினை :**

1) ஆட்சியாளர்கள் பிற மத, இன மக்களின் அடையாளங்களை பற்றி அறியும் ஆர்வமுடையவர்கள். வாய்ப்பு கிடைத்தால் நேரடியாகவே அறிய தயங்குவதில்லை.

இந்த எதார்த்தை புரிந்து சுமூகமான சந்தர்ப்பங்களில் அவர்களிடம் நேர்மையான நமது கோரிக்கைகளை வலியுறுத்துவது சிறந்த பலன்களை தரும்.

இஸ்லாமிய வரலாற்றில் அபிசீனியாவின் மன்னர் நஜ்ஜாஸியிடம் சஹாபாக்கள் தங்கள் தரப்பு உண்மைகளை எடுத்துக்கூறி ( நியாயங்களை அல்ல ) பெற்றுக்கொண்ட பாதுகாப்பு. இது ஒரு நல்ல உதாரணமாகும்.

2) இறை கோபம் மற்றும் நேர்வழி பிறழாமல், நேர்வழியில் வாழ பிரார்த்தனை செய்யும் வசனத்திற்கு

'சபித்தல்' என தவறான பிரச்சாரம் செய்யப்படுகிறது என்பதை இங்கு உணரலாம் .

உண்மை என்ன?

யூதர்களை கொன்று குவித்த ஹிட்லர் முஸ்லிம் அல்ல. ஐரோப்பிய கிறிஸ்தவன். இவனை திருக்குர்ஆன் உருவாக்கவில்லை.

கிறிஸ்தவர்கள் கிட்டத்தட்ட 1700 வருடங்களாக யூதர்களை(anti-Semitism) கற்பனைக்கெட்டாத வகையிலெல்லாம் கொடுமை படுத்தியுள்ளார்கள்.

கிறிஸ்தவ தலைமையான வாட்டிகனில் இருக்கும்

'போப்'கள் யூத வெறுப்பின் கோட்டை. இயேசுவை யூதர்கள் கொலை செய்தார்கள். எங்கள் இயேசுவை கொலை செய்த யூதர்களை கொலை செய்ய தார்மீக உரிமை இருக்கிறது என்ற கருத்தோட்டத்தை மத சிந்தனையுடன் கலந்து விட்டார்கள். இதனால் பல நூற்றாண்டுகளாக கிறிஸ்தவர்கள் யூதர்களை கொத்து கொத்தாக இனப்படுகொலை செய்தார்கள். (இதை இனமோதல் என்று வகைப்படுத்த முடியாது. மத மோதலாகும். இது இனமோதலை விட கொடியது. ஏனெனில் இனமோதல் குறிப்பிட்ட புவியியல் எல்லையோடு முடிந்துவிடும். மத மோதல் எல்லையை தாண்டி நடக்கும் ).

3) முஸ்லிம்கள் ஆட்சிகளில் யூதர்கள் பாதிக்கப்படவில்லை. யூதர்கள் என்பதாலேயே இனப்படுகொலை செய்யப்படவில்லை. அதாவது கிறிஸ்தவர்களை போன்று மதரீதியாக (முஹம்மது நபி (அலை ) அவர்களுக்கு விஷம் கொடுத்தும், பலமுறை கொலை செய்ய முற் பட்டு இருந்தும் ) ஒருங்கிணைக்கப்பட்ட யூத வெறுப்பு அமைப்பாக முஸ்லிம்கள் அணிதிரண்டு யூதப் படுகொலை செய்யவில்லை. வெறுப்பு பிரச் சாரம் செய்யவில்லை.தன் ஆட்சி அதிகாரத்தில் வாழும் யூத சிறுபான்மை சமூகத்திற்கு தர வேண்டிய பாதுகாப்பை முஸ்லிம் ஆட்சியா ளர்கள் உறுதிபடுத்தினார்கள். யூதர்கள் விஷயத் தில் நீதி விசாரணை என்ற போர்வையில் நீதியை தாமதப்படுத்தவுமில்லை, நீதியை கொல்லவு மில்லை. சில்லரை வன்முறைகள் நடந்து இருக் கலாம். அவ்வளவுதான்.


4) இதைப்பற்றி அதிகம் அறிய Larry Collins, Dominique Lapierre எழுதிய "O Jerusalem " புத்த கத்தை படிக்கவும். ஒரு சிறு பகுதி கீழே தரப் பட்டுள்ளது.

"With few exceptions, the Jewish people have dwelt in relative security among the Arabs over the centuries . The golden age of the diaspora had come in the Spain of the Caliphs and the Ottoman Turks had welcomed them , when the doors of much of Europe were closed to them . The ghastly chain of crimes culminating in the crematoriums of Germany had been inflicted on them by the Christian Nation of Europe ,not those of the Islamic East. '

'ஒரிரு விதிவிலக்குகளை விட்டுவிட்டால், பல நூற்றாண்டுகளாக யூதர்கள் அரபுகளின் (முஸ்லிம்களின்) ஆட்சியின் கீழ்தான் பாதுகாப் பாக வாழ்ந்திருக்கின்றார்கள். அவர்கள் உலக மெங்கும் அனாதைகளாக அடிபட்டு அழிந்து கொண்டிருந்த நாட்களில், பொற்காலம் என அறியப்படும் ஸ்பெயினின் கலீபாக்களின் ஆட்சி யின் போதும், அதேபோல் கலிபா என்ற முஸ்லிம் உலக தலைமை துருக்கியில் சுற்றிச் சுழன்று கொண்டிருந்த போதும் யூதர்களுக்கு கதவுகளை திறந்து வழிபட்டவர்கள் கலிபாக்கள் என்ற முஸ்லிம் ஆட்சியாளர்கள். முஸ்லிம்களின் பெருந் தன்மையை புரிந்துகொள்ள அதற்கு முன் யூதர்கள் ஐரோப்பியர்களாலும், கிறிஸ்தவர்களாலும் எப்படி கொடுமைப்படுத்தப்பட்டார்கள் என்பதை அறிந்திட வேண்டும். அக்காலத்தில் கிறிஸ்தவ ஐரோப்பாவின் அனைத்து வாயில் களும் அவர்களுக்கு (யூதர்களுக்கு ) அடைக்கப் பட்டிருந்தன. யூதர்களின் மேல் கட்டவிழ்த்து விடப்பட்ட கொடுமைகள் சங்கிலித் தொடராய் அமைந்தன. கடுமை நிறைந்த இந்த கொடுமை களின் உச்சம் ஜெர்மனியில் அவர்கள் கூட்டாக கொலை செய்யப்பட்ட போது ஏற்பட்டது. யூதர்களின் மேல் இழைக்கப்பட்ட அத்தனை கொடுமைகளும் கிறிஸ்தவத்தை பின்பற்று கிறோம் என பீற்றிக்கொள்ளும் மேலை நாடு களில் இருந்து வந்தவையே. அவை நிச்சயமாக இஸ்லாத்தை பின்பற்றிய கீழை நாடுகளில் இருந்து வந்தவையல்ல.'

–அ.ஜாகிர்






அங்கு அவருடைய தேர்வுக் குழுவுக்கு தலைவராக திரு மாத்தா பிரசாத் என்ற உத்தரப் பிரதேச மாநிலத்தில் 1995–96 ஆம் ஆண்டில் தலைமைச் செயலாளராக பணி யாற்றிய முதுநிலை ஐஏஎஸ் அதிகாரி தலைவராக இருந்தார். அவர் கேட்ட முக்கிய கேள்வி தமிழகத்தில் 1981 ஆம் ஆண்டில் மீனாட்சிபுரத்தில் இந்து பட்டியல் சமூகத்தினர் இஸ்லாமிய ராக மதம் மாற காரணம் என்ன ? என்பதாகும்.

அதற்கு, சமூக பொருளாதார காரணங்கள் என என் துணைவியார் பொதுவான விடையளித்தது திரு மாத்தா பிரசாத் அவர்களுக்கு முழு திருப்தியளிக்க வில்லை எனக் கருதுகின்றேன்.

# டாக்டர் தொல். திருமாவளவன் அவர்களின் மதமும் மதமாற்றமும் நூலும் மற்றும் எனது துணைவியார் ஸ்ரீப்ரியா ஐஏஎஸ் அவர்களின் தேர்வும்

கடந்த 2003 ஆம் ஆண்டில் எனது துணைவியார் ஸ்ரீப்ரியா ரங்கராஜன் அவர்கள் அகில இந்திய குடிமைப் பணி எனும் ஐஏஎஸ் தேர்வுக்காக புதுடில்லி மத்திய தேர்வாணையத்தில் இரண்டாம் கட்ட தேர்வில் தமிழ் மற்றும் சட்டம் ஆகிய இரண்டு பாடங்களை விருப்பப் பாடங்களாக எழுதி, தேர்வில் நல்ல மதிப்பெண் பெற்று நேர்முகத் தேர்வுக்கு சென்றிருந்தார்,

2019 ஆம் ஆண்டில் வெளிவந்த மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் அம்பேத்கர் படிப்பு வட்டத்தால் வெளியிடப்பட்ட டாக்டர் தொல். திருமாவளவனின் மதமும் மதமாற்றமும் நூல் ஒருவேளை முன்னதாக வெளிவந்திருந்தால் என் துணைவியார் மிகச் சரியான பதிலை சொல்லி இருக்கின்றார் எனக் கருதிட வாய்ப்பு இருந்திருக்கும் எனக் கருதுகிறேன்.

நேர்முகத்தேர்வில் 300 மதிப்பெண்களுக்கு அவர் பெற்ற 180 மதிப்பெண்களை விட கூடுதலாக வழங்கப் பட்டிருக்கலாம் .

திருநெல்வேலி மாவட்டம், தென்காசி வட்டம், மீனாட்சிபுரம் கிராமத்தில் 19.02.1981 ஆம் ஆண்டு ஏறத்தாழ 180 இந்து குடும்பங்கள் இஸ்லாமியராக மாறியதும் இது வெளிநாட்டுப் பணத்தின் விளைவு என அன்றைய முதல்வர் எம்ஜிஆர் கூறியதை பிரதமர் இந்திராகாந்தி ஏற்றுக் கொள்ளவில்லை தனது பிரதி நிதியாக மைய அமைச்சரவையில் இடம் பெற்ற யோகேந்திர மக்வானா என்ற பட்டியல் சமூகத் தலை வரை மீனாட்சிபுரத்திற்கு நேரடியாக அனுப்பினார் அன்று தமிழக காங்கிரஸ் தலைவராக எல்.இளைய பெருமாள் அவர்கள் சட்டசபையில் ஆதாரங்களுடன் மீனாட்சிபுரம் மதமாற்றம் குறித்து நிகழ்த்திய கருத்து பரிமாற்றங்கள் மற்றும் கம்யூனிஸ்ட் எம்.எல்.ஏ .என். சங்கரையா, கடையநல்லூர் எம்.எல்.ஏ. ஏ.சாகுல்

ஹமீது அவர்களது உரைகள் மற்றும் தமிழகத்தில் மத மாற்றங்கள் நிகழ்ந்த தென்காசி நன்னகரம், மதுரை கூரையூர் ஆகிய இடங்கள் குறித்த டாக்டர் இரா நெடுஞ்செழியனது சட்ட மன்ற உரை ஆகியன வரலாற்று சிறப்பு மிக்கவை.

நூற்றுக்கணக்கான வருடங்கள் ஆதிக்க சாதியினரால் தொடர்ந்த தீண்டாமை, இரட்டை குவளை முறை, பட்டியல் சமூகத்தினருக்கு திருவாடுதுறை ஆதீனத்தின் நில மறுப்பு,

பொன் பரமகுரு அவர்கள் தமிழக காவல் துறை தலைவராக இருந்த காலத்தில் நிகழ்ந்த காவல்துறை அத்துமீறல்கள் ஆகியவை மீனாட்சி புரம் இந்து பட்டியல் சமூகத்தினரை இஸ்லாத்தை நோக்கி நகரச் செய்தது என்ற தொல் திருமாவளவன் அவர்களின் வரலாற்று பதிவுகள் அவரது அரசியல் பயணத்தில் மேலும் ஒரு மைல்கல்.

வழக்கறிஞர் எட்வர்ட் ராஜனுக்கு உயர் நீதி மன்றத்தில் முன்பிணை வழங்கப்பட்டது, சாதி பாகுபாடு பார்த்த மேலதிகாரியை செருப்பால் அடித்துவிட்டு வேலையை விட்டு வந்த உமர் ஷெரீப் ,முந்தைய பெயரை சொல்ல மறுத்த ஜஃபருல்லா கான் என நூல் நிறைய நாயகர்களும் உண்டு.

தமிழகத்தின் சமூக வரலாறு குறித்து அறிய விரும்புபவர்கள் அனைவரும் படிக்க வேண்டிய நூல்.


சமூகவியல் அறிஞரும் எழுத்தாளருமான தொ. பரமசிவன் அவர்கள் குறிப்பிடும் தமிழகத்தின் பண்பாட்டு அசைவுகள் பற்றி நன்கு அறிந்த டாக்டர். தொல். திருமாவளவன் அவர்கள் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவது மகிழ்ச்சியே ! அவரது குரல் பாராளுமன்றத்தில் ஒலிக்குமென்பதால் இரட்டிப்பு மகிழ்ச்சி . !!

*தி.லஜபதி ராய்*
*05.04.2019*




# அரசியலில் தூய்மையான மர்ஹூம் இஸ்மாயில் சாஹிப்

ஹாஜி. பி.எம். அப்துல் கரீம், குளச்சல்



*1)* குளச்சலில் பாரம்பரியமிக்க ஆனாகானா குடும்பத்தைச் சார்ந்தவர். தாயின் தந்தையின் மூதாதையர் சமூகத்தின் நிர்வாகிகளாக இருந்துள்ளனர். தந்தையார் கொழும்பிற்கு கருவாடு ஏற்றுமதி செய்த நல்ல வியாபாரியென அறிகிறோம்.

*2)* குளச்சலில் முஹல்லத்தில் முதல் பட்டதாரி. குளச்சல் முஹல்லத் தலைவராகவும், நகர சபைத் தலைவராகவும் இறுதி வரையும் எல்லா சமூகத்தாரிடமும் நன்மதிப்பைப் பெற்றவர். தக்கலை சட்ட மன்ற உறுப்பினராக இருந்து எல்லா மக்களிடமும் நன்மதிப்பைப் பெற்றவர்.

*3)* காமராஜரின் மீது பாசம் கொண்டவர். அவர் மதிப்பையும் அன்பையும் பெற்றவர். காங்கிரஸ் பிளவுபட்டபோது திரு. காமராஜ் அணியோடு இருந்தார். பிறகு தமிழ்நாடு ஜனதா தள தலைவராக அகில இந்திய ஜனதா தள செயற்குழு உறுப்பினராக இருந்து வந்தார். திரு. தேவ கௌடாவின் அன்பைப் பெற்றவர்.

*4)* அரசியலில் அவரின் தூய்மைக்கு குளச்சல் இஸ்லாமிய இளைஞர் முன்னேற்றச் சங்க சார்பாக *31.12.1996* அன்று வெள்ளிவிழா நடைபெற்றது. அவ்விழாவில் அரசியலில் தூய்மைக்கு இறையருட் கவிமணி பேராசிரியர் அப்துல் கஃபூரால் ‘தீன்வழிச் செம்மல்’ விருது கொடுக்கப் பட்டது. அக்கூட்டத்திற்கு தலைமை ஏற்கும் பேறு எனக்குக் கிடைத்ததற்கு இறைவனுக்கு நன்றி சொல்ல கடமைப்பட்டுள்ளேன்.

*5)* இவர் ஓர் சிறந்த வழக்கறிஞர். வழக்கு கொண்டு வருபவரிடம் ஊர் போக பணம் இருக்கிறதா? என விசாரிக்கும் இயல்பு கொண்டவர். அரசியலில் ஈடுபட்டதால் வழக்கறிஞர் தொழிலை நிறுத்த வேண்டியதாயிற்று.

*6)* முன்னாள் முதல்வர் காமராஜர் பக்தவச்சலம், கலைஞர், எம்.ஜி.ஆரால் மதிக்கப்பட்டவர். இந்திராகாங்கிரஸ் செல்வாக்குப் பெற்றிருந்த





போது அவர் பார்வை இவர் மீது இருந்ததை மர்ஹூம் Dr. N.A. நூர் முகம்மது, Ex.MLA., யுடன் நான் ஒரு பொழுது பேசும்போது என்னிடம் சொன்னார்கள்.

*7)* ஒரு பொழுது குமரி மாவட்ட காங்கிரஸ் தலைவர் தேர்தலில் ஜனாப் இஸ்மாயில் சாகிப் நின்றபோது திரு. காமராஜர் தலையிட்டு எதிர்ப்பில்லாமல் அவரை மாவட்ட தலைவராக்கினார். மர்ஹூம் ஜனாப். இஸ்மாயில் சாகிபின் அரசியல் தூய்மைக்கு குளச்சல் இஸ்லாமிய இளைஞர் முன்னேற்ற சங்கம் சார்பாக அன்றைய சங்கத் தலைவர் ஜனாப். T. அப்துல் ஆசிம் என்னிடம் காயிதேமில்லத் கல்வி மற்றும் அறக் கட்டளை சார்பில் அரசியலில் மற்றும் பொது வாழ்வில் நேர்மைக்காக விருது கொடுக்க நம் வழக்கறிஞர் இஸ்மாயில் சாகிபுக்கு விருதும் பாராட்டும் கொடுக்க குளச்சல் இஸ்லாமிய இளைஞர் முன்னேற்ற சங்கம் சார்பாக கடிதம் மூலம் காயிதேமில்லத் அறக்கடட்ளையை வேண்டினோம். அறக்கட்டளை நம் அமைப்பின் வேண்டுகோளை ஏற்று *31.08.2019* சென்னையில் விழாவினபோது ஹிந்த் குழுமம் தலைவர் என். இராம் தலைமையில் கல்வியாளர்களால் பாராட்டப்பட்டு காயிதேமில்லத் விருது மர்ஹூம் இஸ்மாயில் சாகிபுக்கு வழங்கப்பட்டது. நிகழ்ச்சியில் அறக்கட்டளை அழைப்பை ஏற்று இஸ் மாயில் இளைஞர் முன்னேற்ற சங்கம் சார்பாக தம்பி T. அப்துல் ஆசிம் கலந்து கொண்டார்.

*8) 03.01.2021* அன்று காலம் சென்ற ஜனாப். P. முகம்மது இஸ்மாயில் சாகிபுக்கு சங்கம் சார்பாக இரங்கல் கூட்டம் நடைபெற்றது. தலைவர் ஜனாப். பரோஸ்கான் தலைமையில் ஜனாப்கள் நல்லாசிரியர் விருது பெற்ற ஜனாப் M. அமீர் ஹூஸைன், S. முகம்மது யூசுப், ஹாஜி. பி.எம். அப்துல் கலாம் ஆகியோர் இரங்கலுரை யாற்றினர். மர்ஹூம்P. முகம்மது இஸ்மாயில் சாகிப் ஆன்மா ஈடேற்றம் பெற கூட்டத்தில் துஆச் செய்யப்பட்டது. கூட்ட ஏற்பாடு சங்க பொருளாளர் ஜனாப் சமினுத்தினால் செய்யப் பட்டது.

*31.12.1996* அன்று இ.இ.மு. சங்க *25*–வது விழாவில் (வெள்ளி விழாவில்) மர்ஹூம் P. முகம்மது இஸ்மாயில் சாகிபுக்கு தீன்வழிச் செம்மல் விருது மர்ஹூம் இறையருட் கவிமணியால் கொடுக்கப்பட்ட புகைப்படம் இணைத் துள்ளோம்.



# இமாதுத்தீன் ஸங்கி (ரஹ்)
# நூருத்தீன் ஸங்கி (ரஹ்)
# சுல்தான் ஸலாஹுத்தீன் அய்யூபி (ரஹ்)

## ஓர் அறிமுகம்



வரலாற்றில் முஸ்லிம்கள் மறக்கக்கூடாத நபர்களில் முக்கியமானவர்கள் இமாதுத்துன் ஸங்கி (ரஹ்), நூருத்தீன் ஸங்கி (ரஹ்) மற்றும் ஸலாஹுத்தீன் அய்யூபி (ரஹ்) ஆகியோர். ஆனால் மறக்கப்பட்டு விட்டவர்கள்.

நபி(ஸல்) அவர்களுக்கு பின்னர் நேர்வழி பெற்ற கலீபாக்களாலும் அதன் பின்னர் வந்த இஸ்லாமிய ஆட்சியாளர்களாலும் இஸ்லாம் வேகமாக வளர்ந்தது. உமர் (ரலி) அவர்களுடைய காலத்தில் ஜெருசலேம் இஸ்லாமிய ஆட்சியின் கீழ் வந்தது.

ஜெருசலேம் யூதர்களுக்கும் கிறித்தவர்களுக்கும் முக்கியமான பூமி. குறிப்பாக கிறித்தவர்களுக்கு அது ஏசு பிறந்த மண். எனவே, அவர்கள் இந்த மண்ணை கைப்பற்ற எல்லா விதமான முயற்சிகளையும் செய்து வந்தனர். அதற்காக கி.பி.1095–இல் போப் அர்பன் 2 என்பவர் உத்தரவின் பேரில் ஐரோப்பிய நாடுகளில் உள்ள கிறித்தவர்கள் ஒவ்வொருவரின் வீட்டிலிருந்தும் ஒருவர் என பங்கேற்று முஸ்லிம்களுக்கு எதிராக ஒரு போரை தொடங்கினர். இதன் பெயர் சிலுவைப்போர். இப்படி பல சிலுவைப்போர்கள் முஸ்லிம்களுக்கு எதிராக நடத்தப்பட்டன.

இப்படி நடத்தப்பட்ட அனைத்து சிலுவைப் போர்களிலும் சிலுவைப்படையினர் முஸ்லிம்களுக்கு எதிராக பல்வேறு கொடுமைகளை அரங்கேற்றினர். இந்த சிலுவைப்படையினர் தாங்கள் படையெடுத்து வந்த வழி நெடுகிலும் பல்வேறு அநியாயங்களை முஸ்லிம்களுக்கு செய்தனர். இந்த அநியாயங்களில் அவர்கள் கிறித்தவர்களையும் கூட விட்டு வைக்கவில்லை. அவர்களையும் கொலை செய்தனர். சிலுவைப் படையினரின் குதிரைகளின் முழங்கால்கள் ரத்தத்தில் மூழ்கும் அளவிற்கு ரத்த சகதி இருந்தது என வரலாற்றில் பதியப்பட்டது. அந்த அளவிற்கு வெறி கொண்ட கூட்டமாக அவர்கள் இருந்தனர். சிறுவர்களோ பெரியவர்களோ யாரையும் அவர்கள் உயிரோடு விட்டு வைத்ததில்லை. கண்ணில் காண்வர்களை எல்லாம் கொன்று, பார்வையில் பட்டதை எல்லாம் கொள்ளையடித்து சென்றனர்.

அப்படிப்பட்ட சிலுவைப்படையினரின் தாக்குதல்களை தடுக்கவே முடியாத கையறு நிலையில் முஸ்லிம்கள் இருந்து வந்த வேளையில் முதன் முதலில் அவர்களை நோக்கி எதிர் தாக்குதலை தொடுத்தவர் இமாதுத்தீன் ஸங்கி அவர்கள். முஸ்லிம்களை ஒரு தலைமைக்குள் கொண்டு வர முயன்றவர். ஜிஹாதை மறந்து இருந்த இஸ்லாமிய சமுதாயத்திற்கு ஜிஹாதை மீண்டும் நினைவுப்படுத்தியவர். கிறித்தவர்களின் கையில் இருந்து எடெஸ்ஸா போன்ற முக்கியமான பகுதிகளை கைப்பற்றியவர்.

இதன் பின்னர் இந்த பணிகளை அடுத்த நிலைக்கு எடுத்து சென்றவர் நூருத்தீன் ஸங்கி

அவர்கள். சிலுவைப்படையினரை சின்னா பின்னப்படுத்தியவர். இன்று சுல்தான் ஸலாஹுத்தீன் அய்யூபி(ரஹ்) அவர்களை தெரியாதவர்கள் யாரும் இருக்க மாட்டார்கள். ஆனால் சுல்தான் ஸலாஹுத்தீன் அய்யூபி அவர்களின் தலைவராக, வழிகாட்டியாக இருந்தவர் சுல்தான் நூருத்தீன் ஸங்கி அவர்கள்.

இஸ்லாத்தை பின்பற்றுவதிலும் அதனை செயல்படுத்துவதிலும் நேர்வழி நின்று ஆட்சி செய்த, சொர்க்கத்திற்கு நன்மாராயம் கூறப்பட்ட நான்கு கலீஃபாக்கள், அவர்களுக்கு பின்னர் உமர் இப்னு அப்துல் அஜீஸ்(ரஹ்), இவர்களுக்கு பின்னர் நூருத்தீன் ஸங்கி (ரஹ்) அவர்களை தான் இந்த பெருமக்களுக்கு இணையாக கூறமுடியும்.

மேற்கத்திய நாடுகளுக்கு எதிராக முஸ்லிம் ஆட்சியாளர்களுடன் குறிப்பாக வடக்கு ஈராக் போன்ற நாடுகளுடன் இணைந்து ஒரு திறமை யான இஸ்லாமிய தடுப்பு படையை உருவாக்கி யவர் நூருத்தீன் ஸங்கி (ரஹ்) அவர்கள்.

நூருத்தீன் ஸங்கி அவர்களின் கனவு ஒன்று தான். முஸ்லிம்கள் ஒன்றிணைய வேண்டும். ஈப்ரடீஸிலிருந்து நைல் வரை உள்ள இஸ்லாமிய பகுதிகள் அனைத்தையும் இணைத்து சிலுவைப் படையினருக்கு எதிராக ஓர் ஒருங்கிணைந்த இஸ்லாமிய படையை உருவாக்க வேண்டும் என்பதே அந்த கனவு.

நூருத்தீன் ஸங்கிக்கு பிறகு அந்த பணியை தொடர்ந்தவர்ஸலாஹுத்துன்அய்யூபிஅவர்கள். இவர் காலத்தில் தான் ஜெருசலேம் முஸ்லிம் களின் கையில் வந்தது. இந்த வடு ஆறாத வடுவாக கிறித்தவர்களுக்கு இருந்தது. முதலாம் உலகப்போரின் போது பிரெஞ்சு தளபதி ஹென்றி ஜோசப் ஈகுவின் கௌராட் என்பவன் சலாஹுத்தீன் அய்யூபி அவர்களின் அடக்கஸ்தலத்தை எட்டி உதைத்து ‘எழுந்திரு, ஸலாஹுத்தீன் நாங்கள்திரும்பிவந்துவிட்டோம். இன்றையதின ம் பிறையை சிலுவை வெற்றி கொண்டு விட்டது‘ என்று சொன்னதிலிருந்து ஸலாஹுத்தீன் அய்யூபி அவர்கள் கிறித்தவர்களுக்கு கொடுத்த அடி எப்படிப்பட்டது என்பதை உலகம் அறியும். கிறித்தவஉலகம்கிட்டத்தட்டஎண்ணூறுவருடங் களுக்கு பிறகு வரலாற்றை நினைவில் வைத்து இஸ்லாமிய உலகத்தை பழி தீர்த்து கொண்டது. ஆனால் இஸ்லாமியர்கள் தங்களது வரலாற்று நாயகர்களை மறந்து விட்டது தான் வேதனை. இனி உள்ளே...

## மிகச்சிறந்த போர் தந்திரம்

குதிரைப் படையினர் முஸ்லிம்களை துரத் திக்கொண்டு வெளியே வரவேண்டும். அதன் காரணமாக காலாட்படையினர் தனித்து விடப் பட்ட அந்த நேரத்தை பயன்படுத்திக் கொண்டு முஸ்லிம்கள் காலாட்படையினரைத் தாக்கி பெருத்த சேதத்தை உண்டு பண்ணவேண்டும். முஸ்லிம்களின் குதிரைப் படையினரை துரத்திக் கொண்டு சென்ற கிறிஸ்தவர்களின் குதிரைப் படையினர் திரும்பி வந்து பார்க்கும் போது அவர்களின் காலாட்படையினர் ஒருவர் கூட மிச்சம் இருக்கக்கூடாது. கிறிஸ்தவர்களின் குதிரைப்படையினர் திகைத்து நிற்கும் நேரத்தில் முஸ்லிம்கள் அவர்களை சுற்றிவளைத்து அவர் களை தாக்க வேண்டும். இந்த திட்டம் மிகச் சரியாக நடந்தேறியது.

முஸ்லிம்களில் வலது பக்கம் இருந்த படை யினரை சிலுவைப்படையின் குதிரைப்படை யினர் துரத்திச் சென்ற நேரத்தில் சிலுவைப் படையினரின் காலாட் படையினரை ஜைனுதீன் அவர்களின் படைகளும் மொசூலின் படைகளும் தாக்கி பெரும்பாலானோரை கொன்று பலரை சிறைபிடித்தனர். முஸ்லிம்களை துரத்தி சென்ற கிருத்துவ குதிரைப்படையினர் திரும்பி வந்து பார்த்தபோது அவர்களின்காலாட்படையினரில் பலர் மண்ணோடு மண்ணாக இரத்தத்தில் தோய்ந்து கிடந்தனர். இந்த காட்சியை கண்டு கிறித்தவ குதிரைப்படையினர் திகைத்து கதி கலங்கி போய் நின்றிருந்த நேரத்தில் முஸ்லிம்கள் அவர்களை சுற்றி வளைத்தனர்.

கிறித்தவர்கள் நிதானமிழந்திருந்தனர். எனி னும் மிக ஆக்ரோஷமாகவே போர் நடந்தது. முஸ்லிம்கள் தீரத்துடன் போர் செய்து கிறித்தவ படையினரை சின்னாபின்னமாக்கினர். இலக்கை நோக்கி குறிப்பாக பாயும் பருந்தினை போல முஸ்லிம்கள் எதிரிகள் மீது பாய்ந்தனர். கடைசியாக வேறு வழியின்றி சிலுவைப் படை யினர் முஸ்லிம்களிடம் தோற்று சரணடைந்தனர்.

இந்தப் போரில் முஸ்லிம்கள் சிலுவைப் படையினரின் வீரர்களில் பெரும்பாலானோரை கொன்று பலரை சிறைபிடித்தனர். கிட்டத்தட்ட

10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சிலுவை படையின் வீரர்கள் இந்த போரில் கொல்லப்பட்டனர். சிறை பிடிக்கப்பட்ட வீரர்களின் எண்ணிக்கை சரிவரத் தெரியவில்லை என்றாலும் பல முக்கிய மான சிலுவை படையின் தலைவர்கள் கைது செய்யப்பட்டனர் என்பதிலிருந்து அது நிச்சய மாக குறைந்த அளவிலான எண்ணிக்கை அல்ல என்பதை ஓரளவிற்கு ஊகிக்க இயலும்.

இந்த வெற்றிக்கு பிறகு நூருத்தீன் அவர்கள் தன் படையினருடன் ஹரீமுக்கு சென்றார். அந்த இடத்தை தன்னுடைய கட்டுப்பாட்டிற்குள் அவர் கொண்டு வந்துவிட்டார். ஹரீமுக்காக நடந்த போரின் போது அவர் அந்தியோக்கியா வின் மன்னன் பேய்மண்டை கைது செய்திருந் தார். ஹரீமில் தங்கியிருந்த நேரத்தில் அந்தியோக் (தற்போதைய துருக்கியின் ஒரு பகுதி. மாவீரன் அலெக்சாண்டரின் படைத்தளபதியால் கி.மு. 300ம் ஆண்டில் உருவாக்கப்பட்ட நகரம்) பகுதி எந்தவிதமான பாதுகாப்புமின்றி இருப்பதை கண்ட நூருத்தீன் ஸங்கியின் தோழர்கள் அந்த நகரத்தை தாக்கி கைப்பற்றலாம் என ஆலோ சனை கூறினர்.

ஆனால் நூருத்தீன் ஸங்கி அவர்கள் இந்த யோசனையை ஏற்கவில்லை. அவர் தன் தோழர் களை நோக்கி, ‘நாம் அந்தியாக்கியாவை நகரை கைப்பற்றுவது எளிது. ஆனால் அந்த நகரத்தில் உள்ள கோட்டையை கைப்பற்றுவது அத்தனை எளிதல்ல. அதை நாம் கைப்பற்ற வேண்டுமெனில் மிக நீண்ட நாட்கள் முற்றுகையிட வேண்டியிருக் கும். அப்படி நாம் அந்தியோக்கியாவை முற்றுகை யிட்டால் அந்த பகுதி மக்கள் அந்த கோட்டையை கான்ஸ்டான்டிநோபிள் ஆட்சியாளரிடம் ஒப்ப டைத்துவிடுவார்கள். அது நமக்கு பல சிக்கல் களை உருவாக்கிவிடும். நமக்கு அருகாமையில் ரோமாபுரியின் மன்னன் இருப்பதை விட அந்தியோக்கியாவின் ஆட்சியாளன் பேய்மண்ட் இருப்பதே சிறந்தது.‘ என்று கூறிவிட்டார்.

இதன் பின்னர் அவர் மிகப்பெரிய பணயத்தொகையையும் முஸ்லிம் கைதிகளின் விடுதலையையும் பெற்றுக்கொண்டு மன்னன் பேய்மண்டை விடுதலை செய்தார். பணயத் தொகையாக பெற்ற செல்வத்தை பின்வந்த காலங்களில் இறைவழியில் போர் புரிவதற்காக செலவிட்டார்.

## ஹிஜ்ரி 560 கி.பி. 1165 பனியாஸ் கோட்டை வெற்றி

ஹரீம் கோட்டை வெற்றிக்கு பிறகு திரும்பிய நூருத்தீன் அவர்கள் தன்னுடைய மொசூல் படை யினர் மற்றும் தியர் பக்ர் படையினரை அவர வருடைய சொந்த ஊருக்கு திரும்ப அனுமதி அளித்தார்.

பின்னர் அவர் திபரியஸை கைப்பற்ற விரும்பு வது போல் சில நாடகங்களை அரங்கேற்றி னார். அனைவருக்கும் மத்தியில் இந்த செய்தியை பரப்பினார். வழக்கம் போல் இந்த முறையும் நூருத்தீனிடம் எதிரிகள் ஏமாந்தனர்.

ஃபிரான்குகளின் ஒற்றர்கள் இந்த செய்தியை உண்மையென கருதி அதனை அப்படியே ஃபிரான்குகளிடம் கொண்டு சேர்த்தனர். இதன் மூலம் ஃபிரான்குகளின் ஒட்டுமொத்த கவனத் தையும் திபரியஸ் பக்கம் திருப்பினார் நூருத்தீன். அவரின் திபரியஸை வெற்றி கொள்ளும் கனவை எப்படியாவது சிதைத்துவிட வேண்டும் என்று ஃபிரான்குகள் நினைத்தனர். எனவே, தங்களின் படைகளை திபரியஸை பாதுகாக்க ஒன்று கூட்டினர். இவை அனைத்தும் நாடகம் என்பது அவர்களுக்கு தெரியாது.

இப்படி ஃபிரான்குகளின் கவனத்தை திபரியஸ் பக்கம் திருப்பிய பின் நூருத்தீன் தன் படைகளை பனியாஸ் கோட்டையை நோக்கி நகர்த்தினார். அங்கு மிக சிறிய ஃபிரான்குகளின் படையினரே காவலுக்கு இருந்தனர். தான் சென்ற வேலையை வெற்றிகரமாக முடித்து பனியாஸ் கோட்டையை தன்வசப்படுத்தினார் நூருத்தீன்.

இந்த போரின் போது அவருடைய சகோதரர் களின் ஒருவரான நஸ்ரத்தீன் அவர்களும் போர் களத்தில் முன் நின்று போர் செய்து கொண்டி ருந்தார். இந்த போரின் போது எங்கிருந்தோ பாய்ந்து வந்த ஓர் அம்பு அவருடைய கண்ணை தைத்தது. இதில் அவர் தன் கண்களில் ஒன்றை இழந்தார். இதன் காரணமாக அவர் கவலையுற் றார். இதனை கண்ணுற்ற நூருத்தீன் அவர்கள் தன் தம்பியிடம், ‘அன்பு சகோதரா, மறுமை நாளில் இதன் கூலி என்னவென்பதை நீ அறிந் தால், மீதமுள்ள இன்னொரு கண்ணையும் நீ இழக்கவே விருப்பப்படுவாய்‘ என்று அவருக்கு அறிவுரை கூறி தேற்றினார்.

## ஹிஜ்ரி.561 கி.பி.1166 – அல் முனைதிரா கோட்டை

இதன் பின்னர் கி.பி.561–இல் நூருத்தீன் ஸங்கி அவர்கள் அல்முனைதிரா கோட்டையை கைப்பற்ற திட்டமிட்டார். அந்த கோட்டையும் ஃபிரான்குகளின் வசமே இருந்தது. இந்த முறை அவர் வழக்கம் போலல்லாமல் வேறொரு தந்திரத்தை கையாண்டார். அவர் தன்னுடைய படையை மொத்தமாக அங்கு திரட்டவில்லை. மாறாக அங்கும் இங்குமாக சிறு சிறு படைகளை வரவழைத்தார். ஆனாலும் அவருடைய திட்டத்தை எதிரிகள் தெரிந்துகொண்டனர்.

அவர்கள் அந்த கோட்டையை காப்பாற்ற தங்களுடைய படைகளை திரட்டனர். நூருத்தீன் அந்த கோட்டையை முற்றுகையிட்டார். நூருத்தீன் அவர்களின் படையினர் திடீரென எதிரிகள் எதிர்பார்க்காத ஒரு சூழ்நிலையில் கோட்டைக்குள் நுழைந்து தாக்குதல் நடத்தி அந்த கோட்டையை கைப்பற்றினர். எதிரிகளுக்கு நூருத்தீன் அவர்கள்ஒருசிறுபடையினருடன்தான்தாக்குதல் நடத்துகிறார் என்பது தெரியாது. தெரிந்திருந்தால் அவர்கள் முந்திக்கொண்டு வந்து அவரை தாக்கியிருப்பார்கள். ஆனால் அவர்கள் நூருத்தீன் ஒரு பெரும்படையினருடன் வந்து தான் தாக்குதல் நடத்துகிறார் என்று எண்ணிக் கொண்டு இருந்ததால் ஏற்கனவே உளவியல் ரீதியாக தோல்வியை ஏற்றுக் கொண்டுவிட்டனர். இதன் பின்னர் நூருத்தீன் அவர்களின் படையினருக்கு வெற்றி எளிதாகிப்போனது. எதிரிகளின் படையினரில் பலர் கொல்லப்பட்டனர். பெரும் பொருளும்போர்வெற்றிப்பொருளாககிடைத்தது. அந்த கோட்டையை இழந்த பின்னர் எதிரிகளுக்கு அந்த கோட்டையை மீண்டும் கைப்பற்றும் எண்ணமே விட்டுப்போனது.

## ஹிஜ்ரி 562 கி.பி. 1167

அசதுதீன் அவர்கள் எகிப்திற்கு சென்று அதை வெற்றி கொள்ள விரும்பினார். ஏற்கனவே, ஷவார் மீது அவர் கொண்டிருந்த பகை இதற்கான காரணம். ஷவார் செய்த துரோகம் அவரை சீற்றம் கொள்ள செய்திருந்தது. இது குறித்து அவர் நூருத்தீன் ஸங்கி அவர்களிடம் உத்தரவு கேட்டார். அவர் அனுமதி அளித்ததும் அசதுதீன் எகிப்தை நோக்கி படையெடுத்தார். நூருத்தீன் ஸங்கி அவர்கள் அசதுதீன் அவர்களின் மருமகன் ஸலாஹுத்தீன் யூசுப் இப்னு அய்யூப் (சுல்தான் ஸலாஹுத்தீன் அய்யூப் அவர்களே தான்) அவர்களையும்இன்னும்தன்னுடையகட்டுப்பாட்டில் இருந்த சில குறுநில மன்னர்களையும் அசதுதீன் அவர்களுக்கு உதவி செய்யுமாறு கூறி அனுப்பி வைத்தார்.

இதன் பின்னர் அசதுதீன் எகிப்தின் பகுதியை வந்தடைந்தார். அங்கே அவர் கிஸா என்ற பகுதியில் தங்கினார். இது பழைய கெய்ரோவிற்கு அருகில் உள்ளது. அங்கு அவர் 54 நாட்கள் தங்கினார். இப்போது அசதுதீன் தன் படையினருடன் தாக்க வந்துள்ள தகவல் ஷவாருக்கு தெரிய வந்தது. அவர் பதட்டமடைந்து உடனடியாக ஃபிரான்குகளுக்கு செய்தி அனுப்பி அவர்களிடம் உதவி கோரினார். அவர்களும் அவருடைய கோரிக்கைக்கு உடனடியாக செவி சாய்த்தனர். எகிப்தை தங்களுடைய கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரும் பேராசை அவர்களை வெகுவாக விரட்டியது. அதையும் தாண்டி நூருத்தீன் அவர்களின் படையினர் கைகளுக்கு எகிப்து சென்றுவிடக் கூடாது என்ற பயம் எதிரிகளை அவர்களுடைய சக்தியை தாண்டி எகிப்திற்கு சென்று உதவும் படி அவர்களை தூண்டியது.

எனவே, வேகவேகமாக அவர்கள் எகிப்தை நோக்கி தங்களை படைகளை நகர்த்தினர். ஒருபுறம் நம்பிக்கையும் மறுபுறம் பயமும் அவர்களை அந்த இடத்திற்கு வரவழைத்தது என்றால் மிகையல்ல.

கிறித்தவபடைகள் (ஃபிரான்குகள்) எகிப்தை அடைந்தவுடன் அவர்கள் மேற்கு பக்கத்தை கடந்து சென்றனர். அசதுதீன் அவர்களின் படைகள் எகிப்தின் மேல்பகுதியில் அல்பனீன் என்ற இடத்தை வந்தடைந்தனர். அசதுதீன் அவர்களின் படைகளை எகிப்து மற்றும் கிறித்தவ படைகள்பின்தொடர்ந்துவந்தன. ஒருகட்டத்தில் எகிப்து, கிறித்தவ படைகள் இவர்களின் படைகளை தாண்டி முன் சென்றனர். அசதுதீன் முன்னேறி செல்வதை தடுப்பதற்காகவே இவ்வாறு அவர்கள் செய்தனர்.

அசதுதுன் தன்னுடைய உளவாளிகளை எகிப்து மற்றும் கிறித்தவ படைகளை உளவு பார்க்க அனுப்பி வைத்தார். அவர்கள் சென்று உளவு பார்த்து திரும்பி வந்து எதிரிகளின் படைகள் எண்ணிக்கையில் அதிக அளவில் இருப்ப

தாகவும் அவர்கள் எப்படியாவது அசதுதீனை பிடித்துவிட வேண்டும் என்ற முனைப்பில் இருப்பதாகவும் தகவலை கொண்டு வந்தனர். இந்த தகவல் அசதுதீனை சற்று அசைத்துவிட்டது.

எதிரிகளுடன் போர் புரிவதற்கு தயாராகவும் உறுதியுடனும் இருந்த போதிலும் தன்னுடைய படைவீரர்களின் மனோநிலை குறித்து அசதுதீன் கவலைப்பட்டார். எண்ணிக்கையில் குறைந்த அளவில் இருப்பதும் தங்களுடைய சொந்த ஊரிலிருந்து வெகுதூரத்தில் இருப்தும் சுற்றிலும் தங்களுக்கு உதவி செய்ய யாரும் இல்லாமலிருப்பதும் தங்களுடைய படைவீரர்களின் உறுதியை குலைத்துவிடும் என்று அவர் நினைத்தார்.

அவர் தன்னுடைய படைவீரர்களிடம் இது குறித்து விவாதித்தார். அவர்கள் ஒட்டுமொத்தமாக நைல் நதியை கடந்து லெவான்திற்கே சென்றுவிடலாம் என்று ஒப்புக்கொண்டனர்.

'ஒருவேளை நாம் போர் செய்து தோற்கடிக்கப்பட்டால் நாம் எங்கு சென்று புகல் தேடுவது? யார் நமக்கு அபயம் அளிப்பர்? நம்மை சுற்றிலும் நம் எதிரிகளே உள்ளனர். எண்ணிக்கையிலும் அவர்கள் பெரிய அளவில் உள்ளனர். சுமார் பத்தாயிரம் வீரர்கள் அவர்களிடம் உள்ளனர். நாமோ இரண்டாயிரம் வீரர்கள் மட்டுமே உள்ளோம். நாம் நம் வீட்டை விட்டு அதிக தூரத்தை கடந்து வந்துள்ளோம். நமக்கு இங்கே ஆதரவாளர்களும் இல்லை.' என்று அவர்கள் கூறினர்.

## வீரனின் வீரம்

இவ்வாறு அவர்கள் கூறிக் கொண்டிருந்த போது அவர்களுக்கு மத்தியில் ஷராஃபுதீன் புர்குஷ் என்ற வீரன் ஒருவன் இருந்தான். நூருத்தீன் ஸங்கி அவர்களால் அனுப்பி வைக்கப்பட்டிருந்த அவனுடைய வீரம் பெயர் பெற்றது. அவன் இப்போது எழுந்து அவர்கள் மத்தியில் பேச ஆரம்பித்தான். 'யாரெல்லாம் தாங்கள் கொல்லப்பட்டுவிடுவோமோ, கைது செய்யப் பட்டுவிடுவோமோ அல்லது காயம் பட்டுவிடுவோமோ என்று பயப்படுகிறார்களோ அவர்கள் போர்வீரர்களாக வந்திருக்கக்கூடாது.

நமது மன்னருக்கு படைவீரர்களாக இருக்கவும் அவர்களுக்கு எந்த விதமான உரிமையும் இல்லை. அவர்கள் ஒன்று விவசாயம் பார்த்துக் கொண்டு இருந்திருக்க வேண்டும் அல்லது தங்களுடைய வீட்டிலேயே தங்கள் பெண்களுடன் தங்கியிருந்திருக்க வேண்டும். போர்களத்திற்கு வந்திருக்கக்கூடாது. அல்லாஹ்வின் மீது சத்தியமாக வெற்றியன்றியோ அல்லது காரணம் கூற முடியாத தோல்வியுடனோ நீங்கள் வெறும் கையோடு வீடு திரும்பினால் நூருத்தீன் உங்கள் சொத்துக்களை பறித்து கொள்வார்.

அது மட்டுமன்றி நூருத்தீன் நம்மைப் பார்த்து, 'நீங்கள் உங்கள் எதிரிகளிடம் இருந்து வெருண்டோடி வருவதற்காகாகவும் எகிப்தின் நிலத்தை இறைமறுப்பாளர்களிடம் விட்டு வருதற்காகவுமா முஸ்லிம்களின் பணத்தை கொண்டு சென்றீர்கள்? என்று கேள்வி கேட்பாரே அதற்கு என்ன பதில் சொல்லப்போகிறீர்கள்' என்று கேட்டான். பின்னர் அவன் திருக்குர்ஆனின் பின்வரும் வசனத்தை சுட்டிக்காட்டினான், 'எத்தனையோ சிறுசிறுபடைகளை பெரிய படைகளை அல்லாஹ்வின் உதவியோடு வெற்றிக்கொண்டுள்ளன என்ற இறைவசனத்தை நீங்கள் ஓதியதில்லையா'.

இதைக்கேட்ட அசதுதீன், 'இதுவே என்னுடைய கருத்தும். நான் இதன்படியே செயல்பட போகிறேன்' என்று கூறிவிட்டார். ஸலாஹுத்தீன் யூசுப் இப்னு அய்யூப் அவர்களும் இந்த கருத்தை ஏற்றுக்கொண்டார். இதன் பின்னர் எல்லா வீரர்களும் உத்வேகம் பெற்றனர். தங்களின் தவறுகளை உணர்ந்தனர். அவர்களும் எதிரிகளை இறைமறுப்பாளர்களை எதிர் கொள்ள தயாராகி விட்டனர்.

இப்போது எதிரிகள் எண்ணிக்கை பத்தாயிரம். முஸ்லிம்களின் எண்ணிக்கை இரண்டாயிரம். எதிரிகளுக்கு எதிராக என்ன மாதிரியான வியூகம்வகுப்பது, எப்படி அவர்களை எதிர்கொள்வது என திட்டம் தீட்டப்பட்டது. அசதுதீன் அவர்கள் ஒரு புது தந்திரத்தை தன் படை தளபதிகளிடம் முன்வைத்தார். எதிரிகளின் முக்கிய குறிக்கோள் அசதுதீனை பிடிக்க வேண்டும் அல்லது கொல்ல வேண்டும் என்பதால் நாம் இவ்வாறு செய்யலாம் என்று ஒரு திட்டத்தை கூறினார். அவருடைய திட்டத்தை கேட்ட அவருடைய படையினர் திகைத்து போய் விட்டனர்.

– இன்ஷா அல்லாஹ் அடுத்த இதழில்.

## தலையங்கம்

# மக்களுக்கான ஆட்சியாளர் யார்..?

இந்தியாவை வல்லரசு ஆக்கிடுவோம், விவசாயிகளை காப்போம், கருப்பு பணத்தை ஒழிப்போம், இந்திய குடிமக்களின் வங்கிக் கணக்கில் 15 லட்சம் பணத்தை போடுவோம் என பல வாக்குறுதிகளை தந்து ஆட்சியைப் பிடித்தது நரேந்திர மோடி தலைமையிலான பி.ஜே.பி. அரசு.

ஆனால், இன்று வரை இவர்கள் அளித்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை. மாறாக, இந்தியா பொருளாதார வீழ்ச்சியில் வரலாறு காணாத அளவிற்கு அதல பாதாளத்தில் சென்று கொண்டிருக்கின்றது. மக்கள் தங்கள் உரிமைகளைப் பெற கடினமாக போராட வேண்டியிருக்கின்றது. வறுமையும் வேலையில்லாத் திண்டாட்டமும், பட்டினிச் சாவும், தற்கொலைகளும் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டேப் போகிறது. இப்படிப்பட்ட சூழலில் மக்களுக்கான ஆட்சியாளர் எப்படி இருக்க வேண்டும். மக்களின் துயரங்களை போக்குவதற்கான வழிகளை வகுக்க வேண்டும். ஆனால், நம்முடைய பிரதமர் நரேந்திரமோடி செய்யும் செயல்களைப் பார்த்து உலகம் விமர்ச்சித்துக் கொண்டிருக்கிறது.

சர்தார் வல்லபாய் பட்டேலுக்கு 2,989 கோடி ரூபாய் செலவில் சிலை வைத்தார். இது குறித்து பிபிசி குஜராத்தியின் ராக்ஸி கக்டேகர் அங்கிருக்கும் விவசாயிகளுடன் பேசினார். தங்களது தேவைகளை பூர்த்தி செய்ய போராடிக் கொண்டிருக்கும் வேளையில் அரசாங்கம் ஒரு சிலைக்காக பல கோடி ரூபாய் செலவிடுவது பெரும் அதிர்ச்சி அளிப்பதாக அவர்கள் கூறுகின்றனர். (www.bbc.com, 29-Oct,2018)

டெல்லி முதலமைச்சர் அர்விந்த் கெஜ்ரிவால் கூறுகிறார்

நரேந்திரமோடியின் ஆடைகளின் விலை, டெல்லி அரசாங்கத்தின் ஆண்டு விளம்பர பக்கங்களை விட அதிகமானது. பிரதமர் மோடி அணிகின்ற ஆடையின் விலை இரண்டு லட்சம். ஒரு நாளைக்கு ஐந்து ஆடைகள் அணிகின்றார். ஒருமுறை உபயோகப்படுத்திய ஆடையை மீண்டும் உபயோகப்படுத்துவதில்லை. (Name of India Car, July-1, 2018)

உமர் (ரழி) அவர்களின் ஆட்சிக் காலத்தில், மக்கள் ஆட்சியாளர் உமர் (ரழி) அவர்களைப் பார்த்து கேட்டார்கள் மிகப் பெரிய சாம்ராஜ்யத்தின் ஆட்சியாளர் நீங்கள் கிழிந்த, ஒட்டுப்போட்ட ஆடையை அணிகிறீர்களே, நல்ல ஆடையை அணியக்கூடாதா? என்று கேட்டுக்கொண்டார்கள். ஒருமுறை ஜூம்ஆ தொழுகைக்கு தொடர்ச்சியாக நேரம் தாழ்த்தி வந்ததற்கு காரணம் கூறிய போது, என்னிடம் இரண்டு ஆடைகள் தான் உள்ளன. அதில் ஒன்றை துவைத்து, காய வைத்து மீண்டும் அணிந்து வருவதற்கு நேரம் தாமதம் ஆனதாக கூறினார்கள்.

காங்கிரஸை சேர்ந்த அஸ்பேஷ் தாகூர் மோடியின் உணவு பழக்கத்தை பற்றி இப்படி கூறுகிறார்கள்..

மோடி தய்வானில் இருந்து ஒரு காளானை என்பதனாயிரம் ரூபாய்க்கு வாங்கி உண்ணுகிறார். அதாவது ஒரு நாளைக்கு ஐந்து காளானை உணவாக உண்ணுகிறார். ஒரு நாளைக்கு ரூ. 4 இலட்சம் உணவுக்காக செலவழிக்கின்றார். இது அவர் குஜராத்தின் முதலமைச்சராக இருந்ததிலிருந்து தற்போது வரை கணக்கிட்டிருக்கிறார்.

(The Economic Times.com, Dec, 13-2017)

உமர் (ரழி) அவர்களின் ஆட்சிக் காலத்தில் மிகப்பெரிய பஞ்சம் ஏற்பட்டது.

மக்கள் பசியும், பட்டினியுமாக இருந்த காலக்கட்டம். உமர் (ரழி) அவர்களுக்கு வேறு பகுதியிலிருந்து உணவுகள் கொண்டு வரப்பட்டன. அதைப் பார்த்து உமர் (ரழி) அவர்கள் கூறினார்கள். என்னுடைய ஆட்சியில் எப்பொழுது மக்கள் நன்றாக உணவு உண்கிறார்களோ, அப்பொழுது உண்பேன். என் ஆட்சியில் கடைசித்தர மக்கள் என்ன உணவு உண்கிறார்களோ அதையே நானும் உண்ணுவேன் என்று கூறி உமர் (ரழி) அவர்கள் அந்த உணவை உண்ண மறுத்தார்கள்.

கடைசி ஐந்து ஆண்டுகளில் நரேந்திர மோடி உலகம் சுற்றி வருவதற்கு செலவான தொகை *44652* கோடி. (Hindustan times.com, March-5,2020)

நரேந்திர மோடி பயணிப்பதற்காக *3,458* கோடிக்கு இரண்டு விமானம் வாங்கப்படுகிறது.

ஒட்டுமொத்த இந்தியாவிலும் கொரோனா பெருந்தொற்று மற்றும் பொருளாதார வீழ்ச்சியால் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் புதிய நாடாளுமன்றக் கட்டிடம் கட்டுவது, இந்திய அரசின் சென்ட்ரல் விஸ்டா என்றழைக்கப்படும் ராஜபாதை மறுசீரமைப்பு என்கிற பெரிய திட்டத்தின் ஏழு பகுதியாகும். இத்திட்டத்திற்கு மொத்தமாக *20* ஆயிரம் கோடி செலவாகும் என்பதால் இத்திட்டத்தை கைவிடும்படி பலரும் கடும் எதிர்ப்பு தெரிவிக்கின்றனர். ஓய்வு பெற்ற IAS, IPS அதிகாரிகள் பலரும் பிரதமர் மோடிக்கு கடிதம் எழுதியுள்ளனர்.

முதல் கலீஃபா அபூபக்ர் (ரழி) அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் அவர்களுக்கு அரசாங்க நிதியிலிருந்து மாதம் சிறுத்தொகை சம்பளமாக கொடுக்கப்பட்டது. ஒருநாள் கலீஃபா மனைவி சிறந்த உணவை தயார் செய்து கொடுத்தார்கள். அதைப் பார்த்து கலீஃபா அபூபக்ர் (ரழி) அவர்கள எப்படி இந்த உணவு கிடைத்தது என்றார். நீங்கள் வாங்கும் சம்பளத்தில் இருந்து சிறிது சிறிதாக சேமித்து இந்த உணவை ஏற்பாடு செய்தேன் என்றார்கள். உடனே கலீஃபா அவர்கள் தனக்குக் கிடைத்து வந்த மாத வருமான சிறிய தொகையை மீண்டும் குறைத்துக் கொண்டார்கள். மக்கள் பணத்தில் செலவு செய்வதில் இறைவனுக்கு அஞ்சி மிகவும் எச்சரிக்கையுடன் இருந்தார்கள்.

**அன்றியும், இவர்கள் (எத்தகையோரென்றால் இவர்களுக்கு நாம் பூமியில் (ஆட்சி புரியும்) வாய்ப்பைக் கொடுத்தால், இவர்கள் தொழுகையை முறையாக கடைப்பிடிப்பார்கள், ஜகாஅத்தும் கொடுப்பார்கள், நன்மையான காரியங்களைச் செய்யவும் ஏவுவார்கள். தீங்கை விட்டும் விலக்குவார்கள்.**

**மேலும் சகல காரியங்களின் முடிவும் அல்லாஹ்விடமே இருக்கிறது.**

**(அல்குர்ஆன் - 22:41)**

**மக்களுக்கான ஆட்சியாளர் யார் என்பதை சிந்திப்பீர், மாற்றத்தை நோக்கி பயணிப்பீர்!**

# நாகர்கோவில் பாசத்திற்குரிய வழக்கறிஞர்

# Dr.பெல்மாண்ட் S.சுவாமி

## அவர்களின் மறைவு



பொதுவாக, நீதிமன்றத்தில் மக்களின் பிரதி நிதியாக வழக்கறிஞர்கள் வாதிடுவது வழக்கம். அதில் பொதுப்பணியில், சமூகபணியில் ஈடுபடும் மக்களுக்கு பணத்தை குறிக்கோளாக கொள்ளாமல், சுயநலமில்லாமல் தன்னை நம்பி வரும் தன் கட்சிக்காரர்களுக்கு ஒரு சேவை மனப் பான்மையில் அவர்களுக்காக வரிந்துகட்டி வாதாடுவதிலும் அவர்களை வழக்கிலிருந்து காப்பாற்றுவதிலும் தன்னை முழுமையாக அர்ப் பணித்துக் கொண்டவர், எளிமையான நடை முறை கொண்டவர் அன்பான Dr. பெல்மாண்ட் S. சுவாமி, M.A.,M.B.A.,M.T.M.,M.Phil.,L.L.M.,Ph.D., அவர்கள் தன் கணிவான வார்த்தைகளாலும், உபசரனையைக் கொண்டும் எங்களை கவர்ந்த ஓர் சிறந்த வழக்கறிஞர், நல்ல மனிதர். தோற்றம் : *13–09–1957*, மறைவு : *31–01–2021*

பொதுப் பணியில் ஈடுபடும் எங்களுக்கு காவல் துறையால் பின்னப்படும் சதிகளிலி ருந்தும், பொய் வழக்குகளிலிருந்தும் காத்து, வாதாடும் திறமையால் எங்களை இறைவனின் மாபெரும் கிருபையைக் கொண்டு சிறை சென்றிடுவதைத் தடுத்து நிறுத்தியவர். எங்களை அவர் ஒருபோதும் கட்சிக்காரராக பார்ப்ப தில்லை. மாறாக, குடும்ப உறுப்பினர்கள் போல் எங்களுக்கு தைரியத்தைத் தந்து, எங்களோடு எங்கள் வழக்குகளை பார்த்துக் கொண்டவர். தன் கரங்களால் எழுதப்படும் மனுக்களின் ஆங்கில எழுதுமைக்கு நீதிபதிகளால் பாராட்டப் பட்டவர்.

ஒருமுறை மாஹீன் என்ற சகோதரனின் வழக் கில் அவர் எதிர் வாதாடுவதை கண்டு கலங்கிய CB CID Inspector அவரிடம் என்ன ஸார் இப்படி வாதாடுகிறீர்கள் என்று கேட்டமைக்கு அவர் இப்படி பதிலுரைத்தார். இப்படி என்னை நம்பி வந்தவர்களை நான் காப்பாற்ற வேண்டும். நீங்கள் உண்மை குற்றவாளிகளை தப்ப விட்டுவிட்டு இதுபோன்ற அப்பாவிகளின் மீது வழக்கு பதிவு செய்தால், நான் அப்படித்தான் வாதிடுவேன் என இறுக்க மாக பதிலுரைத்த அந்த வார்த்தை இன்னும் எங்கள் காதில் ஒலித்துக் கொண்டே இருக்கிறது.

தன்னுடன் இருக்கும் மற்ற ஜூனியர் வழக்கறி ஞர்களையும் சமமாக நடத்தியவர். தன் வழக்கு கோப்புகளை தன் சக ஜூனியர்களிடம் படிக்க கூட கொடுக்காத மற்ற வழக்கறிஞர்கள் மத்தியில் தன் வழக்கு கோப்புகளை தன் சக ஜூனியர்களி டம் படிக்கச் செய்து கருத்துக்களை பெற்றுப் அவர்களையும் ஊக்குவிக்கும் குணம் கொண்ட வர். அவர்களையும் வார்த்து எடுத்தவர்.

அவரது ஜூனியர் வழக்கறிஞர் சுசீலா அவர்கள் கூறுகையில்...

ஒருமுறை நான் அவரிடம் இப்படி ஒரு பழமொழியை சொல்லிக் கேட்டேன் ''தானும் படுப்பதில்லை எங்களையும் படுக்கவிடுவ தில்லை என்று'' அதற்கு பெல்மாண்ட் சார் அவர்கள் ஏன் இப்படி கூறுகிறாய் என்று கேட்டமைக்கு இல்லை சார், தாங்களும் தங்கள் கட்சிக்காரர்களிடம் பீஸ் வாங்குவதில்லை, எங்களையும் பீஸ் வாங்க விடுவதில்லை ஏன் என்றேன்? அதற்கு அவர் கூறிய பதில், நாம் நிறைய பணம் வாங்கினால் தன் தேவைக்கு மேல் பணம் வாங்கினால் நாம் நாளை இறை வனிடம் கணக்கு கொடுக்க வேண்டும். அதனா லேயே நான் அப்படி நடந்து கொள்கிறேன் என்று ஒரு முஃமின் மறுமைக்கு பயந்ததுபோல் பதிலுரைத்தது எங்களை ஆச்சரியததில் வீழ்த்தி யது. இறுதிவரை அவர் அப்படியே நடந்து

கொண்டார் என்பது ஆனித்தனமான உண்மை. உமர் (ரழி) அவர்களின் வாழ்க்கை வரலாற்றை கேட்டுப் பெற்று அதை வாசித்தவர், அறிந்தவர்.

இதுபோல், ஒருமுறை ஓர் மேல்முறையீடு வழக்கிற்காக தன் ஜூனியர் வழக்கறிஞர் சரவணன் அவர்களுடன் ஆவணங்களை தயார் செய்யவிருக்கும் பொழுது என்னையும் அழைத்து அத்துடன் கலந்துகொள்ள கூறினார்கள். அந்த அமர்வில் மற்றொரு ஜூனியர் வழக்கறிஞர் விஜயா மஹிலும் உண்டு, அதில் அந்த ஆவணத்தை எழுதிக்கொண்டு வரும்பொழுது தனது முந்தைய அனுபவத்தையும் கூறிக் கொண்டே வந்தார் பெல்மாண்ட் சார். அதில் மேற்முறையீட்டு வழக்கிற்கு குறைவான நேரங்களில் வாதாடும் வழக்கறிஞர்கள் லட்சத்தில் பணம் கேட்பார்கள் என்றார். உடனே வழக்கறிஞர் விஜயா மஹில் அவர்கள் பெல்மாண்ட் சாரை இடை மறித்து, என்னை கை நீட்டி, காண்பித்து சார் இவருக்கு அப்படி வந்தால் நீங்கள் என்ன பீஸ் வாங்குவீர்கள் என்று கேட்டார். நான் மலைத்து போன ஒரு பதிலைக் கூறினார்கள் பெல்மாண்ட் அவர்கள்

இவனிடமா? இவனிடம் நான் வேறு என்ன வாங்க முடியும். ஒரு டீயும், இரண்டு வடையும் தான் என்றார்கள். என் உடல் சிலிர்த்துவிட்டது. அவர் வடையும், டீக்குமாக அவ்வாறு கூற வில்லை. நாங்கள் இருவரும் அடிக்கடி சந்தித்து வழக்குகள் குறித்தும், பொது விஷயங்கள் குறித்தும் பேசுவது உண்டு. எங்கள் சந்திப்பில் நாங்கள் இருவரும் டீயும், வடையும் சுவைப்பதும் உண்டு. எங்கள் நட்பான, சந்திப்பையே பெல்மாண்ட் சார் அவர்கள் அவ்வாறு பதிலாக உரைத்தார்கள்.

எங்களுக்கு காவல்துறையிடம் அநியாயமாக நெருக்கடி வரும் பொழுதெல்லாம் பெல்மாண்ட் சார் அவர்களை அழைத்தால் சற்று நேரத்தில் அவருக்கு தெரிந்த காவலர்களிடம் தொடர்பு கொண்டு விசாரித்து எங்களிடம் ஒன்றும் பெரிய விஷயமில்லை இன்ன விஷயம்தான், நாம் பார்த் துக் கொள்ளலாம் என தைரியமூட்டி அதற்கான வழிமுறைகளைகாசு, பணம்வாங்காமல்உங்களது பாசம் மட்டுமே போதுமென்று செய்து முடித்து தருபவர். யாரகினும் இறைவன் அழைத்துக் கொண்டால் அவனிடம் சென்றாக வேண்டும் என்ற விதிமுறைதான் நம் மனதைக் கட்டுப் படுத்துகிறது. இன்னும் கூற அவரது சேவைகள் உண்டு.

பெல்மாண்ட் சாரின் இறுதி சடங்கிலும் எங்கள் நெஞ்சங்களை நெகிழ வைத்தனர் அவரது ஜூனியர் வழக்கறிஞர்கள் பெல்மாண்ட் சாரின் சேவையையும் திறமையையும், எளிமையையும் பாராட்டி வந்த மக்களுக்கு எடுத்துரைத்து அவரை கல்லரைக்குள் வைத்துவிட்டு திரும்பும் திசையில் நான் நின்று கொண்டிருந்தேன்.

அவரது பிரிவைத் தாங்காது மனம் புலம்பிக் கொண்டிருக்கும் வேளையில் என்னை கை நீட்டி அழைத்த அவரது ஜூனியர் வழக்கறிஞர் சுசீலா அவர்கள் டேய் சார் சென்றுவிட்டார் என்று, எங்களையெல்லாம் மறந்துவிடாதீர்கள். எங்களையும் அழையுங்கள், அலுவலகத்திற்கு வாருங்கள், தொடர்பில் இருங்கள் என்று கூறிய அந்த கனிவான வார்த்தைகள் இன்னும் எங்கள் இதயங்களை கணக்க செய்துவிட்டது.

இப்படி ஓர் நல்லுள்ளத்தோடு பழகி, அதே நல்லுள்ளம் கொண்ட ஜூனியர்களையும் பொதுப் பணியில் ஈடுபடும் எங்களுக்கு அமைத் துத் தந்த பெல்மாண்ட் சார் இஸ்லாத்தின் மீதும் நல்ல பார்வையை கொண்டும், இறை நாட்டம் ஹிதாயத் பெறாமல் சென்று விட்டார் என்பது எங்களுக்கு கூடுதல் வருத்தத்தையும் தருகிறது. அவரது இழப்பு சமுதாய களப்பணியாளர்களுக்கு பேரிழப்புதான்.

அல்லாஹ்விடம் நெருங்கி பொதுப் பணி, களப்பணி ஆற்றுபவர்களுக்கு அல்லாஹ் யாரேனும் கொண்டு உதவிபுரிவான் என்பது அவனின் கூற்று. அது நாம் கடந்து வந்த வரலாற்று பாதைகள் முழுக்க சந்தித்ததுண்டு. அங்ஙனமே ஜூனியர் வழக்கறிஞர் சுசீலா அவர்கள் கூறியது போல் எங்கள் சமூக சேவைகளில் ஏற்படும் துயரங்களுக்கு வழக்கறிஞர் பெல்மாண்ட் சார் இடத்தில் அவர்களது ஜூனியர்களின் மூலம் இன்ஷா அல்லாஹ் நாங்கள் பலன் பெற்றுக் கொள்வோம் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. பெல்மாண்ட் சார் ஏற்படுத்தித் தந்த அந்த வழக்கறிஞர்கள் நட்பு என்றும் தொடரும். பெல்மாண்ட் சார் அவர்களின் பார்வையில் அவர்களின் ஜூனியர்களின் நட்பும், வழக்காடும் திறமைகளையும், சிறப்பான உபசரணையோடும் அல்லாஹ் தொடர அருள்புரிவானாக!

– அப்துல் பாசித்



கொண்டிருக்கிறேன் என்றார். – துஆ செய்கின்றேன் எனச் சொல்லிவிட்டு, பேச்சை முடித்துக் கொண்டேன். 13% இருக்க வேண்டிய ஹீமோகுளோபின் 5% இருந்தால் எப்படி? என அங்காலாயித்துக் கொண்டிருந்தேன். எனினும் அவரது தடையையும் மீறி அவருடைய மரணத்திற்கு இரண்டு நாளைக்கு முன் என்னைத் தேற்றிக்கொள்ள தொலைபேசியில் அழைத்தேன். பதில் இல்லை. கைப்பேசியும் அப்படியே!

என்ன ஆனது எனத் தெரியவில்லையே... அல்லாஹ்வின் அருளால் எல்லாம் நல்லது நடக்கும் என்று இருந்தேன்.

**இறைவனிடமிருந்து வந்தோம்... அவனிடமே மீளுவோம்...**

## இஸ்லாமியச் சிந்தனையாளர்

# டாக்டர் முஹம்மத் ரஃபஅத்

**2021, ஜனவரி-8, இரவு 10.30 மணிக்கு அல்லாஹ்வை அடைந்தார்கள்.**

ஓர் சிறந்த ஆன்மிக வழிகாட்டி, இந்திய மாணவர் இஸ்லாமிய இயக்கத்தின் அகில இந்திய தலைவராக இருந்தவர்களுள் ஒருவர்.

கொள்கை ரீதியாக வேகமாக வாசிப்பவர். எப்போதும் எந்தப் பிரச்சனையிலும் தெளிவாக வழி காட்டுபவர். கொள்கை அளவில் உறுதியாக நிற்பவர். ஓர் வழி காட்டியாகவே எடுத்துக் கொண்டேன் அவரை எனலாம்.

மாதமிருமுறை அல்லது ஒருமுறை பல விஷயங்களையும், தொலைபேசியில்–இப்போது அலைபேசியில் விவாதிப்போம். அதிகமாக பழைய தொலைபேசியில் Land Phone - இல் பேசுவதையே விரும்புவார்.

அண்மையில்தான், கைப்பேசிக்கு வந்தார்.

கடந்த சில மாதங்களாக உடல்நிலை சரி இல்லை என்றும், தொலைபேசியை அல்லது கைப்பேசியை எடுக்கவில்லை என்றார். வருத்தப் பட வேண்டாம். துஆ செய் என்றும் சொன்னார்.

"ஹீமோகுளோபின்" 5% தான் இருக்கின்றது. நான் அதை அதிகரிக்க முயற்சிகள் எடுத்துக்

இந்திய மாணவர் இஸ்லாமிய இயக்கத்திலிருந்து ஓய்வு பெற்ற பின், எங்கள் எதிர்கால இஸ்லாமியப் பணிகளை முடிவு செய்யும் வகையில், டாக்டர் ரஃபஅத் அவர்களை சந்திப்பது என முடிவு செய்திருந்தோம். நான் (MGM) கொடிக்கால் ஷேஹ் அப்துல்லாஹ், தம்பி நீடூர் மன்சூர் ஆகியோர்.

இந்நிலையில் நாக்பூர், (மராட்டிய மாநிலம்) மவுண்ட் அபூ எனும் இடத்தில் இஸ்லாமியக் கருத்தரங்கம் ஒன்று நடந்தது. அதில், கலந்துகொள்ள எங்களுக்கும் அழைப்பு வந்தது. சென்றோம். அங்கே டாக்டர் ரஃபஅத் அவர்களும் வந்திருந்தார்கள்.

கருத்தரங்கம் முடிந்த பின், மூன்று நாட்கள் அங்கே தங்கியிருந்து எங்கள் பணிகளை முடிவு செய்தோம். தாஃவா களத்தில் எங்கள் பயணத்தைத் தொடங்கினோம். தொடர்ந்து வருகின்றோம் இன்றளவும். அல்ஹம்துலில்லாஹ்.

ஆனால், 9–1–2021 காலை 11 மணியளவில் தம்பி பேராசிரியர் M.H. ஜவாஹிருல்லாஹ் Ex. MLA தொலைபேசியில் டாக்டர் ரஃபஅத் அவர்கள் அல்லாஹ்வை சென்றடைந்த செய்தியைச் சென்னார்கள். அதிர்ச்சியாக இருந்தது.

கொள்கை தெளிவுகளைத்தந்து கொண்டிருந்ததால், தமிழக இளைஞர்களுக்கு அவரைக் கொண்டு பல நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தேன். டாக்டர் ரஃபஅத் அவர்களை உரையாற்றிட அழைத்திருக்கின்றேன். 30 ஆண்டுகளில் இது தொடர்ந்திருக்கின்றது.

இஸ்லாத்தைப் பற்றிய எவ்வளவு ஆழமான அறிவைக் கொண்டவராக இருந்தாரோ அதே அளவு ஆழமான அறிவைக் கொண்டவராக இருந்தார் ஜாஹிலிய்யா என்ற அறியாமையைப் பற்றி.

இதனால் எந்த ஒரு தலைப்பிலும் கேள்வி பதில்கள் நீண்ட தெளிவான உரைகளை நிகழ்த்திடுவார். அவருடைய உரைக்குப் பின் கேள்வி நேரங்கள் இல்லாமலிருந்ததில்லை.

கேள்வியால்அகலும்மடமைஎன்பதுஅவரது கேள்வி பதில் பகுதிகளுக்குத்தான். அதிகமாகப் பொருந்தும். எவ்வளவு சிக்கலான கேள்விக்கும் ஒன்றை பதில், அதற்குப் பின் அந்த விவகாரத்தில் நாம் எங்கேயும் விளக்கம் பெற்றிடத் தேவை இருக்காது.

தமிழகத்தில் தொடர்ந்து இஸ்லாமிய இயக்கத்தின் தாக்கத்தை நிலைபெற செய்திருந்தால், அவரை அடிக்கடி தமிழகம் வரவழைத்திருக்கின்றேன்.

கன்னியாக்குமரியில் ஓர் நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருந்த காலக்கட்டத்தில், "பஜ்ர், மக்ஃரிப்" ஆகிய தொழுகைகளை கடற்கரையிலேயே நடத்தினார்.

நான், அண்ணன் கொடிக்கால், நீடூர் மன்சூர் ஆகியோர், தாஃவா (எ) இஸ்லாத்தின் பக்கம் மக்களை அழைக்கும் பணியைச் செய்து கொண்டிருந்த கட்டத்தில் ஒரு மூன்று நாள் பயிலரங்கத்தை திருப்பனந்தாளில் ஏற்பாடு செய்திருந்தோம். அதில் 33 பேர் கலந்து கொண்டார்கள். அதுவே பிற்றை நாள்களில் 2001–இல் MNP மனித நீதி பாசறையாக உருப்பெற்றது.

## திருப்பனந்தாள் நிகழ்ச்சி

திருப்பனந்தாளில் நடைபெற்ற மூன்று நாள் பயிலரங்கத்தில் டாக்டர் ரஃபஅத் அவர்களும் அலிகர் பல்கலைக்கழகத்தின் டாக்டர் யூசுஃப் அமின் அவர்களும் கலந்துகொண்டார்கள்.

மூன்றாவது நாள் முடிவில் "திருவாய்ப்பாடி" என்ற கிராமத்தில் தலீத் மக்களும் சமூக விடுதலையும் என்ற தாஃவா நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருந்தோம். இதில் மர்ஹூம் T.M. உமர் ஃபாரூக் அப்போது T.M. மணியும் அண்ணன் கொடிக்கால் ஷேஹ் அப்துல்லாஹ் அவர்களும் சிறப்பாகக் களப்பணியாற்றி இருந்தார்கள்.

ஒருநாள் முழுக்க நடந்த நிகழ்ச்சியில் பெருவாரியானகிராமமக்கள்கலந்துகொண்டார்கள்..

நிகழ்ச்சியின் முடிவில், இது Gross Root மிகவும் அடித்தளத்து மக்களுக்கு இஸ்லாத்தைக் கொண்டு செல்லும் நிகழ்ச்சியாக இருக்கின்றது. இதனை தொடருங்கள். நிரம்ப பயன்களைத் தரும் நிகழ்ச்சி இது என என்னைப் பாராட்டினார்கள் டாக்டர் ரஃபஅத் அவர்களும், டாக்டர் யூசுஃப் அமீன் அவர்களும்

அதன்பின் அந்தப் பகுதியில் எங்கள் தாஃவா பணிகள் நிலை கொண்டன. காலப்போக்கில், இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டவர்களுக்கான முதல் கல்விக் கூடமாம், 'அறிவகத்தை' திருப்பனந்தாள் "அக்பர் தெருவில்" தொடங்கினோம். டாக்டர்ரஃபஅத் அவர்கள் அந்த அறிவகத்திலும் பலமுறை வந்து உரையாற்றினார்கள்.

அதேநேரத்தில் கொடிக்கால் ஆசிரியர் ஹிதாயத்துல்லாஹ் ஆகியோரின் முயற்சியின் கீழ் இன்றைக்கு தேனி மாவட்டத்திலும் எங்கள் பணிகள் இன்னொரு பெரும் அத்தியாயம் பிறந்தது.

அந்தப் பகுதிக்கும் டெல்லியிலிருந்து டாக்டர் ரஃபஅத் அவர்களை வரவழைத்தோம். அங்கே உத்தமபாளையம் அக்பர் லாஜிட்–ஐ மையமாகக் கொண்டு பணிகளை தொடங்கினோம். அங்கேயும் ஓர் தர்பியாவை டாக்டர் ராஃபத் அவர்கள் வந்து நடத்தினார்கள். மூன்று நாட்கள் எங்களோடு இருந்தார்கள்.

இதில் அந்தப் பகுதியைச் சார்ந்த ஆசிரியர் ஹிதாயத்துல்லாஹ் அவர்கள் முழுமையாகக்

கலந்துகொண்டார்கள். ஹிதாயத்துல்லாஹ் கொடிக்கால் சந்திப்புகளும், நடந்து முடிந் திருந்தபோது, 'போடி' கலவரம், போடி விலக்குத் துப்பாக்கி சூடு, ஆகியவை எங்கள் கவனங்களை அந்த அமுக்கப்பட்ட அடித்து நொறுக்கப்பட்ட மக்களின் பக்கம் ஈர்த்தது.

அந்தப் பகுதியில் ஹிதாயத்துல்லாஹ் அவர்களை மையமாகக் கொண்டு பணிகள் தொடர்ந்தன. போடி நூர்தீன் களத்தில் நின்று சிறப்பாகப் பணியாற்றினார்கள்.

அங்கு நாங்கள் இஸ்லாத்தை அறிமுகம் செய்யாத கிராமங்களே இல்லை என்ற அளவுக்கு இஸ்லாத்தின் பக்கம் மக்களை அழைக்கும் பணிகள் விரிவடைந்தன.

காலப்போக்கில் திருப்பனந்தாளில் மூடப் பட்ட அறிவகம், தேனி மாவட்டம், முத்துதேவன் பட்டியில் திறக்கப்பட்டது.

இவற்றையெல்லாம் ஊன்று கவனித்துக் கொண்டிருந்த டாக்டர் ரஃபஅத் அவர்கள், அவ்வப்போது பாராட்டுகளையும், வழிகாட்டு தல்களையும் வழங்கினார்.

மனித நீதி பாசறை என்றொரு அமைப்பை நான் நிறுவி, நடத்தி வந்த நாட்களில் பிரிதொரு பயிலரங்கம், இல்லை அதன் தொடக்கநாட்களில் மாநாடு எனப் போற்றப்பட்டது. அதனை வண்டலூரில் நடத்திய போது, அங்கேயும் கஷ்மீரின் நிலைகளை விளக்கி உரையாற்றின ார்கள் டாக்டர் ரஃபஅத் அவர்கள்.

அப்போதெல்லாம் அசருக்குப் பின், 9 மணி வரை நிகழ்ச்சிகளை நடத்துவோம். 9 மணிக்குப் பின், மஃரிப்–ஐயும் இஷாவையும் இணைத்தும், சுருக்கியும் தொழுவோம். இதனை எதிர்த்தார். நீங்களெல்லாம், ஓரிடத்தில் தனித்திருந்து இஸ்லாத்தை, நிலை நாட்டுவதைப் பற்றி விவாதித்துக் கொண்டிருக்கின்றீர்கள். இதில் என்ன இணைத்தும் சுருக்கியும்?

தொழுகையை குறித்த நேரத்தில் நிறைவேற்று வதுதான், செயல் மழவர்களுக்கு வழங்கும் சிறந்த பயிற்சி. அதனை வழங்குங்கள். எப்போ தும் இதனை கடைப்பிடியுங்கள். பயணங்களில் போது மட்டுமே இணைத்தும் சுருக்கியும் தொழுங்கள் என்பார்.

இதனைத் தொடர்ந்து MNP என்ற மனித நீதி பாசறையின், பொதுக்கூட்டங்களில் கூட நாங்கள் தொழுகைக்கு இடைவேளைவிட்டே கூட்டங்களை நடத்தும் பழக்கத்திற்கு வந்தோம்.

சில சகோதர சமுதாயத்தைச் சார்ந்த பேச்சா ளர்கள், கூட்டம் பெருக்கெடுத்து களைகட்டி வரும் போது கூட்டத்தை கலைத்து வீட்டீர்களே என ஆதங்கப்படுவார்கள். ஆனால் தொழுகை முடிந்தவுடன் அதே கூட்டம், சில நேரங்களில் அதைவிட இன்னும் அதிகமான மக்கள் வந்து அமருவார்கள்.

இரண்டொரு முறை இதனைப் பார்த்த விடு தலை இராஜேந்திரன் அவர்கள், இவர்களுடைய கூட்டங்களில்தாம், காத்திருந்து கருத்துக்களைக் கேட்பவர்களைப் பார்த்திருக்கின்றேன் எனப் பாராட்டினார்கள். (அல்ஹம்துலில்லாஹ்)

அவர்களுடைய செயல் திட்டங்களுள் தலை யாயது இஸ்லாத்தின் அருமைப் பெருமைகளை எழுத்துப்பேச்சு, நடைமுறை திட்டங்கள் வழி வலுப்பெற செய்திட வேண்டும். மக்கள் மனதில் இஸ்லாத்தை நிரந்தரமாக இருக்கச் செய்திட வேண்டும். அதன்மூலம் அவர்கள் இஸ்லாத்தை ஏற்றிட வேண்டும். அதன்வழி இஸ்லாத்தை நிலை நாட்ட வேண்டும்.

## தஸ்கியா

அவருடைய செயல்திட்டங்களுள் ஒன்று தொடர்ந்து செயல்வீரர்களுக்குத் 'தஸ்கியா'வை வழங்கிட வேண்டும் என்பது. அதனைத் தொடர்ந்து வழங்கிக் கொண்டிருந்தபோது சிற ந்த பல பயன்கள் விளைந்தது.

தமிழகத்தில் எதற்கும் துணிந்த, யாராலும் ஒடுக்க முடியாத ஒர் அமைப்பாக மனித நீதிப் பாசறை திகழ்ந்தது.

இதனை பல உளவுத்துறை அதிகாரிகள், என்னிடம் நேரில் சொல்லி இருக்கின்றார்கள். பல பத்திரிகைகளும் எழுதி இருக்கின்றன.

இந்தப் பாசறை, பல நல்ல எழுத்தாளர்களை யும், கல்வியாளர்களையும், வழக்கறிஞர்களையும் உருவாக்கித் தந்தது.

இந்த "தஸ்கியா" என்ற "சொல்லும்" அதிகமா கப் புழக்கத்தில் வந்தது ; தமது தமிழக முஸ்லிம் களிடையே!

மனித நீதி பாசறையின் நெருக்கடியான காலக்கட்டத்தில் என்னை அழைத்து ஆறுதல் சொல்வார்கள். சில இந்தப் பிரச்சனையை இப்படிக் கையாளுங்கள் என்பார்கள்.

இந்த நெருக்கடிகளில் பல 'Media Hype' "ஊடகங்களின் மிகைப்படுத்துதல்" அல்லது உருவாக்கம்தான். இப்படி நெருக்கடியான நாட்களில் ஒருநாள் டாக்டர் ரஃபாத் அவர்கள் என் வீட்டிற்கு வந்தார்கள். நான் சற்றும் எதிர் பார்க்கவில்லை. உன்னை திடீர் விஜயம் என்றேன்? திடீர் அல்ல திட்டமிட்ட ஒன்றுதான். ஆனால், என்னை சந்திப்பதற்குத்தான் தடைகள் பல சொன்னார்கள். சந்திக்கவே வேண்டாம் என்றே சொன்னார்கள். நான்தான் அவர் இருக்கும் இடத்தைக் காட்டுங்கள என்றேன். கொண்டுவந்து விட்டார்கள் என்றார். இரண்டு பேரும் பக்கத்திலுள்ள பள்ளிவாசலுக்குப் போவோம் என்றார். பேசினேன். நீங்கள் என்ன செய்து கொண்டிருக்கின்றீர்கள், என்றார்கள். நான் எனது பணிகள் பற்றிச் சொன்னேன். நன்றாகச் செய் என்றார். ரெயில்வே வேலை பறிபோனதை சொன்னேன். அதுமுதல் ஷஹாதத் என்றார். இப்போது முழுநேரமும் கிடைத்தது. என்றேன். சிரித்தார்.

இன்னும் சில பழைய இந்திய மாணவர் இஸ்லாமிய இயக்கத்தவர்களைச் சார்ந்தவர்களைப் பற்றிக் கேட்டார்கள். வாய்ப்பிருந்தால் அவர்களையும் சந்திப்பேன் என்றார்கள்.

அது தமிழ்நாட்டுக்கு வெளியே உள்ள சில நெருக்கமான சகோதரர்கள் கூட தூதர்களை அனுப்பி, எங்களுக்கும் உங்களுக்கும் தொடர்பில்லை எனச்சொல்லி தொடர்பை துண்டிக்கத் துணிந்த காலம் அது.

அடிக்கடி சென்னை வந்து நமது செயல்வீரர்களுக்கு 'தர்பியா' மற்றும் தஸ்கியா வகுப்புகளை நடத்திட வேண்டும் என்றேன். என்னுடைய நிகழ்ச்சிகள் ஆறு மாதத்திற்கு முன் முடிவாகி விடுகின்றன. ஆகவே, என்னிடத்தில் 6 மாதங்களுக்கு முன் நாள் வாங்கிட வேண்டும் என்றார்.

அப்போதிருந்த பரபரப்பான சூழலில், இது சாத்தியமில்லை என்றானது. ஏனெனில் மனித நீதி பாசறையைப் பற்றி தினமும் ஓர் அவதூறு பத்திரிகைகளில் பத்திப் பத்தியாக வந்து கொண்டிருந்த காலம். அதனால் தினமும் நமது கவனம் அதிலிருந்து கொண்டிருக்க வேண்டிய காலம். 26/11 – 2006ல் ஓர் விபத்தில்........?

சூதும் சூழ்ச்சியும் துரோகமும் மனித நீதி பாசறையை கவ்விக்கொண்டது. நான் அப்பாசறையிலிருந்து வெளியேறினேன்.

தாஃவாவில் அதிமாகக் கவனம் செலுத்தினேன். 'ஜாதி ஒழிந்தது' நூலை ஆங்கிலத்தில் மொழிப் பெயர்த்து, பெங்களூர் – டெல்லி – ஆகிய இடங்களில் வெளியிட்டேன். டெல்லி நிகழ்ச்சிக்கு (2010) ஏற்பாடு செய்திட அனைத்து வகையிலும் டாக்டர் 'ரஃபஅத்' அவர்கள் உதவியாக இருந்தார்கள்.

நான் ஒரு 500 அழைப்பிதழை அச்சிட்டால் போதும் என்றேன். அதையும் கூட உங்கள் மூலமாகத்தான் விநியோகிக்க வேண்டும் என்றேன். இல்லை 1000 அழைப்பிதழை அச்சிடு. நான் இங்குள்ள நண்பர்கள் வழி அவற்றை விநியோகித்து விடுவேன் என்றார்கள். அத்தோடு அரங்கம் நிறைந்திட வேண்டும் என்றால் குறையாமல் 1000 அழைப்பிதழை நாம் கண்டிப்பாக விநியோகித்தாக வேண்டும் என்றார். அவருடைய ஆலோசனையின்படி 1000 அழைப்பிதழை அச்சிட்டு விநியோகித்தோம். 600 அழைப்பிதழை அவர்களே விநியோகித்தார்கள்.

## காலிப் அகாடமி :

டெல்லியில் 'காலிப் அகாடமி' என்ற அரங்கில்தாம் வெளியிட தீர்மானித்தோம். காலிப் அகாடமியை புக் பண்ணிட டெல்லியிலுள்ள ஒரு முகவரி தேவை. அத்தோடு தெரிந்தவர் – அதாவது காலிப் அகாடமியை நன்றாகத் தெறிந்த ஒருவருடைய பரிந்துரை தேவை. இரண்டையுமே டாக்டர் ரஃபஅத் அவர்கள் ஏற்றுக் கொண்டார்கள்.

என்னை அழைத்துக்கொண்டு காலிப் அகாடமியின் செயலாளர் வீட்டுக்குச் சென்றார். டாக்டர் ரஃபஅத் அவர்களுக்கும் காலிப் அகாடமியின் செயலாளர் கொடுத்த கண்ணியத்தைப் பார்த்தவுடன் நமது நிகழ்ச்சிக்கு அரங்கம் கிடைப்பதில் எந்தச் சிரமும் இருக்காது என ஊர்ஜிதம் செய்து கொண்டேன்.

டாக்டர் ரஃபஅத் அவர்கள் வைத்திருந்த

மரியாதையும், மதிப்பும் அடுத்தடுத்த நிகழ்வு களில் தெளிவாயிற்று.

அரங்கவாடகையைப் பற்றி பேசும்போது ஒரு பெரிய தொகையைச் சொன்னார் அகாடமியின் செயலாளர். நான் திணறிவிட்டேன். டாக்டர் என் நண்பரிடம் அளவு தொகை இருக்காது. குறைக்க முடியுமா? எனக் கேட்டார்கள் டாக்டர் ரஃபஅத் அவர்கள். இது தாஃவா நிகழ்ச்சி என்பதையும் சொன்னார்கள். உடனேயே அகாடமியின் செயலாளர் தனது தொலைபேசியை சுழற்றி னார். பேசியவர்களிடமெல்லாம் டாக்டர் ரஃபஅத் அவர்கள் வந்திருப்பதைச்சொன்னார். பின்னர் ஒரேயடியாக இறங்கி ஏர் கண்டிஷன் கட்டணம், எலக்ட்ரிக் கட்டணம், துப்புறவுக் கட்டணம் இவற்றை மட்டும் செலுத்துங்கள் போதும் என்றார்கள்.

நீங்கள், அரங்கத்தை 'புக்' பண்ணி வீட்டீர்கள் என்பதற்காக ரூ. 2500 /– ஐ நாளை அகாடமியின் அலுவலகத்தில் செலுத்தி விடுங்கள் என்றார்கள்.

டாக்டர் ரஃபஅத் அவர்கள் நான் அதை கவனித்துக் கொள்கின்றேன். நீ மற்ற வேலைகளை கவனி என்றார்கள். ரூபாய் 2500, எடுத்துக் கொடுத்தேன். எனக்கும் இதில் பங்குண்டு. இதனை நான் செலுத்துகின்றேன் என்றார்கள்.

உங்களுடைய நட்பால் அகாடமியின் அரங் கம் மிகவும் குறைந்த கட்டணத்தில் கிடைத் திருக்கின்றது அதுவே போதும். கட்டணத்தை தயவு செய்து என்னிடமிருந்து பெற்றுக் கொள் ளுங்கள் என அழுத்தம் கொடுத்தேன். அதன் பின்னர் பெற்றுக் கொண்டார்.

நூல் வெளியிட்டு விழா நெருங்கி வரும்போது டெல்லி சென்று, அழைப்பிதழ்களைக் கொடுக்கச் சென்றேன். காலிப் அகாடமி சென்று அழைப்பி தழைக் கொடுத்தேன். அவர் அருகிலுள்ள காவல் நிலையத்திலும் ஒன்றைக் கொடுத்து, அனுமதிக்கு ஓர் கடிதமும் கொடுத்துவிடுங்கள் என்றார். அகா டமியின் செயலாளர். உடன் டாக்டர் ரஃபஅத் அவர்களும் வந்திருந்தார்கள்.

நான் அரங்க நிகழ்ச்சிகளுக்கு காவல்துறை யின் அனுமதி தேவையில்லை. ஆகவே அழைப் பிதழோ, கடிதமோ தந்திட மாட்டோம் என்றேன்.

நான் என் நிலைப்பாட்டில் உறுதியாக நின்ற தால், டாக்டர் ரஃபஅத் அவர்களுக்கு சற்று நெருடலாக இருந்திருக்கும். அது எனக்கு மிகவும் கஷ்டமாக இருந்தது.

சிக்கலை டாக்டர் ரஃபஅத் அவர்கள் மிகவும் எளிதாகத் தீர்த்து வைத்தார்கள். என்னிடமிருந்து இரண்டு அழைப்பிதழை எடுத்து காலிப் அகாடமியின் செயலாளரிடம் கொடுத்தார். அவரிடம் You do the needfull நீங்கள் தேவை யானதை செய்யுங்கள் எனக்கூறிவிட்டு, சலாம் சொல்லிப் புறப்பட்டார்கள்.

நீங்கள் இனி உங்கள் ஏற்பாடுகளைக் கவனியுங்கள் என்றார்கள்.

காலிப் அகாடமியின் செயலாளர் 'I will take care of' நான் கவனித்துக் கொள்கின்றேன் என்றார் கள். எனது தோளில் தட்டித் தந்து வழிவரை வந்து எங்களை வழி அனுப்பி வைத்தார்கள் காலிப் அகாடமியின் செயலாளர்.

நிகழ்ச்சிக்கு நிறைய காவல்துறையினர் பாதுகாப்பிற்கு வந்திருந்தனர். நிகழ்ச்சிகள் நன் றாக நடந்நன. நிறைவைத் தந்தன. அல்ஹம்து லில்லாஹ்.

## நிகழ்ச்சிக்கு முன்னர்

அரங்கம் நிரம்பி வழிந்தது. நன்றி சொல்லும் முகத்து காலிப் அகாடமி செயலாளரைச் சந்தித்தேன். அவரும் நிகழ்ச்சியை சிலாகித்துக் கூறினார். நான் அவர்களிடம், காவல்துறையிடம், அனுமதி கேட்டீர்களா? எனக் கேட்டேன். அவர்கள் "இல்லை ஒரு அழைப்பிதழ் மட்டும் கொடுத்தேன்." அதைத்தான் ரஃபஅத் அவர்கள் செய்யச் சொன்னார்கள் என்றார். அத்தோடு இந்தக் காலிப் அகாடமியில் ஏறத்தாழ எல்லா நாட்களிலும், நிகழ்ச்சிகள் நடக்கும். ஆதலால் நாங்கள் முன் கூட்டியே நிகழ்ச்சிகளைப் பற்றிய பட்டியல் ஒன்றை ; காவல்துறையிடம் கொடுத்து விடுவோம். அவர்கள், பாதுகாப்பு வழங்கிட வேண்டும், எனக் கருதுபவற்றிற்கு பாதுகாப்பு வழங்குவார்கள். சிலபல நிகழ்ச்சி களுக்கு அனுமதி வாங்கித்தான் ஆக வேண்டும் என்பார்கள். அதனால் நான் எல்லா நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்களிடமும், கடிதம் வாங்கிக் கொடுத்து விடுவேன் என்றார்கள். அதன்பின் நமது பணிகளைப் பற்றி விரிவாகக் கேட்டார்கள்.

இப்படி டெல்லியில் நிகழ்ச்சி நடத்திவிட்டு

வந்தேன்.

### உச்ச நீதிமன்றம்

எனது ரெயில்வே வேலையை காரணம் சொல்லாமல் குடியரசு பறித்தது பற்றிய வழக்கில், உச்ச நீதிமன்றம், என்னை நேரில் ஆஜராக சொன்னது. நேரில் சென்று எட்டு நிமிடம் பேசினேன். நீதிபதி கேஹர், அவர்கள், ஒரு வழக்கறிஞரை நியமியுங்கள் எனக்கூறி விட்டார். என்னிடம் அவ்வளவு பணமில்லை எனச் சொல்வதற்குள், நீதிபதி எழுந்துவிட்டார். என்னுடைய வழக்குதான் அன்றைய தினத்தில் கடைசி வழக்கு, நான் நீதிமன்றத்தில் நடந்ததை டாக்டர் ரஃபஅத் அவர்களிடம் சொன்னேன். இங்கே வழக்கறிஞர்கள், பலலட்சங்களைக் கேட்பார்கள். வேண்டாம், வழக்கை அப்படியே விட்டுவிட்டு, நீதிமன்றம் சொன்னதற்காக ஒரு வழக்கறிஞரை நாசுக்காக வை, என ஓர் வழக்கறிஞரை காட்டினார்.

இப்படி நாள் எல்லா நிலையும், ஆலோசனை கேட்கும் ஒருவராக அவர் இருந்தார். தொடர்ந்து தொலைபேசியில் பேசிக் கொண்டே இருந்தேன். கடந்த வருடம் நடந்த அறுவை சிகிச்சைக்குப் பின், மாதமொரு முறை அல்லது இரண்டு முறை பேசினேன். கடைசி உரையாடலை இந்தக் கட்டுரையின் தொடக்கத்தில் குறிப்பிட்டேன்.


தனிப்பட்ட முறையில், கவிக்கோவைப் போல் இவருடைய இழப்பும் பெரிய இழப்பு எனக்கு.

## டாக்டர் முஹம்மத் ரஃபஅத் வகித்த பொறுப்புகளும், ஆற்றிய பணிகளும்

டாக்டர் ரஃபஅத் அவர்கள், உத்திரப் பிரதேசம், மாவட்டத்தில் குர்ஜா Khurja in Bulanshahr District. இல் பிறந்தார்கள்.

அலிகர் முஸ்லிம் பல்கலைக்கழகத்தில் பௌதீகத்தில் M.Sc., முதுநிலைப் பட்டத்தைப் 1976–இல் முடித்தார். Ph.D., என்ற முனைவர் பட்டத்தை 1984–ல் MIT கான்பூரில் முடித்தார்.

1985–ல் ஜாமிய்யா மில்லிய பல்கலைக் கழகத்தில் பௌதீக விரிவுரையாளராக பணியில் சேர்ந்தார்கள். ஜுலை 31, 2020 –இல் பேராசிரியராக ஓய்வு பெற்றார். அப்போது அவர் அப்ளைடு அறிவியல், மற்று மனிதவியல் துறை தலைவராக இருந்தார்.



ஜாமியாவில் அவர் B.Tech., B.E., M.Sc., ஆகிய பட்டப்படிப்புகளுக்கு பாடம் நடத்தினார்கள்.

பல்வேறு அறிவியல் பட்டப் படிப்பிற்கும் பாடங்களை வடிவமைக்கும். பணியையும் மேற்கொண்டார். அத்தோடு MASS என்ற Muslim Association of Advancedment of science - என்ற முஸ்லிம் விஞ்ஞானிகளின் குழுமத்திலும் உறுப்பினராக இருந்தார்.

அதேபோல் IIIS என்ற நிறுவனத்தின் "Indian Institute of Islamic Students" இஸ்லாமியப் படிப்புகளுக்கான இந்திய நிறுவனத்தின் அறங்காவலர்களின் ஒருவர்.

ஜமாஅத் இஸ்லாமியின் பயிற்சி துறை என்ற ‘தர்பியா’ துறையின் செயலாளராகவும் இருந்தார்கள்.

ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் என்ற அமைப்பின் உயர் மட்டக் குழுவில் 1999 முதல் அவர் மரணிக்கும் வரை அதன் பல்வேறு மத்தியப் பொறுப்புகளிலுமிருந்தார்.

அதேபோல் ஜமாஅத்தே இஸ்லாமியின் ஆய்வு நிறுவனமான (CSR) சென்டர் ஃபார்

ஸ்டடி அண்டு ரிசர்ச்சு. Centre for Study and Research என்ற நிறுவனத்தின் அங்கத்தினராகவும் இருந்தார்.

இத்தோடு ஆங்கிலத்திலும், உருது மொழியிலும் சில நூல்களை எழுதியுள்ளார்.

பல உருது பத்திரிகைகளிலும், ஆங்கில பத்திரிகைகளிலும், கட்டுரைகளை எழுதியுள்ளார்.

அவரது மரணம் அறிவுத் தளத்தில் மிகப் பெரிய இழப்பு.

## படிப்பும் உழைப்பும்

ஒரு சாதாரணமாக காவல்துறையில் பணி புரியும் ஒருவரின் மகனாகப் பிறந்து, கடின உழைப்பு, படிப்பு, ஆராய்ச்சி என வளர்ந்து IIT கான்பூரில், Indian Institute of Technology இல் பௌதீகத்தில் தங்கப் பதக்கம் பெற்றவர்.

ஜாமியா மில்லியா இஸ்லாமியா பல்கலைக் கழகத்தில், பௌதீராக துறை தலைவராகப் பணியாற்றினார். பலமுறை அவருடைய துறை அலுவலகத்திலேயே அவரை சந்திருக்கின்றேன். அவ்வளவு பெரிய பதவியில் இவ்வளவு எளிமையானவரா? என எண்ணிடத் தோன்றிடும். எனக்குத் தெரிந்தவரை ஒரு சைக்கிளில்தான் கல்லூரிக்குச் செல்வார்.

தம்பி மன்சூர்அலீ அவரோடு பயணம் செய்ததை நினைவு கூறுகின்றார். அதில், பயணம் முழுவதும் எந்த உணவையும் வாங்கிச சாப்பிடுவதில்லை. கையில் எடுத்துச் செல்லும் உணவைத்தான் சாப்பிடுவார். பயணம் முடிந்த பின்புதான் எனக்கு உணவு வாங்கித் தந்தார் எனகின்றார்.

டாக்டர் ரஃபஅத் அவர்கள் பலமுறை எங்கள் அழைப்பை ஏற்று சென்னை வந்திருக்கின்றார். கையில் ஒரு தண்ணீர் ஜாடியுடன் வருவார். ஒரு பெட்டி மிகவும் அதன் பழமையை அதுவே பறைசாற்றும். ஒரு தண்ணீர் ஜாடி. இவற்றோடு ஆயிரக்கணக்கான கிலோ மீட்டர்களை பயணிப்பார்.

நானும் அவர் வீட்டில் உணவருந்தி இருக்கின்றேன். அவரும் சென்னையில் என் வீட்டில் உணவருந்தி இருக்கின்றார்.

- MGM




*அல்லாஹ்வின் அழகிய திருப்பெயரால்*

# வேர்கள் பதிப்பகத்தின் நூல்கள்

| | | |
|---|---|---|
| 1. | சிறையில் எனது நாட்கள் - ஜெய்னப் அல் கஸ்ஸாலி, தமிழில் - மு. குலாம் முஹம்மத் - பக்கம் : 212 | ரூ. 90.00 |
| 2. | ஆஃப்கானிஸ்தான் முஜாஹித்களின் தியாக வரலாறு - மு. குலாம் முஹம்மது | ரூ. 100.00 |
| 3. | சாதி ஒழிந்தது - டி.எம். மணி, ஐந்தாம் பதிப்பு - பக்கம் 132 | ரூ. 50.00 |
| 4. | End of Casteism T.M. Mani பக்கம் -134 | ரூ. 50.00 |
| 5. | அஹமதாபாத் குண்டுவெடிப்புகள் - மு. குலாம் முஹம்மது, பக்கம் -48 | ரூ. 10.00 |
| 6. | டெல்லி குண்டுவெடிப்புகள் - மு. குலாம் முஹம்மது, பக்கம் - 48 | ரூ. 10.00 |
| 7. | நாடாளுமன்ற தாக்குதல் வெளிச்சத்திற்கு வந்த உண்மைகள் - விரிவாக்கப்பட்ட பதிப்பு - மு. குலாம் முஹம்மத் | ரூ. 60.00 |
| 8. | மால்கம் X - மு. குலாம் முஹம்மது, பக்கம் -231 | ரூ. 80.00 |
| 9. | தீண்டாமையை கற்பிக்கும் கடவுளை மாற்றுவோம், டி.எம். மணி, பக்கம் -31 | ரூ. 20.00 |
| 10. | செந்தமிழ்நாட்டுச் சேரிகள்- டி.எம். மணி, பக்கம்:94 | ரூ. 40.00 |
| 11. | கர்கரேயை கொலை செய்தது யார்? பக்கம் 453 | ரூ. 250.00 |
| 12. | சிந்திப்பீர் செயல்படுவீர், நா. கோதண்டபாணி, பக்கம் 47 | ரூ. 15.00 |
| 13. | ஒரு நீதிபதியின் விடுதலை முழக்கம், ப. கோபால கிருஷ்ணன், பக்கம்-84 | ரூ. 40.00 |
| 14. | சாதி ஒழிந்தது- ஹிந்தி - டி.எம். மணி, பக்கம் - 148 | ரூ. 50.00 |
| 15. | நாம் பிரிந்து விடவேண்டாம், பேராசிரியர் கா.மு. இல்யாஸ் ரியாஜி, பக்கம்-292 | ரூ. 175.00 |
| 16. | தாலிபானின் பிடியில், மு. குலாம் முஹம்மத், பக்கம் - 202 | ரூ. 110.00 |
| 17. | தீண்டாமைக்குத் தீர்வு | ரூ. 30.00 |
| 18. | பாலஸ்தீன முஸ்லிம்கள் அகதிகளான வரலாறு, மு. குலாம் முஹம்மத் பக்கம்-163 | ரூ. 110.00 |
| 19. | பாபரி மஸ்ஜித் அடிப்படை தகவல்கள், மு. குலாம் மஹம்மத், பக்கம் -143 | ரூ. 90.00 |
| 20. | இஸ்லாமிய நாகரிகம் - முஸ்தஃபா அல் சிபாய், தமிழில் : மு. குலாம் முஹம்மத், பக்கம் - 206 | ரூ. 130.00 |
| 21. | கஷ்மீரின் பாதி விதவைகள், மு. குலாம் முஹம்மத், பக்கம் - 140 | ரூ. 70.00 |
| 22. | எது முதலில்? டாக்டர் யூசுஃப் அல் கர்ளாவீ, தமிழில் கா.மு. இல்யாஸ் ரியாஜி | ரூ. 50.00 |
| 23. | சாதி ஒழிந்தது - கன்னடம், | ரூ. 50.00 |
| 24. | அண்ணல் அம்பேத்கரின் மதமாற்றம் பின்னணி என்ன? டி.எம். உமர் ஃபாரூக் | ரூ. 20.00 |
| 25. | கசாப்-ஐ இரகசியமாகத் தூக்கிலிட்டது ஏன்? மு. குலாம் முஹம்மத் பக்கம்:48 | ரூ. 30.00 |
| 26. | முஹம்மத் (ஸல்) அவர்கள் ஒரு சகாப்தம் - செய்யித் குதுப், தமிழில் : மு. குலாம் முஹம்மத், பக்கம் 30 | ரூ. 15.00 |
| 27. | இஸ்லாமும் இதர பொருளாதார கொள்கைகளும், பக்கம் - 120 | ரூ. 50.00 |
| 28. | இஸ்லாம் வழங்கும் தண்டனைகள் | ரூ. 40.00 |
| 29. | இஸ்லாமும் விஞ்ஞானமும்- பக்கம் :48 | ரூ. 30.00 |
| 30. | இஸ்லாம் அடிமைத்தனத்தை அங்கீகரித்ததா? | ரூ. 50.00 |
| 31. | இஸ்லாமும் பெண்களும் - பக்கம் : 112 | ரூ. 60.00 |
| 32. | இஸ்லாம் இன்றைய கொள்கைகளை வெல்லுமா? பக்கம் : 84 | ரூ. 70.00 |
| 33. | தேசப்பிரிவினைக்கு யார் காரணம்? - விரிவாக்கப்பட்ட பதிப்பு - மு. குலாம் முஹம்மத் | ரூ. 30.00 |
| 34. | திருக்குர் ஆன் கூறும் பொறுமை - டாக்டர் யூசுஃப் அல் கர்ளாவி, தமிழில் : கா.மு. இல்யாஸ் ரியாஜி | ரூ. 80.00 |
| 35. | 26/11 - விசாரணை - நீதித்துறையும் மயங்கியது ஏன்? | ரூ. 220.00 |
| 36. | ஒரு தலித் போராளியின் வாழ்வும், அவர் காட்டிய வழியும் - அ. மார்க்ஸ் | ரூ. 20.00 |

37. முஸ்லிம்களை பூண்டோடு ஒழிக்கத் திட்டம்-
வி.டி. இராஜசேகர், தமிழில் : மு. குலாம் முஹம்மத் - பக்கம் : 16 ரூ. 10.00

38. நாடார் பெருங்குடியினர் ஏன் மதம் மாறினார்கள்? -
திரு. லஜபதிராய், மூத்த வழக்கறிஞர் - பக்கம் :8 ரூ. 10.00

39. குண்டு வெடிப்புகள், யாரால், யாரால்? -
சுவாமி அசிமானந்தாவின் ஒப்புதல் வாக்குமூலம் - அபூ. அஃப்ரஹ் - பக்கம் : 36 ரூ. 25.00

40. இந்து ராஷ்டிராவின் சிற்பி புரோகித்-இன் லேப்டாப்பில் இருந்ததென்ன? பக்கம்: 27 ரூ. 20.00

41. கறுப்பாயி என்கின்ற நூர்ஜஹான். கதை ஆசிரியர் அன்வர் பாலசிங்கத்துடன் நேர்முகம் ரூ.25.00

42. கூரியூர் ஜின்னா ஷஹீத் - மு. குலாம் முஹம்மத், பக்கம் : 84 ரூ. 60.00

43. முஸ்லிம்களும் ஒடுக்கப்பட்டோரும், பக்கம் 16 ரூ. 20.00

44. இந்தியாவின் ஒரே தீவிரவாத அமைப்பு, எஸ்.எம். முஷ்ரிப், IPS, பக்கம் : 64 ரூ. 30.00

45. சுதந்திர இந்தியாவின் முதல் தீவிரவாதம், காந்திஜி கொலை ஏன்? எப்படி? பக்கம் : 40 ரூ. 30.00

## எமது விற்பனையில். . .

01. கோவை கலவரத்தில் எனது சாட்சியம்-
A.V. அப்துல் நாசர், Ex. M.L.A., எழுத்தாக்கம் : பழனி ஷஹான் ரூ. 100.00

02. மரிஜாப்பி - சி.பி.எம். அரசின் தலீத் படுகொலைகள்-
ராஸ் மாலிக், தமிழில் : இனியன் இளங்கோ, தலித் முரசு ரூ. 100.00

03. குஜராத் கோப்புகள் - மறைக்கப்பட்ட கோர வடிவங்கள் -
ரானா அயூப், தமிழில் : ச. வீரமணி, பாரதி புத்தகாலயம் ரூ. 170.00

## BOOKS IN ENGLISH

01. END OF CASTEISM - T.M. Umar Farooq,
English Rendering : M. Gulam Mohammed, Vergal Pathippagam Rs. 50.00

02. THE GREAT BETRAYAL - Elyass Davidson, By Pharos Media Rs. 695.00

03. MUHAMMED THE PROPHET FOR OUR TIME - Karen Armstrong Rs. 325.00

04. KAFKA LAND - PREJUDICE, LAW AND COUNTER TERRORISM - Manisha Sethi Rs. 350.00

05. WHO KILLED KARKARE -
The Real face of Terrorism in India - S.M. Mushrif, IPS, 5th Edition Rs. 300.00

06. 26/11 - PROBE WAY JUDICIARY ALSO FAILED - S.M. Mushrif Rs. 275.00

07. ASSAM'S DOUBTFUL CITIZENS, FACT OR FICTION - Kamaluddin Ahamed Rs. 60.00

08. MUSLIMS AGAINST PARTITION OF INDIA - Shamsul Islam , Pharos Media Rs. 280.00

09. PANDID RAMPRASAD BISMI, ASHFAQULLAH KHAN (EPITOMS OF HINDU MUSLIM UNITY)
- Syed Naseer Ahamed Rs. 25.00

10. IMAGE AND SUBSTANCE - MODI'S FIRST YEAR OF OFFICE - Nilofar Suhrawardy Rs. 150.00

## BOOKS IN HINDI - VERGAL PATHIPPAGAM

01. ஜாதி ஒழிந்தது

## BOOKS IN KANNADA - VERGAL PATHIPPAGAM

01. ஜாதி ஒழிந்தது - டி.எம். உமர் பாரூக் ரூ. 50.00

02. நீயும் புறப்படு இஸ்லாத்தை நோக்கி - கொடிக்கால் ஷேஹ் அப்துல்லாஹ் ரூ. 30.00

## வேர்கள் பதிப்பகம்,

52/1, மண்ணடி தெரு, மண்ணடி, சென்னை - 600 001. தொடர்ப்புக்கு : 8148129887

வங்கி மூலம் பணம் செலுத்த விரும்புவோர்:
**DARUL ISLAM FOUNDATION TRUST,**
**CANARA BANK** Account 1287101017301
St. Mary's Road, R.A. Puram, Chennai - 600 028

Owned and published by **M. GULAM MOHAMED** from 52/1, Mannady Street, Mannady, Chennai - 600 001.
Editor M. Gulam Mohamed, Printed by **M. GULAM MOHAMED** at **CHENNAI OFSET PRINTERS,**
19/1, 21/2, Kitabath Khan Bhadhur Street, Chennai - 600 002.